Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් பெப்.09-15, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 498

## ஈராக் யுத்தத்துக்கு அமெரிக்கா வகுக்கும் வியூகம்!






## நம்பியார் அறிக்கை முறுகலடையும் பிணக்கு!



## புதுமை புரிவரா இளைய நட்சத்திரங்கள்?

## ஆன்மீகம்

### ஏற்றத்தாழ்வை இல்லாதுணர்த்திய இறைவன்



ஆதிசங்கரர் ஒரு தடவை காசிக்குச் சென்றார். பிரம்மத்தைத் தவிர வேறொன்றும் ஓரிடத்துமில்லை. உலகம் வெறும் மாயைத் தோற்றம். உயிராகிய ஜீவனும் பிரம்மத்தைத் தவிர வேறொன்றல்ல என்ற அத்வைதக் கொள்கையை நிலைநாட்டினார். காசியில் அந்தணரான இவர் முன் சிவபெருமானே ஓர் சண்டாளனாகத் தோன்றி இவரது ஜாதி அகந்தையை உடைத்தெறிந்தார்.

அதாவது சண்டாள வேடத்தில் வந்த காசி விசுவாதர் இவரை நெருங்கவே சங்கரர் "எட்டிப்போ! எட்டிப்போ!" என்று கூக்குரலிட்டார். சண்டாளன் தனதருகில் வந்தால் தனக்குத் தீட்டு வந்துவிடும் என்று நினைத்து அவ்வாறு கூறினார். சண்டாளன் புன்சிரிப்புடன் "யாரை எட்டிப் போகச் சொல்கிறீர்?" என்று கேட்டான். தெய்வீக ஆற்றலால் சங்கரர் உடனே தனது அறியாமையை உணர்ந்து அந்தச் சண்டாளனின் காலில் வீழ்ந்து வணங்கினார். சங்கரரின் அத்வைத தத்துவப்படி சண்டாளனிலும் சங்கரரிலும் உள்ள ஆத்மா ஒன்றே!

சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர்-06.

### ஊனமுற்றவன் இயேசுவின் பெயரால் எழுந்து நடந்தான்

இயேசு மட்டும்தான் புதுமைகள் செய்தார் என்று எண்ணுபவர்கள் நிறையப் பேர். இயேசுவை விசுவாசித்த அப்போஸ்தலர்களும் சீடர்களும் நிறையவே எவ்வளவோ புதுமைகள் புரிந்துள்ளனர். ஏன் இன்றும் இயேசுவின் அன்பில் இணைந்து வாழும் சீடர்கள் எத்தனையோ நாடுகளில் அவர் நாமத்தில் பல புதுமைகள் புரிகின்றனர்.

கால் ஊனமுற்றிருந்த ஒருவரைச் சிலர் சுமந்து வந்து கோவிலுக்குள் செல்வோரிடம் பிச்சை கேட்பதற்காகக் கோவிலின் அழகு வாயிலில் வைப்பர். ஒரு நாள் அவர்,கோவிலுக்குள் சென்று கொண்டிருந்த பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சை கேட்டார். பேதுருவும் யோவானும் அவனை உற்றுப் பார்த்து "எங்களைப் பார்" என்று கூறினர். அவர் ஏதாவது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களை ஆவலுடன் நோக்கினார்.

பேதுரு அவரிடம் "வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை. என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்." என்று கூறி அவரது வலக் கையைப் பற்றித் தூக்கிவிட்டார். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவர் குதித்தெழுந்து நடக்கத் தொடங்கினார். துள்ளி நடந்து அவர்களோடு நடந்து சென்று கடவுளைப் போற்றியதைக் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டனர். (திருத்தூதர் பணிகள் 3அதி 3-8வரை)

நாமும் விசுவாசத்துடன் அவரோடிணைந்திருப்போமானால், நிச்சயம் எமக்கும் புதுமைகள் புரிய வரமருள்வார் எம் பரம தந்தையாம் இயேசு பிரான்.

செல்வி. பிரகாசியம்மாள் அந்தோனிப்பிள்ளை, திகனை.

### அல்லாஹ்வை நோக்கிய கல்வியே சிறந்தது

தாயின் கருவறையில் இருக்கும் போது அறிவில் பூஜ்ய நிலையில் இருந்த மனிதன் இவ்வுலகிற்கு வந்தவுடன் அல்லாஹ் அவனுக்குக் கொடுத்த சிந்தனை,இதர ஆற்றல்கள், அறிவுபெறும் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அறிவைத் தேடி அறிவில் இமயம் கண்டுவிட்டதான பிரமையில் அறிவின் பிறப்பிடமான அல்லாஹ்வை அவன் மறந்துவிடுகின்றான்.

அவனது அறிவுத் தேடலின் நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியை நாடல் என்ற வட்டத்தை விட்டும் அவன் தூரமாகிவிடுகின்றான்.

யார் இவ்வுலகில் அல்லாஹ்வின் நோக்கத்திற்காகவும் அவனது திருப்திக்காகவும் கல்வியைக் கற்கின்றாரோ அவர் மறுமையில் தமது தங்குமிடத்தைச் சுவர்க்கத்தில் அமைத்துக் கொள்ளட்டும்.

மாறாக அறிஞர்களிடம் தர்க்கம் செய்வதற்காகவோ, மடையர்களிடம் பெருமையடிப்பதற்காகவோ, மக்கள் கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காகவோ யாரேனும் கல்வியறிவைக் கற்றால் அவர் தமது தங்குமிடத்தை நரகத்தில் அமைத்துக் கொள்ளட்டும். ஆதாரம் திர்மிதி

எம்.சி. கலீல். கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.495

### பரிசுக்குரிய கவிதை

#### அகதிக் கூட்டம்

கூடாரம் தந்தார்கள்
குடியிருக்க வைத்தார்கள்!
வாடிப்போன வாழ்வு
வளமாகும் என்றிருக்க
தேடிவந்த .'நிதி'
திசைமாறிப் போனதால்,
தெருவோரம் 'பொங்குகிறது'
திசைமாறிய அகதிக் கூட்டம்...!

நா. ஜெயபாலன், பிபிலை.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



#### எங்கே நிம்மதி?

இதயமில்லா மனிதர்களும்
நீதி நெறி நில்லா மன்னனும்
இருக்கும் நாட்டில்
மாடி மனை எதற்கு?
கூடாரம் போதுமய்யா
நிம்மதி வேண்டுமய்யா.

எஸ். சிவலோஜன், வவுனியா.

#### எதிர்பார்ப்பு

மறுக்கப்பட்டது உரிமை!
தொடங்கப்பட்டது யுத்தம்!
பிடித்துக் கொண்டது வறுமை!
இடம்பெயர்ந்து அமைத்துக் கொண்டோம்
கடற்கரையில் குடிசை!
எதிர்பார்க்கின்றோம் விடிவை!

பி.ஜெயா, அக்கரைப்பற்று.

#### சொந்தம்

யுத்தம் இரு தரப்புக்கும்-சொந்தம்
சமாதானம் நாட்டை
ஆள்பவர்களுக்குச்
சொந்தம்- ஆனால்
கோரப் பசியும் கொடுமைகளும்
எங்களுக்குச் சொந்தம்.

கவிப்பிரியன் ஏ.ஆர்.எம். இக்பால், இரத்தினபுரி.

#### மறுபக்கம்

இது
நாகரிக உலகின்
மறுபக்கம்
போரின்
மற்றொரு
பிரசவம்!

எஸ். ஹரிப்ரசாத், ஹட்டன்.

#### அகதிகள்

எங்களை வெளியேற்ற
பலர் முயற்சி
அல்லல்படும்
எங்களை மீளக்
குடியேற்ற
யார் இருக்கார்?

த. நகுலேஸ்வரன், மட்டக்களப்பு.

#### எப்போது...?

எங்களுக்கு வந்தால் வறட்சி..!
இல்லையேல் பெரும் நீர்வீழ்ச்சி..!
இது தானோ?
இயற்கையின் ஆட்சி!
இதிலிருந்து இறைவா
எப்போது வரும் மீட்சி?

சு.சுபா, பெயாவெல்.

#### மனிதம் எங்கே?

மெத்தை வீட்டில்
பால் பழம் உண்டு
மகிழ்ந்தவர்கள் நாங்கள்
இன்றோ
குப்பைக் கொட்டிலில்
பிச்சையுண்டு
குறுகிப்போய் நிற்கிறோம்
மனிதனிடம் மனிதம்
அற்றுப் போனதால்.

அ.சந்தியாகோ, கண்டி.

#### போச்சு

குண்டு வீச்சதுவால்
குடியிருப்புப் போச்சு
வந்த வெள்ளமதால்
வாழிடமும் போச்சு
ஆதரவு யாருமில்லை
அனாதையாகினோம்-நாம்.

மாணிக்கன் இளங்கோ, மட்டக்களப்பு.

#### இரக்கமில்லை!

ஒரு பக்கம் வறுமையும்
மறு பக்கம் வன்முறையும்
வாட்டும் போதும்
இயற்கைக்கும் எங்கள் மேல்
இரக்கமில்லை!


பி. மகிந்தன், சீனன்குடா, திருகோணமலை.

#### ஏக்கமோ?

எத்தனை வாக்குறுதிகள்
எத்தனை படப்பிடிப்புகள்
இவை எல்லாம் இன்று
எங்கே போயின?
என்ற ஏக்கமோ இவளுக்கு!

கிருஸ்ணன், சிவா, மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.498



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.02.2003

கவிதைப் போட்டி இல.498
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### வழி ஒன்றே துணை!

வாழ வழியின்றி
வழியில் நிற்கும்-மாந்தர்களே
இன்னும் உமை வாழ வைப்பது
வழி ஒன்று மட்டும்தானோ?

சி. அருணன், வவுனியா.

#### வாழ்க்கை

கொட்டகை வாழ்வின் கொத்தடிமை
எத்தனை நாட்கள் செத்து மடிவது
விட்டகல விடியல் தேடும்
விட்டில் பூச்சிகளாய் எங்கள் வாழ்க்கை!

தெ.லோஜனா, கொழும்பு-06.

#### அகதிகள்

கொட்டும் மழையிலும்
கடும் பனியிலும்
சுட்டெரிக்கும் வெயிலிலும்
கொடூர யுத்தத்தால்
கூடாரமடித்து
கூழ் காச்சி வாழ்க்கை
நடத்தும் நாமும் இந்நாட்டு
அகதிகளே...!

ஏ.எம். ஹம்தூன், தலைமன்னார்.

#### கனவுப் பொங்கல்

இந்த வருடமாவது உங்கள்
அகதி வாழ்வு முற்றுண்டு
சொந்த இடம் சென்று
சுகம் காணலாமென்ற
சுகமான கனவுடன் தானோ
இந்தத் தையிலும்
உங்கள் பானையும்
பொங்கி வழிகிறது...

நிந்தநிலா
எ.ஃப். மொகமட பாயிஸ்.

#### அகன்ற முத்திரை

ஆண்டவனின் படைப்பால்
அன்னை மடியில்
அவதரித்தோம்!
அன்பும் அரவணைப்பும்
அள்ளித் தந்த-இரு
தெய்வங்களால்
ஆனந்தம் அடைந்தோம்!
திட்ட மிட்ட- விசமிகளால்
அன்றே 'அகதி'யென்ற
அகன்ற முத்திரை
குத்தப்பட்டோம்!
நடு வீதியில்
விடப்பட்டோம்!!

ஆ.ஞானகுரு, பதுளை.

## உங்கள் பக்கம்

### மன்னார் பேரூந்து நிலையத்திற்குள் மதுக்கடை!

மன்னார் பேரூந்து நிலையத்திற்குள் மதுக்கடை நடத்த அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதால் மக்கள், விசேடமாகப் பெண்கள் மிகச் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். மன்னார் விசேட ஆணையாளராக திரு.சு. எட்வேட் அவர்கள் இருந்த காலத்தில் பால் சபைக்காக வழங்கப்பட்ட இந்தக் கடை, தற்போது மதுக்கடையாக மாறியுள்ளது.

மது அருந்துவதற்கு அந்த மதுபானக் கடையில் இடவசதி இல்லாத காரணத்தால் அருகிலுள்ள வெற்றிலைக் கடைக்குள்ளும், பொது மலசல கூடத்திற்குள்ளும் இருந்து மது அருந்துகிறார்கள். இதனால் மன்னார் பேரூந்து நிலையத்துக்கு வரும் பயணிகள் மிகச் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

அத்தோடு பேரூந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களும் கடமை நேரத்திலேயே இந்த மதுக் கடையில் மது அருந்துவதாகவும் அறியக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலை பயணிகளை மிகவும் விசனப்படுத்தியிருக்கிறது.

எனவே இவ்விடயத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் மன்னார் பேரூந்து நிலையத்திற்குள் அமைந்திருக்கும் மதுபானக் கடையை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுவரித் திணைக்களமும், விசேட ஆணையாளரும், அரசாங்க அதிபரும் இவ்விடயத்தில் ஏன் பாராமுகமாக இருக்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை.

மன்னார் மாவட்ட மக்களின் நலன் கருதி இக் கடிதத்தை உங்கள் பக்கத்தில் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சஞ்சீவன், மன்னார்.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## வாசக[ர்] சாலை

அன்புள்ள ஆசிரியருக்கு,

கொலைஞர்கள் இனந் தெரியாதோர் போன்று நடமாடும் இத் தருணத்தில், அதுவும் சகோதரப் பத்திரிகைகள் குறிப்பிட்டவர்களுக்குத் 'தூபம்' போடும் போது, தனியே நின்று நடுநிலை தவறாது யதார்த்த உண்மைகளை வெளிப்படுத்தும் ஒரே பத்திரிகை தினமுரசே என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். 'தாகூர்' என்ற பெயரில் வெளிவரும் கருத்துக்கள் மிக மிக உண்மையானதும் புனிதமானதுமாகும். தயவு செய்து அக் கருத்துக்களை 'ஆங்கிலத்தில்' மொழிபெயர்த்து பத்திரிகையின் பின்புறத்தில் வெளியிடுவீர்களாகில் சிங்களச் சகோதரர்களும் உண்மைகளை அறிவார்கள் தினமுரசே, தினமும் வெளிவர வேண்டுகிறேன்.


லோயலா செல்வராசா, மதுரங்குளி.

### பொங்கிவரும் என் தினமுரசே!

முரசே! நீண்ட நாட்களாக உனக்கு மடல் எழுத ஆசை. உன் சேவை என் போன்ற வாசக நெஞ்சங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

நீ கொண்டு வரும் அனைத்து அம்சங்களும் அருமை. அதிலும் மிக மிக என்னைக் கவர்ந்தது 'பாப்பா முரசு'. உன் சேவை மென் மேலும் வளர என் வாழ்த்துக்கள்.

இ. ஜெனா, நெடுங்கேணி.




### என்றும் என்னைத் தித்திக்க வைக்கும் முத்தான முரசே!

உனக்கு என் கோடானு கோடி நன்றிகளை அள்ளிச் சொரிந்தாலும் அது மிகையாகாது. ஏனென்றால் நீ என்னை மட்டுமல்ல; உன் அனைத்து வாசகர்களையும் உன் சுவையான முரசு மடல்களால் கைப்பிடிக்குள் இட்டுவிட்டாய். இப்போது நீ சுமந்து வருகிறாயே, 'குறுக்கெழுத்துப் போட்டி' முதலில் அதில் சிறு தவறுகள் காணப்பட்டாலும் இப்போது முழு நிறைவாக வருகிறது. ஆகவே மென்மேலும் உன் பணி தொடர என் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

ஏ.எல். மொஹமட் நவாஸ், மீறாவோடை-04.

### மேன்மை தங்கிய தினமுரசு ஆசிரியருக்கு,

எனது பணிவான வணக்கம். தினமுரசின் இரசிகனான எனக்கு முரசின் ஆக்கங்களைப் பார்த்தால் மிகுந்த மகிழ்ச்சி. எப்போதும் தரமானவைகளையே பிரசுரிக்கும் தினமுரசு வார இதழுக்கு ஒரு ஓ... போடு.

அ. பரத், நானுஓயா.

### என் இனிய முரசே!

நீ ஒரு நடமாடும் நூலகம். உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளைத் தருவதில் வல்லவன். இம்முறை முரசின் அட்டைப் படம் சூப்பர்.

முரசின் 'குறுக்கெழுத்துப்போட்டி' தரம் இன்னும் வளர வேண்டும்.

சி.பேரின்பராசா, நிலாவெளி-02.

# பாதுகாப்பு விவகாரங்களில் தனது ஆலோசனை பெறப்பட வேண்டும்
# ஜனாதிபதி பிரதமருக்கு காட்டமான தொனியில் கடிதம்!

தேசிய பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் முடிவுகளை எடுக்கும்போது தன்னுடன் கட்டாயமாகக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

நோர்வே தூதரகத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்ட புலிகளுக்கான வானொலி உபகரணங்கள் குறித்து மீண்டும் தனது கவலையை வெளிப்படுத்தி நீண்ட கடிதம் ஒன்றைப் பிரதமருக்கு அனுப்பி இருக்கும் திருமதி குமாரதுங்க, சமாதானமென்ற பெயரில் புலிகளுக்கு அதிகபட்ச சலுகைகள் வழங்குவதை அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு செய்வது ஏனையவர்களின் சந்தர்ப்பங்களை நிராகரிப்பதுடன் நீண்ட கால அடிப்படையில் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகமேற்படுத்தும் செயலென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

புலிகளுக்கான வானொலி உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் நடந்து கொண்ட விதத்தைக் கடுமையாக விமர்சித்திருக்கும் திருமதி குமாரதுங்க தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய முடிவுகளை மேற்கொள்ளும் போது தன்னுடனும், அமைச்சரவையுடனும் கட்டாயமாகக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று பிரதமருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கடிதத்தின் பிரதியொன்று நோர்வே பிரதமருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## உதவி வழங்கும் கூட்டத்திற்கு
## ஜப்பானியப் பிரதமர் தலைமை!

எதிர்வரும் ஜூன் மாதம் 16, 17ம் திகதிகளில் ஜப்பானின் தலைநகரமான டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு ஜப்பான் பிரதமர் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமொன்றுக்கு வெளிநாட்டு அரசாங்கமொன்றின் தலைவர் தலைமை தாங்குவது இதுவே முதல் தடவையாக இருக்கும்.

முன்னைய சந்தர்ப்பங்களில் உலக வங்கியின் பிரதித் தலைவர் ஒருவரே இத்தகைய கூட்டத் தொடருக்குத் தலைமை வகிப்பார்.

இலங்கையில் இருந்து செல்லும் தூதுக் குழுவுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவார்.

## சுதந்திரம் இல்லை

கொழும்பில் நடைபெற்ற சுதந்திர தின வைபவங்களில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து வரவிருந்த மாணவர்கள் புலிகளின் உத்தரவின் பேரில் தடுக்கப்பட்டனர்.

சுதந்திர மாணவர் அமைப்பு என்ற புலிகள் சார்பு அமைப்பினரால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் கொழும்பில் நடைபெறும் இலங்கையின் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டாம் எனக் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தது.

## மாகாண சபைகளுக்குத்
## திடீர்த் தேர்தல்?

அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவைப் பரிசீலிக்கும் நோக்குடன் மூன்று மாகாண சபைகளைக் கலைத்து அவற்றுக்கு அவசரத் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்து ஜனாதிபதி ஆலோசித்து வருவதாக அறியக் கிடைக்கின்றது.

முன்னதாக, தென்மாகாண சபையைக் கலைத்துத் தேர்தல் நடத்த ஜனாதிபதி ஆலோசித்தார். எனினும் ஒரு மாகாண சபையை மாத்திரம் கலைத்து தேர்தல் நடத்தும்போது அரசாங்கம் அதன் முழுப் பலத்தையும் பிரயோகித்து அந்த மாகாண சபையைக் கைப்பற்றக்கூடும் என்று கருதுவதால் மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தலை நடத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

மார்ச் மாதத்திற்குள் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் மாகாண சபைத் தேர்தல் குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன. எந்த ஒரு தேர்தலையும் சந்திப்பதற்கு முன்னர் ஜே.வி.பி.யுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து உறுதியானதொரு அடித்தளத்தை உருவாக்குவதில் பொ.ஐ.மு. ஆர்வம் காட்டி வருகிறது.

## முஸ்லிம்களைப் புறக்கணிப்பது பாரதூரமான விடயம் - ஹக்கீம்

அடிப்படையில் நம்பிக்கை என்பது மிகவும் அவசியமானதொரு அம்சம். நம்பிக்கை இல்லாமல் எந்தவொரு செயற்பாட்டிலும் இறங்க முடியாது. கடந்த காலத்திலும் தற்பொழுதும் தனித்தனியே புலிகளோ அரசோ முஸ்லிம்களைப் பற்றிக் கவனத்தில் எடுக்கவில்லை என்பது குறித்து முஸ்லிம்கள் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அரசும் புலிகளும் சேர்ந்து முஸ்லிம்களைக் கவனத்தில் எடுக்கவில்லை என்றால் அது ஆபத்தானது என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய ரவூப் ஹக்கீம் தென்கிழக்கிலே செய்யப்பட்ட முஸ்லிம் தேச பிரகடனம் முஸ்லிம் காங்கிரஸின் உணர்வாகத்தான் இருக்கும். அதிலே முஸ்லிம் காங்கிரஸ் பங்கு பற்றவில்லை என்பது ஒரு புறமிருக்க உணர்ச்சிகளோடு அள்ளுப்பட்டுப்போய் முஸ்லிம்களின் தலைமை அதே அடிப்படையிலே நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது மடத்தனமானது எனவும் குறிப்பிட்டார்.

## இந்து கலாசார அமைச்சர் எங்கே போனார்?

கொழும்பு முகத்துவாரம் ஐயப்பன் ஆலயத்துக்குள் புகுந்த காடையர்கள் சிலர் அங்கிருந்த குருக்களைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக இந்து கலாசார அமைச்சு எவ்வித நடவடிக்கையையும் எடுக்காததுடன் சம்பவம் குறித்து அமைச்சர் ரி.மகேஸ்வரன் கருத்தெதனையும் தெரிவிக்கவுமில்லை.

கோவிலுக்குள் புகுந்த சிலர் இந்துக்களின் மத உணர்வுகள் புண்படும் விதத்தில் நடந்துகொண்டதுடன் பின்னர் சமரச முயற்சியில் ஈடுபட்ட கோயில் பரிபாலன சபை உறுப்பினர்களையும் தாக்கியுள்ளனர். இது குறித்து விசாரணை நடத்துமாறு மேல் மாகாண சபை உறுப்பினர் மனோகணேசன்,அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் பொலிஸாரிடம் கேட்டுக் கொண்ட போதும் இந்து கலாசார அமைச்சர் இவ்வாறான ஒரு சம்பவம் குறித்துத் தனக்கு எதுவும் தெரியாதது போல் நடந்து கொண்டார்.

## இந்தியத் தலைவர்களுடன் மகிந்த ராஜபக்ஷ சந்திப்பு!

இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லி சென்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், வெளியுறவு அமைச்சர் ஜஷ்வந்சிங்ஹா மற்றும் இந்திய பாதுகாப்பு உயரதிகாரிகள் உள்ளிட்ட பலருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார்.

## முறைப்பாட்டை வாபஸ் பெற்றால் பிள்ளைகள் ஒப்படைக்கப்படுவார்கள்

கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் பலவந்த ஆட்சேர்ப்புக்களில் தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் இது தொடர்பாகச் செய்த முறைப்பாடுகளை மீளப்பெறுமாறு வலியுறுத்தப்பட்டு வருகின்றனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் வேறு மனித உரிமை அமைப்புக்களிடமும், பிள்ளைகள் பிடித்துச் செல்லப்படுவது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடுகளைத் தமது நன்மை கருதி வாபஸ் பெறுமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு முறைப்பாடுகள் வாபஸ் பெறப்பட்டால் பிள்ளைகளைத் திருப்பித் தர முடியும் எனச் சில பெற்றோருக்குக் கூறப்பட்டுள்ளது.

## குடும்பஸ்தர் கொலை!

இரண்டு அரசியல் கட்சிகள் தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் முகமது ரமீஸ் என்ற 26 வயது குடும்பஸ்தரின் உயிரைக் குடித்தது. கடந்த முதலாம் திகதி அதிகாலை காத்தான்குடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குமிடையில் அரசியல் தொடர்பான வாக்குவாதம் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

இது முற்றியதில் பொலிஸ் உத்தியோகத்தர் தனது துப்பாக்கியால் மற்றவரைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

## கீழ் நிலை பெண் பொலிஸ் அதிகாரிக்கு
## சல்யூட் அடித்த படைத் தளபதிகள்!

கீழ்நிலை பெண் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு மரியாதை அணிவகுப்பின் போது சல்யூட் அடிக்கவேண்டிய நிலை பொலிஸ் மா அதிபருக்கும், முப்படைத் தளபதிகளுக்கும் ஏற்பட்டது.

சுதந்திரதின வைபவங்களுக்கு முன்னதாக திங்கட்கிழமை நடைபெற்ற ஒத்திகை நிகழ்ச்சியின் போது ஜனாதிபதி செயலகத்தினால் அனுப்பப்பட்டிருந்த ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த கீழ்நிலை பெண் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு முப்படைத் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் சல்யூட் அடித்தனர்.

பொதுவாக இவ்வாறான நிகழ்வுகளுக்கு ஜனாதிபதியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கலந்துகொள்வதே வழக்கமாகும்.

ஆனால் இத்தகையதொரு கீழ்நிலை பெண் பொலிஸ் அதிகாரியை ஜனாதிபதி செயலகம் ஏன் அனுப்பியதெனத் தெரியாதுள்ளது.

நாம் என்ன செய்ய முடியும் அந்தப் பொலிஸ் பெண்மணியின் அதிர்ஷ்டம். முப்படைத் தளபதியும் பொலிஸ்மா அதிபரும் மரியாதை அணிவகுப்பின்போது சல்யூட் அடிக்கும் புகைப்படம் அப் பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது என்று சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்திருந்தார்.

## புலி பொறுப்பாளர் மீது தாக்குதல்

மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் சிலரை இயக்கத்தில் சேர்க்க முற்பட்ட புலி இயக்கப் பொறுப்பாளர் ஒருவர் இளைஞர்களால் நையப் புடைக்கப்பட்டுத் துரத்தியடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் இடம் பெற்றது. இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, அச்சுவேலிப் பகுதியிலுள்ள பத்தமேனி விளையாட்டு மைதானத்தில் தினமும் விளையாடும் இளைஞர்களிடம் மோட்டார் சைக்கிளில் வந்த அச்சுவேலிப் பகுதிப் புலி இயக்கப் பொறுப்பாளர் பாலன் என்பவர் இளைஞர்களை விளையாட்டை நிறுத்தி விட்டுத் தமக்குக் கிட்ட வருமாறு பணித்ததாகவும் இளைஞர்கள் பொறுப் பாளரை அணுகி என்ன விடயம் என கேட்டபோது, பொறுப்பாளர் விளையாட்டை விட்டுவிட்டு தமது இயக்கத்தில் இணைய வேண்டும் எனவும் தனது அரசியல் கருத்துக்களைக் கேட்குமாறும் கூறியுள்ளார்.

இதனால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதால் இளைஞர்களைப் புலிப் பொறுப்பாளர் தாக்கியுள்ளார். பின்னர் இளைஞர்கள் சேர்ந்து பொறுப்பாளரை நையப் புடைத்து அனுப்பி வைத்தனர். இதே வேளை மேற்படி புலிப் பொறுப்பாளர் இப் பகுதியில் பொது மக்களின் வாகனங்களைப் பறிப்பது, கடைகளில் கப்பம் கேட்பது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர் என்று குற்றம் சாட்டுகின்றனர் தாக்கியோர்.

## பேர்லின் பேச்சுக்களில்
## சிறுவர் கடத்தல் விவகாரம்

சமஷ்டி முறையின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடுகள் அடங்கிய அறிக்கை ஒன்று அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் போது புலிகள் இயக்கத்தினால் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

புலிகளின் அரசியல் பிரிவும், வெளிநாட்டு நிபுணர்கள் குழுவொன்றும் இணைந்து இந்த ஆலோசனைகளைத் தயாரித்துள்ளன.

பெப்ரவரி 7ம் திகதி பேர்லினில் உள்ள நோர்வே தூதரகத்தில் நடக்கவிருக்கும் ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் போது, கிழக்கில் சிறுவர்கள் கடத்தப்படுவது, மற்றும் மனித உரிமை விவகாரங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

இம்முறை பேச்சுவார்த்தையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி இயன்மார்ட்டின் பார்வையாளராகப் பங்கு கொள்கிறார்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை கொழும்பு ஊடாக ஜேர்மனிக்குச் சென்றனர்.

# முரசம்

## ஐயங்களைத் தீர்க்குமா ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள்?

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவுள்ளன. பேச்சுவார்த்தைக்கான இடமும் மாற்றியமைக்கப்பட்டு இம்முறை ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் நிகழ்கிறது. புலிகள் தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலை நீண்ட தூரப் பயணத்துக்கு உகந்ததல்ல என்ற காரணத்தால் அவர் வசிக்கும் இங்கிலாந்திற்கு அருகிலுள்ள நாடான ஜேர்மனியில் பேச்சுவார்த்தையை நடத்த ஏற்பாட்டாளர்கள் ஒழுங்கு செய்தனர். எனினும் பேச்சுவார்த்தையின் பின் அன்ரன் பாலசிங்கம் இலங்கை வந்து, புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேசி, அடுத்த பேச்சுவார்த்தையை எவ்விதம் தொடர்வதென்ற அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் அதிருப்திகளுடன்தான் ஆரம்பமாகிறது. குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம் பெயர்ந்த மக்களைக் குடியேற்றுவது தொடர்பான புலிகளின் கோரிக்கைகள் ஏறத்தாழ நிராகரிக்கப்பட்ட அல்லது புலிகள் ஏற்க மறுக்கும் மாற்று நிபந்தனைகளை வலியுறுத்துகின்ற நிலைமை ஏற்படுத்தியுள்ள இறுக்கமான சூழ்நிலை தொடர்கிறது. இது தொடர்பாக அரசாங்கத்தின் வேண்டுகோளின் பெயரில் முன்னாள் இந்திய இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார் வழங்கியுள்ள அறிக்கையில் கூறப்பட்டதாக வெளிவந்த விடயங்களையும் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் நிராகரிப்பதாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். எனினும் இவ்வறிக்கையின் முழுமையான விபரங்கள் பேச்சுவார்த்தையிலேயே ஆராயப்படுமென நம்பப்படுகிறது. இதேவேளை புலிகள் சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பதாகப் பாரிய குற்றச்சாட்டு குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் எழுந்துள்ளது. இது தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், தமக்குப் பெருமளவு முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் யுத்த நிறுத்த வேளையில் இவ்வாறான முறைப்பாடுகள் பெருகுவது கவலையளிக்கிறதெனவும் தெரிவித்திருந்தார். இவற்றுக்கு மத்தியில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இம்முறை பேச்சுவார்த்தையில் சமஷ்டித் தீர்வைப் பற்றி ஆராயப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே நான்கு நாட்களிலிருந்து இரண்டு நாட்களாகக் குறைக்கப்பட்ட இந்த ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில், உடனடி விடயங்களாக தற்போது முறுகல் நிலையிலுள்ள விடயங்களில் சுமுக உடன்பாடுகளைக் காண வேண்டிய தேவையிருக்கும்போது, அவற்றைத் தாண்டி, ஆழமான விடயமான சமஷ்டித் தீர்வைப் பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமென்பது கேள்விக்குறியே.

இதற்கிடையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், முஸ்லிம்களுக்கும் சுயாட்சியடிப்படையிலான தீர்வொன்றை வலியுறுத்துகிறார். இவை பேச்சுவார்த்தையில் உடனடியாக எடுக்கப்பட்டு உடன்பாடு காணப்படுவதற்குரிய மனநிலை தற்போது காணப்படவில்லை.

கடந்த நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ரவூப் ஹக்கீம் வகிக்க விழைவது அன்ரன் பாலசிங்கத்தால் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. இந் நிலையில் ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பதுபோல், ஐந்தாம் சுற்றில் அரசியல் விவகாரங்களை விவாதிப்பது சாத்தியமாகுமா என்பது ஐயத்துக்குரியது. எவ்வாறாயினும் உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை நீங்க இந்த ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை உதவுமானால் அதுவே பெரிய காரியம். பேச்சுவார்த்தைகளில் ஆரம்பத்தில் இருந்த உற்சாகத்தையும் நம்பிக்கையையும் மீண்டும் ஏற்படுத்துவதே இரு தரப்பினரதும் தற்போதைய பொறுப்பாகும்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் மனித உரிமைகளுக்கு அடித்தளம் கிடைக்குமா?

ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை பேர்லின் நகரில் பெப்ரவரி 7ம் 8ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. கடந்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் உலக வரைபடத்தில் சுவர் எழுப்பப்பட்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த ஜேர்மனி தற்போது ஒன்றாகி விட்டது. பேர்லினிலேயே இந்தச் சுவர் அமைந்திருந்தது. கிழக்கின் சோஷலிச ஜேர்மனி 1990 வரை சோவியத் யூனியனின் தலைமையிலான வார்சோ கூட்டணியில் அங்கத்துவம் பெற்றிருந்தது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணிக்கும் வார்சோ கூட்டணிக்கும் இடையிலான கெடுபிடிப் போரின் ஒரு குவி மையமாக இந்த பேர்லின் சுவர் நின்றது என்றால் அது மிகையல்ல.

ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தையின் நான்கு சுற்றுக்களும் வடக்கு-கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது, அதற்கான உப குழுக்களை அமைப்பது, சமஷ்டி முறையிலான தீர்வு, பாதுகாப்பு சம்பந்தமான உப குழு தொடர்பான நெருடல்கள், முஸ்லிம் மக்களின் தனித்துவம் தொடர்பான சர்ச்சைகளுடன் தொடர்கிறது. பாதுகாப்பு வலயம், கிழக்குப் பிராந்திய தளபதி கருணா தெரிவித்த கருத்துக்கள் உண்மையில் இருந்து வெகு தூரத்தில் இருந்தன.

சிறுவர்களைப் படைகளில் இணைத்துக் கொள்வது, முஸ்லிம் மக்களிடம் பணம் அறவிடுவது தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யுனிசெப் போன்ற கிழக்கில் தொழிற்படும் அமைப்புக்கள் தெரிந்து வைத்திருக்கின்ற-பகிரங்கப்படுத்திய உண்மைகளுக்கு மாறானவையாகும்.

புலிகள் 350 வரையான சிறுவர்களை இணைத்துக் கொண்டதற்கு தம்மிடம் ஆதாரம் இருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். நியூயோர்க் டைம்ஸ் இன் பெண் பத்திரிகையாளர் ஒருவர் நேரடியாகவே இவற்றைக் கண்டு வந்துள்ளார். இதுபற்றி தமது பத்தி எழுத்தொன்றில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தார். புலிகள் சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்டுவது தொடர்பாக புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான ரமேஷ் என்பவரிடம் மட்டு -திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை முறையிட்டுள்ளார். ஐ.நா.வின் சிறுவர்கள் தொடர்பான அமைப்பின் தலைவரான ஒலரா ஒட்டுனு இதுபற்றிப் பிரஸ்தாபித்துள்ளார். பல நூற்றுக் கணக்கான பெற்றோர் முறைப்பாடுகள் செய்துள்ளனர்.

கிழக்கில் உள்ள மாற்று இயக்கங்கள், கடத்தப்பட்டு காணாமல் போனோரின் மனைவியர், பெற்றோர் போன்றவர்கள் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளனர்.

முஸ்லிம் மக்கள் மீதான கட்டாய பண அறவிடல், அத்துமீறல்கள் தொடர்பாகவும் ஆதாரபூர்வமான பல விடயங்கள் உள்ளன.

இவற்றை ஒரேயடியாக மறுப்பது, இவற்றை யாருக்கும் தெரியாத மர்ம சக்திகள் செய்தது போல் அல்லது மாற்றுத் தமிழ் அமைப்புக்கள் செய்தது போல் அல்லது முஸ்லிம் தீவிரவாத சக்திகள் செய்தது போல் சொல்ல முயல்வது எந்த ரகத்தில் சேரும். சாதாரணமாக சுய பிரக்ஞை உள்ள எந்த மனிதனும் இவ்வளவு பெரிய பொய்யைக் கூற முடியாது.

உண்மைகள் நேர்மையாக எதிர்கொள்ளப்படாவிட்டால், மனந்திறந்து ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அல்லது சுய விமர்சனம் செய்யப்படாவிட்டால் எந்தப் பேச்சுவார்த்தைகளும் நேரத்தை வீணடிக்கும் விடயமாகத்தான் முடியும்.

மனித உரிமை என்பது விரிவான தளத்தில் அணுகப்பட வேண்டியிருக்கிறது. ஜனநாயகம் இங்கு பிரிக்க முடியாத அம்சமாகும். அரசியல் சமூகப் பொருளாதார துறைகளில் சமூகத்தின் ஒவ்வொரு அசைவின் மீதும் நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த நிர்ப்பந்தத்தின் விளைவால் ஒரு நலிவடைந்த தலைமுறையே உருவாக்கப்பட்டு வருகிறது. இந் நிலை நீடித்தால் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய தமிழ்ச் சமூகம் என்ற கருத்து இறந்தகாலக் கதையாகிவிடலாம்

கடந்த 20 வருடங்களில் அரசின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், உள்ளூரில் எழுதப்படாத விதிகள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட குரூரங்களின் மூலமும் எமது சமூகத்தின் விழுமியங்கள் அழிக்கப்பட்டுள்ளன. வாழும் மனிதரின் மனங்கள் விகாரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலைமை ஒரு குருதிப் புற்றுநோய் போல் எமது சமூகத்தை அரித்தழித்துவிடும்.

2ம் உலக மகா யுத்தததின் போது நாஜிகளால் யூதர்கள் மீதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட குரூரங்களின் காயங்கள் இன்னும் ஆறவில்லை. நாஜிகளின் காலகட்டத்திற்காக ஜேர்மனியர்கள் இன்றும் சங்கடப்படுகிறார்கள். அந்த இருண்ட காலம் மீட்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் மிகுந்த அவதானமாக இருக்கிறார்கள்.

எமது சமூகத்தில் உரிய தருணத்தில் கவனம் செலுத்தப்படாவிட்டால் சமூகம் சகல தார்மீக வலுக்களையும் இழந்து அழிவின் விளிம்பில் நிறுத்தப்படலாம்.

சமாதான சூழல் உருவாகிய பின் தற்போது வடக்கு- கிழக்கை விட்டு வெளியேறுவோரின் தொகை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. யுத்த சூழ்நிலையில் வாழ முடியாது. சமாதான சூழ்நிலையிலும் வாழ முடியாதென்றால் மக்கள் எங்கே செல்வது.

வடக்கு-கிழக்கில் மக்கள் வாழ்வதற்கான நம்பிக்கைகளை ஏற்படுத்துவதே முதலும் முக்கியமானதுமான பணியாகும்.

இயல்பு சூழ்நிலையை உருவாக்குவது, அதிகாரப் பகிர்வு பற்றியெல்லாம் பேசுபவர்கள் ஏன் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாக மாத்திரம் மௌனத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

இந்தச் சட்டம் இலங்கை சமூகத்திற்கு வழங்கிய பங்களிப்பு, இன வேறுபாடு இல்லாத படுகொலைகள், சிறை- சித்திரவதைகள் என்பவை! இரத்த நெடியுடன் பிண வாடை வீசும் இந்த சட்டத்தை இலங்கையில் அகற்ற முடியாதிருப்பது இந்த நாட்டைப் பீடித்திருக்கும் நோயின் குணங்குறிகளைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இந்தச் சட்டம் யுத்தத்தில் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்படாத பல ஆயிரக் கணக்கானவர்களின் மரணங்களுக்கும் சித்திரவதைகளுக்கும் காரணமாக அமைந்தது. இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு மனித உரிமைகளைப் பற்றிப் பேசுவது "சாத்தான் வேதம் ஓதுவது" போலாகும்.

எனவே மனித உரிமைகளைப் பற்றிப் பேசும்போது அடிப்படையாக இருக்கக் கூடிய மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காண வேண்டும்.

எந்தத் தரப்பாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அப்பாவி மக்களுக்கு எதிராக இழைத்த குற்றங்கள் தொடர்பாகக் கணக்கில் எடுக்காமல் செல்ல முடியாது.

மனித குலம் பின் தங்கிய நிலையில் இருந்து முன்னேறிய நிலைக்குச் செல்லும் போது பல புதிய பெறுமானங்களை உள்வாங்குகிறது. காட்டுமிராண்டி நிலையில் 21ம் நூற்றாண்டின் மனித குலம் இல்லை. ஆனால் உலகின் சில விதிவிலக்கான சக்திகள் இந்தச் சமூகத்தை நவீன காட்டுமிராண்டித்தனத்தினுள் ஆக்கிரமித்துக் கொள்ள விரும்புகின்றன. பல இலட்சம் மக்களின் உயிரைப் பறித்தால் என்ன... பல ஆயிரம் இளைஞர்களை யுவதிகளை சிறுவர் சிறுமியரை பலி கொடுத்தால் என்ன... சில சக்திகளின் அதிகாரம் நிலைநிறுத்தப்படவும் இலக்குகள் சாதிக்கப்படவும் முடிந்தால் வெற்றியென்ற இந்தப் பிசாசுத்தனம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 11 அமெரிக்கத் தாக்குதல்கள் இதன் தன்மையை உலகின் கன்னத்தில் அறைந்து புலப்படுத்திய இத்தகைய சம்பவமாகும்.

இலங்கையைப் பொறுத்த வரை கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதி பெருமைப்படக் கூடிய விதமாக இருக்கவில்லை. மனித குலத்திற்குப் புதிதாக முன்னுதாரணமாக எதையும் சாதித்துக் கொடுத்ததாகவும் இல்லை.

உலகில் உதாரணமாகத் திகழும் தேசிய விடுதலை, சமூக மாற்றங்களுக்கான போராட்டங்களுக்குக் கிட்ட நெருங்கக் கூடிய அம்சங்கள் ஆரம்பத்திலேயே அழிக்கப்பட்டுவிட்டன. எண்ணிக்கையில் பெரும்பான்மையான சமூகமும் பரோபகாரமாகச் சிந்திக்க முடியாமல் சிறுமதி படைத்த அரசியல் வாதிகளால் தடுக்கப்பட்டது.

"பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாத்திரங்கள்" என்ற நிலைதான் இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இறுதி தசாப்தங்களில் எல்லாத் தரப்பிலும் ஆதிக்கம் பெற்ற நிலையாக இருந்தது.

தற்போது மின்னிக் கொண்டிருக்கும் சமாதான நம்பிக்கைகள் மங்கி மடிந்துவிடாமல் சுடர் விடுவதானால் அது மனித உரிமை, ஜனநாயகம் என்பவற்றை உறுதிப்படுத்துவதில் தான் இருக்கிறது.

பேர்லினில் அதற்கு உறுதியான அடித்தளம் இடப்படுமா? ■

முஸ்லிம் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபடும் தரப்புக்கள் இன்னும் ஒருமித்த முடிவுக்கு வரவில்லை.

பேர்லின் பேச்சுவார்த்தைகளில் மனித உரிமைகள் பற்றிப் பேசப்பட இருப்பதும், சர்வதேச மன்னிப்பு சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் பங்கு பற்றவிருப்பதும் முக்கிய அம்சமாகும்.

மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் சமஷ்டி முறையிலான தீர்வொன்றைத் தாம் ஏற்றுக் கொள்வதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் கொள்கையளவிலான இணக்கத்திற்கு வந்திருந்தார். துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக ரவூப் ஹக்கீம் இடைநடுவில் திரும்ப நேரிட்டது.

இம்முறை ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் உடல் நிலை காரணமாக பேர்லினுக்கு மாற்றப்பட்டுள்ளது. நேரமும் குறைக்கப்பட்டுள்ளது.

விலாவாரியாகப் பேச வேண்டிய விடயங்களுக்கு பாலசிங்கத்தின் உடல் நிலை இடமளிக்கவில்லை.

மனித உரிமை என்னும் போது இங்கு பல விடயங்கள் பேசப்பட வேண்டும்.

பலாத்காரமாக சிறுவர்களை படையணிகளுக்கு திரட்டுவதில் இருந்து பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட மாற்று அரசியல் கட்சிகளை, அதன் உறுப்பினர்களை உடல் மீதியின்றி அழிப்பது வரை பேசப்பட வேண்டியிருக்கின்றது. ஆனால் எவ்வளவு தூரம் காலமும், நேரமும், மனமும் இடம் தரும் என்பது இங்கு முக்கியமான பிரச்சினையாகும். மனமுண்டானால் இடமுண்டு என்பார்கள். சமூகப் பொறுப்புள்ளவர்கள் எவரும் இதுவிடயத்தில் அக்கறையற்றிருக்க முடியாது. பேரினவாத ஒடுக்குமுறையில் இருந்து தமிழ் மக்கள் விடுபடுவது எவ்வளவு முக்கியமான விடயமோ, அதே போல் தமிழ் மக்களின் மீது கவிந்துள்ள ஜனநாயக விரோத, மனித உரிமை மீறல்களிலிருந்து விடுபடுவதும் முக்கியமானது. இந்த இரண்டிலும் இருந்து விடுபடுவதும் ஒன்றையொன்று குறைத்து மதிப்பிட முடியாத அளவுக்கு முக்கியமான விடயங்களாகும்.

ஒருமுறை புலிகளின் அரசியல் ஆலோசகர் சுயநிர்ணய உரிமையை ஒரு மனித உரிமைதான் என்று கூறியிருந்தார். மறுக்க முடியாது. ஆனால் பொதுப்படையாக விடயங்களைக் கூறிவிடுவதன் மூலம், சமூகத்தில் பிரத்தியேகமாக நிகழும், முழு சமுதாயத்தையுமே மௌனிக்கச் செய்திருக்கும் பிரச்சினைகளைத் தவிர்த்துவிட முடியாது. சர்வதேச மன்னிப்புச் சபை யின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டின் இது விடயத்தில் பல நாடுகளிலும், சமூகங்களிலும் நிகழும் மனித உரிமை மீறல்பற்றிய கூடிய அவதானத்தைச் செய்தவர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறு:வ் ஹெவ்டே அல்லது ஐ.நா. படையில் பணி யாற்றிய சதீஸ் நம்பியார் போன்றவர்களின் முயற்சிகள் மீது எழுந்த விமர்சனங்கள், கண்டனங்கள் இயன் மார்ட்டினுக்கும் ஏற்படாது என எதிர்பார்ப்போம்.

பாதுகாப்புத் தொடர்பாக ஜனவரி 30ம் திகதி நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தின் பின்னர் புலிகளின்

## தென் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் எழுச்சி

# முஸ்லிம் தேசப் பிரகடனம்

தமிழ் அரசியல் சூழலில் நிலவும் ஜனநாயக மறுப்பு, ஏகபிரதிநிதித்துவம் என்ற கருத்துக்கள் முஸ்லிம் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பதனை ஒரேயடியாக மறுதலிக்க முடியாது. புலிகளின் அரசியல் ஆதிக்கம் என்பதும் தேசியத் தலைமை என்பதும் இராணுவ மேலாண்மையிலிருந்தே உருவாகின்றன. முஸ்லிம்கள் பிரதானமாக தமது வரலாற்று அனுபவத்திலிருந்தே முன் செல்ல வேண்டும். தமக்கு எத்தகைய அரசியல் தலைமைத்துவம் தேவை என்பதும் வரலாற்று வழியில் அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

தற்போது முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தளத்தை உறுதிப்படுத்தும் விதமாக தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் தீவிரமான ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது. கடந்த வாரம் "முஸ்லிம் தேசப் பிரகடனம்" என்ற தலைப்பில் தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் பேரவையால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் எழுச்சி ஊர்வலம் முஸ்லிம் தலைமைகளிடையே ஒற்றுமையை வலியுறுத்தியதுடன் முஸ்லிம் அரசியல் தலைமைகள், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகள் நிகழும் இத் தருணத்தில் எடுக்க வேண்டிய அரசியல் நிலைப்பாடுகள் குறித்த அழுத்தங்களை மேற்கொள்வதாய் அமைந்திருந்தது.

இவ்வெழுச்சி ஊர்வலத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளாக:

1. சமஷ்டித் தீர்வில் முஸ்லிம் மக்களின் சுயாட்சி பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

2. வடக்கு கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றத்துக்காக வெளிநாடுகளிடமிருந்து பெறப்படும் நிதி, நியாயமான முறையில் முஸ்லிம் சமூகத்தின் இச் செயற்பாடுகளுக்காகப் பகிரப்பட வேண்டும்

3. பிளவுபட்டிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டும்.

4. பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் பிரதிநிதிகள் சம அந்தஸ்துடன் தனித் தரப்பாக ஒவ்வொரு கட்டத்திலும் பங்குபற்ற வேண்டும்

5. இறுதித் தீர்வுக்கு வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சம்மதம் பெறப் பட வேண்டும்.

என்பன வலியுறுத்தப்பட்டுள்ளன. 1970களின் நடுப்பகுதியிலிருந்து 1980 நடுப்பகுதி வரை, தமிழர்கள் மீதான தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் குறிப்பிடத்தகுந்த ஒரு பாத்திரத்தை வகித்தது. அது ஒரு விமர்சகராகவும், ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், மனித உரிமை, ஜனநாயகத்திற்குக் குரல் கொடுப்பதாகவும் செயற்பட்டது.

1980 களின் நடுப்பகுதிக்குப் பின் யாழ் பல்கலைக் கழகத்தின் குரல் வெற்றிகரமாக நசுக்கப்பட்டது. இதன் மூலம் சமூகத்துடன் சம்பந்தமில்லாத தனித் தீவாக அது மாற்றப்பட்டது. தற்போது அது சுயாதீனமாகச் செயற்பட முடியாததாக, சில மறை கரங்களின் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் இழுபட வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஆனால் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு தற்போதைக்கு அப்படியான துரதிர்ஸ்டம் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டும் ஒரு நிறுவனமாக அது செயற்படுவதற்கு நிறையவே வாய்ப்புண்டு.

உலகின் சமூகங்களின் விடுதலைப் போராட்டங்களில் பல்கலைக் கழகங்களின் பங்கு மகத்தானது. தென்னாசியாவில் வங்கதேச விடுதலைப் போராட்டத்தில் டாக்கா பல்கலைக் கழகம் வகித்த பங்கை மனங்கொள்ளலாம்.

தற்போது முஸ்லிம் அரசியல் தளத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளைத் தீர்ப்பதில் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியை ஆற்ற வேண்டியிருக்கிறது.

இதேவேளை கடந்த வெள்ளிக் கிழமை மட்டக்களப்பில் வவுணதீவில் அரச-புலிகள் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் சந்திப்பொன்று நிகழ்ந்தது. ஆத்திரமூட்டும் செயற்பாடுகள், முஸ்லிம்களின் முறைப்பாடுகள், ஆட் திரட்டலில் சிறுவர்கள் சேர்க்கப்படுவது குறித்த முறைப்பாடுகள் ஆகியவையை யிட்டு நடந்த இச் சந்திப்பில் முஸ்லிம் தரப்பினர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை எனினும் முஸ்லிம்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டன.

முஸ்லிம் பிரதிநிதிகளும் புலிகளும் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் அதற்கான திகதிகள் இம்மாதம் 7ம் 8ம் திகதிகளில் ஜேர்மனியில் நிகழவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் தீர்மானிக்கப்படுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

இச் சந்திப்பையடுத்து அதில் கலந்து கொண்ட புலிகளின் மட்டக்களப்பு இராணுவத் தளபதி கேர்ணல் கருணா வழங்கிய பேட்டியில் முஸ்லிம் விவகாரத்தைப் புலிகள் சினேகித பூர்வமாகவே அணுகி வருகின்றனரென்றும் ஆனால் சில முஸ்லிம் தலைவர்கள் ஆத்திரமூட்டும் வகையில் பேசி வரு கின்றனரென்றும் முஸ்லிம் தேசம் என்று கூறி தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைக்கின்றனரென்றும் தெரிவித்ததோடு, சம்மாந்துறையில் முஸ்லிம்களிடம் வரி அறவிடப்படுவ தாக முஸ்லிம் காங்கிரஸ் பா.உ.ஹரீஸ் தெரிவித்தது தவறான செய்தியென்றும் கூறினார்.

முஸ்லிம் தேசிய இனம், தேச மென்ற கருத்துருவங்கள், தமிழ் தேசிய இனம், தமிழ் தேசம் என்ற தேசியக் கருத்துக்களைப் போன்ற வையேயன்றிப் பிரிவினையையும் தனி நாட்டையும் கோருபவையாக அர்த்தம் கொள்ளக் கூடியவையல்ல என்பதை கருணா சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதே இதில் தெரிகிறது. அத்துடன் தனித்துவங்களை அங்கீகரிப்பதான அரசியலமைப்பாகவே சமஷ்டி அமைப்பு முறை முன்னிறுத்தப்படும் வேளையில் முஸ்லிம்களின் தனித்துவங்கள் குறித்த புரிதல் இங்கு அவசியப்படுகிறது.

இந் நிலையில்தான் முஸ்லிம் காங்கிரஸ் குறிப்பாக கிழக்கு முஸ்லிம்களின் குரலாக ஒலிக்கத் தொடங்கி வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தலைமையாக மாறி, இலங்கையின் அனைத்துப் பகுதிகளில் வாழும் அனைத்து முஸ்லிம்களின் பிரதான குரலாகப் பரிணாமம் பெற்றது.

1980 களின் நடுப்பகுதியில் முஸ்லிம் தேசியவாதத்தின் பிரதிநிதியாக உருவாகிய முஸ்லிம் காங்கிரஸ் தற்போது அதிகார முரண்பாடுகளினுள் சிக்கித் திணறுகிறது.

தற்போது அதன் வேர்களை நோக்கிய ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கொப்பில் இருந்து அடிமரத்தைத் தறிக்கும் நிலைமை தோன்றியுள்ளது.

பிரதானமாக முஸ்லிம்களின் குரல் எங்கு அழுத்தம் பெற்றதோ அந்த இடம் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். நிலம் சார்ந்த செறிவு, பாதுகாப்பு, பொருளாதாரம், வர்க்கம், மொழி போன்ற அம்சங்களும், இடத்திற்கு இடம் வேறுபடும் பிரச்சினைகளும் கருத்திற்கு எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் அபிலாஷைகள் கனவான் அரசியலுக்கு ஒரு பயன்படு கருவியாக மாறிவிடலாம்.

எப்போதும் தேசிய விடுதலைக்கான சமூக, அரசியல் ஸ்தாபனங்களில் எழும் சில பிரச்சினைகள் உண்டு. அதிகாரம் கொண்ட சிலர் தன்னிச்சையாகச் சில முடிவுகளை மேற்கொள்ள முற்படும்போது, தமது தனிப்பட்ட நலன்கள் சார்பாக, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்ப ஸ்தாபனத்தைச் செலுத்த முற்படும் போதே பிரச்சினைகள் தோன்றுகின்றன. இந்த விடயத்தில் பெருவாரியான மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் தலைமைகளின் ஜனநாயக மத்தியத்துவம், சுயவிமர்சனம், விமர்சனம் என்பன அவசியப்படுகின்றன.

முஸ்லிம் காங்கிரஸினுள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் இந்த வழியில் தீர்வு காணப்படக் கூடியவை.

ஒரு சமூகத்தின் அபிலாஷைகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம் இவ்வாறு பிளவுறும் போது சம்பந்தப்பட்ட சமூகத்தை அது விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளிவிடும். "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ" என்று பாடினான் பாரதி. எனவே நலம் கெடுவதற்கு முன் முஸ்லிம் மக்களின் அரசியல் தலைமைத்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தமது தனித்துவம், உரிமைகளை வலியுறுத்தும் அதேவேளை ஒடுக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் ஜனநாயக சக்திகளுடன் தமது உறவைப் பலப் படுத்த வேண்டும்.

ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் சமூகங்களின் சாதாரண மனிதர்களுக்கு இடையேயானதல்ல, மேலாதிக்க வகைப்பட்டதும், ஒடுக்கப்பட்ட சமூகங்கள் சார்ந்ததும் என்று விளங்கிக் கொண்டு பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும்.

இந்த நாட்டில் பல்லினங்களின் சமத்துவம், ஜனநாயகம், மனித உரிமை என்பன உறுதிப்படுத்தப்படுவதற்கு முஸ்லிம் சமூகமும் தனது உறுதியான பங்களிப்பை வழங்க வேண்டும்.

தமிழ் மக்களின் தலைமைகளுக்கு நேர்ந்த துரதிர்ஸ்டமான நிலை முஸ்லிம் சமூகத்திற்கும் ஏற்படக் கூடாது.

# நம்பியார் அறிக்கை. முறுகலடையும் பிணக்கு!

சதீஸ் நம்பியார் அறிக்கை கடந்த வாரம் சர்ச்சைக்குரியதாகியிருந்தது. அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததாக வெளிவந்திருந்த விடயங்கள் குறித்து புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து அவற்றைத் தாம் முழுமையாக நிராகரிப்பதாகத் தெரிவித்திருந்தார்.

தற்போது இலங்கை வந்துள்ள நம்பியார் கடந்த சனிக்கிழமை இந்திய உயர் ஸ்தானிகர் நிருபன் சென்னைச் சந்தித்துவிட்டு மறுநாள் அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவையும் அதையடுத்து முப்படைத் தளபதிகளான இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சாந்தகிரி, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் றொனால்ட் பெரேரா ஆகியோரையும் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவையும் சந்தித்து உரையாடியுள்ளார். அடுத்த சில நாட்களில் யாழ்ப்பாணம் சென்று மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட பாதுகாப்புப் படை உயரதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார்.

நிச்சயமாக இந்தச் சந்திப்புகள் அனைத்தும் சம்பிரதாய பூர்வமானதல்ல. அவரிடம் கோரப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெயர்ந்த மக்களைக் குடியேற்றுவது தொடர்பான அறிக்கைக்கு அவசியமான விடயங்களே இங்கு முக்கியத்துவம் பெறப் போகின்றன.

புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப கட்டத்திலேயே இடம்பெயர்ந்தவர்களைக் குடியேற்றுவது பற்றிய விடயம் அக்கறைக்குரியதாக எடுக்கப்பட்டிருந்தது. அத்தோடு பாதுகாப்புப் படைகள் நிலைகொண்டுள்ள பொதுமக்களின் இருப்பிடங்கள், கோயில்கள், பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து அவை விலக்கிக் கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை சம முக்கியத்துவமுடைய விடயமாக இருந்தது. அரசாங்கத்துக்கு மிகச் சிரமமான காரியமாக இது இருந்தாலும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டதற்கமைய சிறிது காலம் கடந்தாவது அவற்றில் ஏறத்தாழ அனேகமான இடங்களிலிருந்து படைகளை விலக்கிக் கொண்டிருந்தனர்.

இதனால் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை வீண்போகாத நிலையில், பேச்சுவார்த்தைகளுக்கு இட்டுச் செல்லும் சுமுக மனநிலை இரு தரப்புக்கும் இடையில் நிலைபெற்றது.

பேச்சுவார்த்தையின் ஆரம்பத்தில் இரு தரப்பும் மறு தரப்பினரை வானளாவப் புகழாத குறையாகப் புகழாரம் சூட்டிக் கொண்டனர்.

ஆனால் பேச்சுவார்த்தைகளின் நகர்வுடன் திரும்பவும் சிக்கலான விடயங்கள் கால்களில் சிக்கிக்கொள்ளத் தொடங்கியது.

அதில் ஒரு முக்கியமான சிக்கலாக எழுந்த விடயம்தான் உயர் பாதுகாப்பு வலயப் பிணக்கு.

பேச்சுவார்த்தையின் போது ஈட்டிய சில விளைவுகளில் ஒன்றாக மூன்று உப குழுக்கள் அமைக்கப்பட்டன.

புனர்வாழ்வு, புனர் நிர்மாணம், அபிவிருத்தி ஆகியவற்றைக் கையாளும் உபகுழு ஒன்றும், பாதுகாப்பு விவகாரங்களை ஆராயும் உபகுழு ஒன்றும் அரசியல் விவகாரங்களை ஆராயும் உபகுழுவொன்றுமாக இவை அமைக்கப்பட்டன.

இவற்றில் அரசியல் விவகாரங்களை ஆராயும் உபகுழு இன்னும் தனது செயற்பாட்டை ஆரம்பிக்கவில்லை. - இன்னும் பிற நாடுகளின் சமஷ்டி அமைப்பு பற்றிய படிப்பை பேச்சுவார்த்தைத் தரப்பினர் முடிக்கவில்லை.

புனர்வாழ்வு... தொடர்பான உபகுழு மட்டும் சர்வதேச நாடுகள், உலக வங்கி, மற்றும் இதர ஸ்தாபனங்களின் ஈடுபாட்டுடன் உற்சாகமாக செயற்பட்டு வருகிறது.

ஆனால் பாதுகாப்பு உபகுழு ஆரம்ப கட்டங்களில் இருதரப்பு இராணுவத் தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களால் இடறுண்டு இறுதியில் புலிகளால் கைவிடப்பட்டுள்ளது.



உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக எடுக்கப்பட்ட விடயமே இதன் மூல காரணமாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயமென இராணுவத்தினர் பொதுமக்களின் பெருமளவு நிலங்களை அபகரித்துள்ளனரென்றும் அவற்றில் அம் மக்களைத் திரும்பக் குடியேற அனுமதிக்க வேண்டுமென்றும் புலிகள் வலியுறுத்தினர்.

அப் பகுதியில் வாழ்ந்த பொதுமக்கள் இதுபற்றி இப்போது அலட்டிக் கொள்ளவில்லை, பேச்சுவார்த்தைகளில் அரசியல் தீர்வு காணப்பட்டு இனிமேல் யுத்தத்துக்கு அவசியமில்லை என்பது நிச்சயமான பின்னர் இவ் விடயங்களை இராணுவம் கைவிடுவதில் சிரமமில்லை. தற்போது நிச்சயமற்ற நிலையில் தமது பாதுகாப்பு அரண்களை தளர்த்துவதென்பது, மீண்டும் புலிகள் திடீர் யுத்தத்திற்கு இறங்கினால் இராணுவத் தரப்பை நிர்க்கதிக்குள்ளாக்கிவிடும். எனவே இக் கோரிக்கைக்கு இணங்க முடியாது - இது இராணுவத்தின் வாதம்.

புலிகளோ, இது முற்று முழுதாக இராணுவ விவகாரமல்ல, மனித நேய விவகாரம் என்று உயர்த்திக் கூறலாயினர்.

அப்படியானால் சில நிபந்தனைகளை ஏற்க வேண்டுமெனக் கூறிய யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, புலிகள் தமது நீண்ட தூர ஆயுதங்களை கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பில் வைக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்தார்.

இதனை ஆயுதக் களைவு முயற்சியாகக் கூறி முற்று முழுதாக நிராகரித்தனர் புலிகள்.

இதேவேளை, இராணுவச் சமநிலையில்தான் இரு தரப்பும் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளனரென்றும் எனவே எத்தரப்பையும் பலவீனப்படுத்தும் நிபந்தனைகளை விதிக்கலாகாதென்றும் கூறி கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புறுப் ஹொவ்டே, புலிகளின் கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

இந் நிலையில்தான் இம் முட்டுக்கட்டை நிலையைப் போக்க கடந்த நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் நடுநிலையான சர்வதேச ஆலோசகர் ஒருவரின் ஆலோசனையைப் பெறுவதாக புலிகளும் அரசாங்கமும் உடன்பட்டு, முன்னாள் இந்திய இராணுவத்தின் பதில் தளபதியான இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியாரை உயர் பாதுகாப்பு வலயப் பிணக்கைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளைத் தரும்படி கோரியிருந்தனர்.

இதனடிப்படையில் வடக்கு நிலைவரங்களை மதிப்பீடு செய்து நம்பியார் தயாரித்த அறிக்கை தொடர்பாக வெளிவந்த விடயங்களே இப்போது மீண்டும் புலிகளின் ஆட்சேபனைக்கு உள்ளாகியுள்ளது.

நம்பியாரின் அறிக்கை இன்னும் முழுமையாகக் கையளிக்கப்படாத நிலையில் அதில் உள்ளடங்கியுள்ள விடயங்களெனச் சில வெளியே கசிந்துள்ளன. அவை புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் கைகளுக்கும் எட்டியிருந்தன.

அவற்றில் புலிகளின் கனரக ஆயுதங்கள் மூன்றாம் தரப்பு நடுநிலையாளர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும், புலிகளின் முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் பின்னே நகர்த்தப்பட வேண்டுமென்றும் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தியே பாலசிங்கத்தின் கோபாவேசத்துக்குக் காரணமாக இருந் தது.

இது யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் நிபந்தனைகளை விட ஒருபடி அதிகமானதாக உள்ளதெனப் புலிகள் விசனிக்கின்றனர்.

நம்பியாரின் அறிக்கை குறித்து பாலசிங்கம் வழங்கிய பத்திரிகைப் பேட்டியில், இடம் பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பும் உரிமையை எவரும் மறுக்க முடியாது. அது பாரிய மனித உரிமை மீறல். அகதிகளை மீள் குடியேற்றும் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையை இராணுவப் பிரச்சினையாக்கி, பின்னர் அதை ஒரு இராணுவ சமநிலை விவகாரமாக மாற்றி, அதனால் இராணுவத்துக்குப் பங்கம் விளையலாமென ஜெனரல் நம்பியார் கருதுகிறார். இதே கருத்தையே யாழ். இராணுவத் தளபதி ஜெனரல் பொன்சேகாவும் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் புறுப்ஹோவ்டேயும் முன்வைத்திருப்பது கவனத்தில் கொள்ள வேண்டியது. இடம்பெயர்ந்தவர்களை சொந்த வீடுகளுக்குத் திருப்பி அனுப்பும் விவகாரத்தை வன்னிக் காடுகளில் முகாம்களில் முடங்கிக் கிடக்கும் எமது படையணிகளின் ஆயுதக் குறைப்புடன் தொடர்புபடுத்த முனைவது அபத்தமானதும் கேலிக்கூத்தானது மாகும். அகதிகள் மீளக் குடியேறுவதைச் சாக்காக வைத்து புலிகளின் ஆயுதங்களைக் களையலாமென எவரும் கருதினால் நாம் அதை மூர்க்கமாக எதிர்த்தே தீருவோம். ஆயுதக் களைவு நிபந்தனையாக வைக்கப்பட்டால் அப்படியான யோசனைகளையும் நிபந்தனைகளையும் பரிசீலனைக்கு எடுக்காமலே நாம் நிராகரித்து விடுவோம், எனத் தெரிவித்திருந்தார்.

எனினும் நம்பியாரின் அறிக்கையின் பூரண விபரம் இன்னும் வெளியாகாத நிலையில் கசிவுகளுக்கே இத்துணை கடும் எதிர்ப்பை வெளிக்காட்டும் புலிகள் இவ்வறிக்கையை ஏற்க மறுக்கும் பட்சத்தில் அடுத்த பேச்சுவார்த்தைகள் எப்படி நகரப்போகிறது என்பதே இங்கு எழுந்துள்ள கேள்வி. ○

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

*Sterling* SERIES

மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**
**184-A, Havelock Road, Colombo-05.**
**Tel :01-507334**

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

**NUHA EDUCATION CENTRE** வழங்கும் **ஆங்கில வகுப்புக்கள்**

**தரம் -01 முதல் 11 வரையான மாணவர்ளுக்கு தனியாகவும் குழுவாகவும் மற்றும் தரம் 01- 06 வரை எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படும்.**

ஆங்கிலம், பேச-Speaking, வாசிக்க-Reading, எழுத-Writing, மூன்று பாஷைகளில்

**No. 40, 33rd Lane, Wellawatta, Colombo-06.**

கண் வைத்திய
நிபுணர் மூலம்
கண் பரிசோதனை செய்து
விரும்பிய வகையிலான
பிறேம்களைக் கொண்ட
மூக்குக்
கண்ணாடிகளை
குறைந்த
செலவில்
பெற்றுக் கொள்ள
ஒரே நிறுவனம்



விழி உங்களிடம்
அதன் ஒளி
எங்களிடம்

**அப்பலோ ஒப்ரிசியன்**

(ஹட்டன் நஷனல்
வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

**APPOLO OPTICALS**

No.298A,
George R.De Silva Mw.
(Khairaz Complex)
Kotahena, Colombo-13.
T.P: 074-610459

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை
சந்தோஷமாக்குங்கள்.
காண்டம் என்னும் நாடி
ஜோதிடத்தில் உங்கள்
பலாபலனை தெளிவாக
அறிந்து எல்லாப்
பிரச்சனைகளையும்
தீர்ப்பதற்கு வழிகண்டு
இறையருள் அருளால் நன்மை
பெறுங்கள். நேரில் வரவும்.
வெளி நாட்டில்
உள்ளவர்களும்
தொலைபேசியில் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.


**S.Mani**

**142-2/4, காலி வீதி,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு-06.**
சந்தைக்கு
எதிர்ப்பக்கமாக

**Tel: 074-519754**


# 60ம் நாள் நினைவுப் பூக்கள்

தோற்றம் : 24 . 08 . 1923




மறைவு : 12 . 12 . 2002

## அமரர் தம்பு அமிர்தலிங்கம்

**(ஜப்பான் சின்னத்துரை, தொண்டமானாறு)**

எந்தையே நீ எமைவிட்டுப் பிரிந்தின்றறுபது
இரவுகள் அழுதழுது அகன்று விட்டன.
முந்தையில் நீ எமக்காய் நின் சுகம் பாராது
உறவுகள் வளர உழைத்துழைத்து ஓய்ந்தாய்.
உன் கடன் தீர்க்க ஓடி வரவும் முடியாமல்
வன் கடல் கடந்து வாழ்கின்றோம் கண்ணீரில்.
தனக்குவமை இல்லாதான் தாள் நீ சேரத் தவமிருக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்,
வி.எம். வீதி, பருத்தித்துறை.
தகவல்: ரி.ஏ. ரூபன் (மகன்), ஜேர்மனி.
தொ.பே.: 0049-1719409909



# கண்ணீரில் கரைந்த ஓராண்டு நினைவஞ்சலி

**அன்னை மடியில்: 13.06.1959 (இலங்கை)**

**ஆண்டவன் அடியில்: 08.02.2002 (கனடா)**

## திரு. பொன்னுத்துரை நனோராஜன் (ராஜன்)

*அரியாலை-யாழ்ப்பாணம்*

என் வானத்துச் சூரியனே!
உன் ஒளியின்றிப் பன்னிரு
மாதங்கள் உன் தம்பி-இருளில்.

தகவல்:- தம்பி ஸ்ரீ (பிரான்ஸ்)

# வீரம் விளை நிலம் விளைவித்த சர்ச்சை!

கிழக்கின் வழமை நிலைமைகளில் சகஜ வாழ்வில் எதிரும் புதிருமானதும் மட்டுமன்றி திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் சமாதானத்திற்கெதிரான, பாரிய விளைவுகளை உருவாக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவது கவலை கொள்ளத் தக்கதாக அமைந்துள்ளன.

மட்டக்களப்பு நகரை வரவேற்கும் பிள்ளையாரடியில் அமைக்கப்பட்டிருந்த 'வீரம் விளைநிலம்' வரவேற்கிறது, வரவேற்புப் பலகை கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மத்தியில் பெரும் பதற்றத்தையும் எதிர் விளைவுகளை உருவாக்கிவிடுமோ என்ற அச்சத்தையும் தோற்றுவித்தது.

மட்டக்களப்பு அபிவிருத்திக் குழுவினரால் அமைக்கப்பட்டிருந்த இந்த வரவேற்புப் பலகையில் புலிகளின் படம் வரையப்பட்டு 'வீரம் விளைநிலம் அன்புடன் அழைக்கின்றது' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

இந்த வரவேற்புப் பலகை குறித்து, அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அமைச்சர் மிலிந்த மொரகொடவின் கவனத்திற்கு பாதுகாப்புப் படையினரின் உயர் மட்டமும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தலைமைப்பீடமும் முறையிட்டிருந்தது.

இதனையடுத்து இந்த வரவேற்புப் பலகையை 24 மணி நேரத்துக்குள்



கிழக்கான்

அகற்றுமாறு அமைச்சர் மிலிந்த மொரகொட பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டதுடன் இந்த வரவேற்புப் பலகை சமாதான உடன்படிக்கைக்கு எதிர்மாறானது என்றும் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் மிலிந்த மொரகொடவின் உத்தரவையடுத்து இந்த வரவேற்புப் பலகை இருந்த பிள்ளையாரடிக்குப் பல வாகனங்களில் சென்ற பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் அதனை அகற்றி நீதிமன்றில் ஒப்படைக்கக் கொண்டுவந்த போது வீதிக்குக் குறுக்கே முற்றுகையிட்ட பொதுமக்களும் புலிகளின் மட்டு அரசியல் பொறுப்பாளரும் அதனைத் தடுத்து நிறுத்திய போது பெரும் களேபரம் உருவானது.

படையினருக்கும் புலிகள் மற்றும் பொதுமக்களுக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு முறுகல் நிலை உருவானதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலையிட்டு, குறிப்பிட்ட வரவேற்புப் பலகையை மட்டக்களப்பு அபிவிருத்திக் குழுவினரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து மறுதினம் காலை குறிப்பிட்ட வரவேற்புப் பலகை அதே இடத்தில் நாட்டப்பட்டது.

இது தொடர்பாகப் பாதுகாப்புப் படையினர் கொழும்பிலுள்ள அரச உயர்மட்டத்துக்குத் தெரிவித்ததையடுத்து மீண்டும் அவ்விடத்திற்குப் பெருமளவு வாகனங்களில் சென்ற படையினரும் பொலிஸாரும் 'வீரம் விளைநிலம்' வரவேற்புப் பலகையை அகற்றி அதை அழித்துள்ளனர். இந்தச் சம்பவம் புலிகளால் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்ட போதிலும் படைத் தரப்பினர் அது குறித்து அக்கறை கொள்ளவில்லை. இது முறுகல் நிலை ஒன்றுக்கு வழிவகுத்துள்ளதை எவரும் மறுதலிக்க முடியாது.

இது இவ்வாறிருக்க, திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசமான கோபாலபுரம் பகுதியில் கடற்படையினர் அமைத்து வரும் புதிய முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கை மீண்டும் ஒரு புதிய சிக்கலைக் கிழக்கில் தோற்றுவித்துள்ளது.

இந்தக் கடற்படை முகாம் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் பொதுமக்களின் வாழ்விடங்களுக்கு அச்சம் ஊட்டுவதாகவும் இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

தினமும் கிழக்கில் ஏதாவது ஒரு அச்சமூட்டும் சம்பவம் நிகழ்ந்த வண்ணமேயுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் பொதுமக்கள் மத்தியில் சமாதானம் குறித்த நிகழ்வுகளில் சலிப்பூட்டுவதாகவே அமைந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# ஈராக் யுத்தத்துக்கு அமெரிக்கா வகுக்கும் வியூகம்!

அமெரிக்காவைப் பிருத்தானியர்கள் கைப்பற்றியபோது அமெரிக்காக் கண்டத்தின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களின் அழிவு ஆரம்பமாகியது. இந்த வரலாற்றுத் துயரம் நடைபெற்று நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் தற்போது அதே விதமான இயல்புடன் 21ஆம் நூற்றாண்டிற்கேயுரிய அதிநவீன யுத்த உபகரணங்களுடன் மேற்காசிய மண்ணில் காலடி வைத்துள்ளார்கள். இங்கு இருக்கக் கூடிய அடிப்படையான பிரச்சனை என்னவென்றால் அங்கு வாழும் மனிதர்களை விட எண்ணெய் முக்கியமானதாகப் போய்விட்டது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலக மேலாதிக்கம் பெற்ற அமெரிக்கா, சோவியத் யூனியனும் கிழக்கைரோப்பிய நாடுகளும் ஒரு கூட்டணியாக இருந்தபோது அடக்கி வாசிக்க வேண்டிய நிலையே காணப்பட்டது.

மூன்றாம் உலக நாடுகளும் பலம் பொருந்திய அணிசேரா அமைப்பாக அணிதிரண்டு நின்றன. எனவே உலகளாவிய ஒரு வித சம நிலை காணப்பட்டது.

1990 இற்குப் பின் அமெரிக்க இராணுவ, பொருளாதார நிலை ஏகபோகமானதாக மாறிவிட்டது.

ஐ.நா.வின் ஆயுத சோதனைக் குழுவின் தலைவர் ஹான்ஸ் பிளிட்ஸ் "ஈராக்கின் மீது போர் தொடருவதற்கான பேரழிவு ஆயுதங்கள் எதுவும் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

இதற்குப் பின்னரும் அமெரிக்காவும் பிரிட்டனும் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு அந்த நாடுகள் கூறிய காரணங்களுக்கே ஆதாரங்கள் இல்லை என்று ஆகிவிட்டது.

எனவே யுத்தம் எண்ணெய்ச் சூறையாடலுக்கானது என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

முழு உலகையும் புறக்கணித்துக் கொண்டு- உதாசீனப்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்படும் யுத்தம், அதன் வெற்றி தோல்விகளில் உருவாகும் மனோபாவம் பாரதூரமான விளைவுகளை உலகளாவிய அளவில் ஏற்படுத்தலாம்.

அமெரிக்கர்களின் உணர்வுகளுக்கு முன்னால் அல்லது அவர்களின் விருப்பங்களுக்கு முன்னால் மற்றவர்களின் உணர்வுகள் ஒரு பொருட்டல்ல என்ற நிலை உருவாக்கப்பட்டது.

உலகின் பலம் பொருந்திய நாடுகள் என்று சொல்லப்பட்டவை, அமெரிக்காவுடன் கூட்டமைத்து அல்லது சார்ந்து அல்லது முரண்படாமல் வாழ்வது என்ற பல்வேறு விதமான போக்குகளைக் கடைப்பிடித்தன. வார்சோ கூட்டணிக்குத் தலைமை வகித்த சோவியத் யூனியனும் கிழக்கைரோப்பாவும் அமெரிக்காவிடம் தமது பொருளாதாரத் தேவைகளுக்காக இரந்து நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

எனவே எதிர்ப்புக்கள் எதுவும் பெரிதாகக் கிளம்பாத நிலையில் தாம் நினைத்தவாறு உலகின் வளங்களைக் கவர்ந்து கொள்ளல் என்ற போக்கு இந்தப் பத்து ஆண்டுகளில் நன்கு வளர்ச்சி பெற்றுவிட்டது.

அவர்கள் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் வெவ்வேறு நாடுகளுடன் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும். கியூபாவிற்கு நிரந்தரப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. போதாக்குறைக்கு ஆப்கானிஸ்தானில் பிடிக்கப்பட்ட கைதிகள் கியூபாவில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மத்திய ஐரோப்பாவில் செர்பிய, கொசோவாப் பிரச்சனைகளின் போது அமெரிக்க விமானங்களின் குண்டுகள் சீனத் தூதரகத்தின் மீதும் வீழ்ந்தன. அது தற்செயல் நிகழ்ச்சி என்று சொல்லப்பட்டது.

சீனா, வடகொரியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் உள்ள அணு ஆயுத தொழில் நுட்பம் பற்றி, அளவுக்கு மிஞ்சிய கவலையை அமெரிக்கா வெளிப்படுத்தி வருகிறது. அணு ஆயுதப் பரவல் தொடர்பான ஒப்பந்தங்கள், இந்த நாடுகள் அணுசக்தியை உற்பத்தி செய்யக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வின் வெளிப்பாடுகளே.

உலக நலன் என்பதற்கு மாறாக அமெரிக்க நலனை- பொருளாதார மேலாதிக்க சக்திகளை முன் நிறுத்தியே அமெரிக்க நிர்வாகம் உலகை நோக்குகிறது.

உலகம் என்பது உலக மக்களின் நுகர்வுக்கானது என்பதற்கு மாறாக, உலகம் அமெரிக்காவின் நுகர்வுக்கானது என்பதை அவர்கள் தமது நடைமுறையில் வெளிப்படுத்துகிறார்கள்.

அமெரிக்கப் பேராசிரியர் சோம்ஸ்கி "மனிதனின் விபரீதமான இத்தகைய வளர்ச்சி என்பது ஒரு உயிரியல் குளறுபடியா?" என்ற வினாவையும் எழுப்புகிறார்.

வளங்களைப் பகிருதல், சேர்ந்து வாழுதல் என்பவற்றுக்கு மாறாக, உலகின் ஒரு பகுதியில் மக்களின் வாழும் உரிமையை மறுப்பது, மனித குலத்தின் எதிர்காலம் தொடர்பான அச்சம் நிறைந்த கேள்வியை எழுப்புகிறது.

ஓசோனில் விழுந்த ஓட்டை,பெரு வனங்களின் அழிவு, சமுத்திரங்கள் மாசடைதல், வளியில் நஞ்சேறல், நன்னீர் வளம் வற்றிப்போன நிலை, பஞ்சம், எய்ட்ஸ் போன்றவற்றை உலகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கையில் ஈராக்கிற்கெதிரான பெரும் எடுப்பிலான யுத்த முனைப்புக்களை என்னவென்றழைப்பது?

எமது பிரதேசங்களில் நடைபெற்ற யுத்தமே நிலத்தடி நீரை மோசமாகப் பாதித்துவிட்டது என்பது ஜேர்மன் தொழில் நுட்பவியலாளர்களின் கருத்து.

எனவே உலக வல்லாதிக்க சக்திகளினால் நடத்தப்படும் நவீன யுத்தம் மனிதர்களின் வாழ்வை மாத்திரமல்ல வாழ்வாதாரங்களையும் அழித்துவிடும்.

"முதலாளித்துவம் எல்லா மனித உறவுகளையும் வெறும் பணப் பட்டுவாடாவாக மாற்றிவிடும்" என்று கார்ல் மார்க்ஸ் தெரிவித்திருந்தார். ஆனால் இன்று உருவாகியிருக்கும் உலகளாவிய முதலாளித்துவம், உலகில் உறிஞ்சி எடுப்பதற்கு ஏதாவது எங்காவது புதையுண்டிருந்தால் மனித குலத்தை அழித்தாவது அதனை எடுத்துவிடுவது என்றுதான் சிந்திக்கிறது.

தாம் விரும்பியபடி உலக நாடுகளை வளைத்துப் போடலாம் அல்லது நிர்மூலம் செய்யலாம் என்பதே அது.

இந்த யுத்த நெருக்கடி இலங்கையின் சமாதான முயற்சிகளை சமூக பொருளாதார வாழ்வைப் பாரதூரமான நெருக்கடிக்குள் தள்ளிவிடலாம்.

ஏற்கனவே கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கும் விலைவாசிகள் வானத்தில் பறக்கத் தொடங்கிவிடும். தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி என்பன மோசமாகப் பாதிக்கப்படும். மலையகத் தொழிலாளர்களின் வாழ்வு நேரடியாகப் பாதிக்கப்படும். யுத்த சூழ்நிலையில் மேற்காசியாவிலும் மத்திய கிழக்கிலும் வேலை செய்பவர்கள் நாட்டுக்குத் திரும்ப நிர்ப்பந்திக்கப்படலாம். இதனால் லட்சக் கணக்கான குடும்பங்கள் வாழ்வாதாரங்கள் எதுவுமின்றித் தவிக்க நேரிடும். உல்லாசப் பிரயாணத்துறை, ஏற்றுமதி, இறக்குமதி, பங்குச் சந்தை எல்லாமே பாதிக்கப்படும். போக்குவரத்து, மின் விநியோகம், தொழில்துறை, விவசாயம் என்பன எரிபொருள் தட்டுப்பாட்டால் ஸ்தம்பிதம் அடையலாம். இலங்கை போன்ற ஒரு வறிய நாட்டிற்கு உள்நாட்டில் நடைபெற்ற யுத்தத்தை விட மோசமான விளைவகளை ஏற்படுத்தக் கூடியது இந்த மேற்காசியாவில் ஏற்படக் கூடிய யுத்தம்.

எனவே எமது நாடு யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக இந்தியா போன்ற நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

**தாகூர்**

இது எமக்குச் சம்பந்தமில்லாத பிரச்சனை என்று நாம் அலட்சியமாக இருந்து விட முடியாது. தற் போதைய உலகமயமாக்கல் நிலைவரங்களில் உலக வலைப்பின்னலில் எங்கேயோ ஒரு கண்ணியில் ஏற்படும் பிரச்சனைகள் நமது நாட்டு மக்களையும் பாதிக்கும்.

எனவே உலகைப் பங்கு போடுவதற்கான மூன்றாம் உலக யுத்தத்திற்குரிய கூறுகளைக் கொண்ட இந்த முன்னெடுப்புக்கள் தொடர்பாக இலங்கையர்கள் அலட்சியமாக இருந்துவிட முடியாது.

உலகில் ஆங்காங்கே ஈவிரக்கமற்ற மனிதப் படுகொலைகள் நடத்தும் மத, இன அடிப்படைவாதக் குழுக்களின் பயங்கரவாதத்துடன் ஒப்பிடுகையில் மனித குலத்திற்குப் பெருநாசம் விளைவிக்கக் கூடிய, தற்போது தோன்றியிருக்கும் பேரபாயத்தைத் தணிப்பதற்குரிய வரலாற்றுப் பணியை முன்னின்று செய்ய வேண்டியது அமெரிக்கா-ஐரோப்பாவின் சராசரி மனிதர்களின் பணியாகும்.



# அதிரடி அய்யாத்துரை

***ஒரு ஆணின்ர*** வெற்றிக்குப் பின்னாலை ஒரு பெண் இருக்கிறாள் எண்டு சொல்லுறதை நீங்கள் நம்புறியளெண்டால் தோல்விக்குப் பின்னாலையும் பொம்பிளை இருக்கலாமெண்டதை நம்பத்தானே வேணும்! பேச்சுவார்த்தைக்கெண்டு வெளிநாடு போன யாழ்ப்பாணப் பொறுப்பாளரும் கிழக்குப் பொறுப்பாளரும் அங்கை ஆதரவாளர்கள் கூட்டங்களிலயும் கலந்துகொண்டு திரும்பினவையெல்லோ? அதுக்குப் பிறகு வெளிநாட்டுத் தமிழ் ஊடகப் பெண்மணி சொன்னவவாம், "கிழக்கார்தான் பாஸ்' எண்டு. "என்னமாய் பேச்சுத் தமிழில வெளுத்து வாங்கிறான். வெளிநாட்டில செல்வாக்கை எடுக்கிறதுக்கும் காசு சேர்க்கிறதுக்கும் கிழக்கான்தான் சரியான ஆள்" எண்டு அவ சேர்டிபிகேட் குடுத்திருக்கிறா. அவை திரும்பி வந்த கையோடை இங்கை கிழக்காரின் உப குழுவைக் கலைச்சாச்சு. இனி வெளிநாடு போனாலும் அங்கை கூட்டங்களில பேசக் கீசக் கூடாதெண்டும்... ஏன் இங்கையே அடக்கி வாசிக்கவும் சொல்லியாச்சு.

***யாழ்ப்பாண*** நூலகம் கட்டி முடிச்சாச்சு. புத்தகங்கள் தளவாடங்களெல்லாம் தனித் தனியாச் சேர்த்து வைச்சிருக்கு. நூலகத்தை 'கொம்பியூட்டரைஸ்' பண்ணவும், 'மைக்ரோ கசற்' பண்ணவும் வசதி செய்ய யூனிசெவ் சம்மதிச்சிருக்கு. ஆனால் சனம் அந்த நூலகத்தைப் பயன்படுத்திற வாய்ப்பு இழுபட்டுப் போகக் காரணம் ஆர் திறந்து வைக்கிறது எண்ட பிரச்சினைதானாம்! தான் திறக்கோணுமெண்டு பிரதமரும், இல்லை தானெண்டு புனர்வாழ்வமைச்சரும், "எரிச்சவையையே பிறகும் திறக்க விடுறதோ? அதை மேயரே திறக்கட்டும் எண்டு அங்கையிருக்கிற நூலக ஆலோசனைக் குழுவும் சொல்லுகினமாம்! அட, ஆரெண்டாலும் கெதியாத் திறவுங்கோப்பா! சண்டைச் சத்தம் இல்லாமலிருக்கிற இந்த நேரத்தில சனம் போயிருந்து படிக்கட்டும்.

கிழக்கு மாகாணத்தில "வீரம் விளைநிலம்" வரவேற்புப் பலகையை சமாதான ஒப்பந்தத்துக்கு விரோதமானதெண்டு, சமாதான ஒப்பந்தத்துக்கு அடிகோலின அமைச்சரே தூக்கி வீசச் சொல்லி, அதத் திரும்ப நட்டு, திரும்பவும் படைகள் போய் எரிச்ச சம்பவம் டென்ஷனக் கிளறியிருக்கிறது ஒருபக்கமிருக்க, இதுக்கு எதிரா நடந்த கம்பஸ் மீட்டிங்கில புலிகளும் மக்களும் ஒண்டுதான் எண்டு குரலெழுப்பியிருந்தது நம்ம பொதுமகன் ஒருத்தரக் கொஞ்சம் யோசிக்க வைச்சுட்டுதுங்கோ. அதாகப்பட்டது, புலிகள் செய்வது மக்கள் செய்வதெண்டால், மக்கள் செய்வதும் புலிகள் செய்வதுதான் எண்டு மாறியடிக்கப் போகுதெல்லே. யாழ்ப்பாணத்தில மக்கள் எண்ட பெயரில நடக்கிற எதிர்ப்புக்கள் எல்லாம் இப்ப இவையின்ர தலையில கொட்டப்போகுதேயெண்டு கவலைப்பட்டுச் சொன்னார் கூட்டத்தில நிண்ட ஒருத்தர். அப்பாவி மனிஷன், இப்பிடியெல்லாம் குடைஞ்சு பாக்கிற புத்தி எப்பவோ சனத்துக்கு உறைஞ்சு போட்டுதெண்டது தெரியேல்லை போல கிடக்கு. புலிகள் செய்யிறதுக்கெல்லாம் மக்கள் பொறுப்பு. மக்கள் செய்யிறதுக்கெல்லாம் புலிகள்தான் பொறுப்பெண்டு யார் சொன்னது? காகம் கறுப்பு, கறுப்பெல்லாம் காகமில்லை, சிம்பிள் தியறி!

# ஸ்போர்ட்ஸ்

## சூதாட்டம் நடத்தினால் ஆயுட்காலத் தடை

இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளின் போது ஆட்ட நிர்ணய சதியுடன் சம்பந்தப்பட்டால் குறிபிட்ட வீரரை ஆயுட்காலப் போட்டித் தடைக்கு உட்படுத்தப் போவதாகச் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிவித்துள்ளது.

சூதாட்டக்காரர்களுடன் தொடர்புகளை வைத்திருந்ததாகப் பிடிபட்டால் விளைவு என்ன என்பதைக் கிரிக்கெட் வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறோம். இவ்வாறான குற்றச்சாட்டு ஒன்றில் சிக்கினால் ஆயுட்காலத் தடையை எதிர்நோக்க வேண்டிவரும் என்று ஐ.சி.சி. முக்கியஸ்தர் ஒருவர் கூறியதாகத் தென்னாபிரிக்காவில் வெளியாகும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## கென்யாவை விடுத்து வேறிடத்தில் நடத்த ஆலோசனை!

கென்யாவில் நடைபெறவிருக்கும் போட்டிகளில் பங்குகொள்ளப் போவதில்லை என்று நியூசிலாந்து அணி அறிவித்திருக்கும் நிலையில் அங்கு நடத்தவிருந்த போட்டிகளை இடம் மாற்றுவது குறித்து ஐ.சி.சி. ஆராய்ந்துள்ளது.

முன்னதாக சிம்பாப்வேயில் ஆட முடியாதென இங்கிலாந்து அணி மறுத்தது. பின்னர் கென்யாவில் நடக்கும் போட்டிகளில் ஆட முடியாதென நியூசிலாந்து அறிவித்தது.

இந் நிலையில் உலகக் கிண்ணப் போட்டிகளின் முக்கிய ஆட்டங்கள் பல நடைபெறாமல் போட்டித் தொடர் பிசுபிசுத்துப் போகலாம் என்ற கவலை ரசிகர்களை ஆட்கொண்டுள்ளது.

எவ்வாறெனினும் கென்யாவின் தலைநகரான நைரோபியின் பாதுகாப்பு நிலைமைகளைக் காரணம் காட்டியே நியூசிலாந்து அணி அங்கு விளையாட முடியாதெனக் கூறியது. இது தொடர்பாகப் பரிசீலிப்பதாக ஐ.சி.சி. திங்களன்று அறிவித்திருந்தது.

இதே வேளை நைரோபியில் நடக்கும் போட்டிகளில் கலந்து கொள்வது குறித்துத் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாதென இலங்கை அணியின் தலைவர் சனத் ஜயசூரிய கூறியிருக்கிறார்.

## மௌனத்தை மொழிபெயர்த்துவிடு! நனைவது விழிகள் மட்டுமல்ல உன் நினைவுகளும்....

வசந்தத்தின் காலைப்பொழுது மரங்களில் சில புதுக் கொழுந்து விட்டு உடம்பெல்லாம் பனித்துளி முத்து நகையணிந்து காலைக் கதிரவனின் பொற்கிரணங்களில், கணவனால் தொடப்பட்ட முதலிரவுப் பெண் போல வெட்கிச் சிவந்து நின்றன. செண்பக மரங்களாலும் அதன் மலர்க்கொத்துகளாலும் மறைக்கப்பட்டிருந்த அருவி சலசலப்பாகச் சிரித்து விளையாடிக் குதித்து ஓடிக்கொண்டிருந்தது.

கரையில் ஒரு மரத்தின் வேரில் அமர்ந்திருந்தான் உதயன். சுற்றுப்புறத்தின் குளுமை அவன் இதயத்தினுள்ளேயும் சென்று நிரம்பியது. சிலிர்ப்போடு கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டிக் கொண்டான்.

நாளை இந்த நதியை, மரங்களை, மலர்களை மனதை நிரப்பும் இந்த மௌனத்தை, இந்த ஊரை விட்டுப் போய்விடுவோம் என்று நினைக்க ஏக்கமாக இருந்தது. பிரியப் போவது இந்த ஊரையும் இயற்கை எழில்களையும் மட்டும்தானா?

இதயத்தைத் துளையிடுகிற ஏக்கம், இவற்றின் பிரிவால் மட்டும் அல்ல என்று உதயனுக்குத் தெரிந்திருந்தது. மாமன் மகள் மிருதுளா!

'வசந்தம் மலர்ந்திருக்கும் இந்தக் காலையில் உன் எழில் ஒன்றுதான் என் நினைவிலிருக்கிறது' என்று தனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டான்.

உணர்ச்சிகளெல்லாம் அவள் வசப்பட்டுக் கிடந்தன. அந்த எண்ணம் நுரைத்து நுரைத்துப் பொங்கி இதயத்தை மேலே மிதத்தி தொண்டையை அடைப்பதான உணர்வில் அவஸ்தைப்பட்டான்.


'என்ன இது சித்திரவதை? இன்று எப்படியும் தனியாகப் பார்த்துப் பேசிவிட வேண்டும். இல்லாவிட்டால் இந்த அவஸ்தையை என்னால் தாங்க முடியாது. அவள் எனக்குரியவள், அவளுக்கும் இது தெரிந்திருக்கிறது. ஒருவரிடம் ஒருவர் உள்ளத்திலிருப்பதைச் சொல்லாமல் என்ன இது கண்ணாமுச்சி விளையாட்டு?' தீர்மானத்தோடு எழுந்தான்.

மிருதுளா அவன் மாமன் மகளாக இருந்தாலும் வயது வந்த பின் இருவரும் பேசிக் கொண்டதில்லை. இவனைக் கண்டாலே வெட்கப்பட்டு ஓடி ஒளிந்து கொண்டிருந்தாள். இவனுக்கும் அவளை வலிய நிறுத்தி வைத்துப் பேசும் தைரியம் வந்ததில்லை.

இவன் அம்மாவிடமோ தங்கையிடமோ ஏதோ அலுவல்கள் இருக்கும் சாக்கில் இவனைப் பார்க்கவே மிருதுளா அடிக்கடி வீட்டுக்கு வருகிறாள் என்பது இவனுக்குத் தெரிந்தே இருந்தது. அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் போதே அவள் விழிகள் வீட்டின் மூலை முடுக்கெங்கும் இவனைத் தேடும். இவன் கண்களைச் சந்திக்க நேர்ந்தால், உயிரையெல்லாம் திரட்டி ஒரு பார்வையை வீசிவிட்டு உடனே இமை தாழ்த்திக் கொள்வாள். இவன் கண்களினூடு நுழைந்து உள்ளே சென்று இதயத்தை அதிரவைக்கும் சூறாவளித் தாக்குதலாக அது இருக்கும்.

தன் வீட்டில் சமைக்கப்பட்ட விசேட பதார்த்தங்களை எல்லாம் உடனுக்குடன் எடுத்துக் கொண்டு அவள் இங்கே வருவது அம்மாவுக்கும் தங்கைக்குமென அல்ல என்று உதயனுக்கு நன்கு தெரிந்திருந்தது.

மிருதுளாவுக்குத் துணையாக கோயிலுக்கு, பாடசாலைக்கு எல்லாம் அவளுடன் சென்றிருக்கிறான் உதயன். அப்போதும் அவர்கள் எதுவும்



பேசிக்கொள்ளமாட்டார்கள்.

கோயிலை அவள் சுற்றிக் கும்பிட்டு முடித்து வரும் வரை இவன் வெளிவாசல் படியில் அமர்ந்திருப்பான். இவனருகே வந்து திருநீறு, சந்தனத்தைக் கையில் வைத்து நீட்டுவாள். எடுத்துப் பூசிக் கொள்வான். அவள் நீட்டும் பூவையும் வாங்கிக் காதில் வைத்துக் கொள்வான்.

சரியாகப் பூசிக் கொண்டானா என்று பார்ப்பதற்கு உயரும் அவள் விழிகளை இவன் கண்கள் சந்திக்கும். கண நேரமானாலும் அவை ஆயிரம் கதைகளைப் பேசிக் கொள்ளும். இருவரும் மௌனமாக நடப்பார்கள்.

இன்று மாலை அவளிடம் எப்படியும் பேசிவிடுவதென்று உதயன் நினைத்தான்.

மாலை மிருதுளாவை அவளது வீட்டில் உதயன் பார்த்தபோது அவள் பூந்தோட்டத்தில் செடிகளுக்கு நீரூற்றிக் கொண்டிருந்தாள்.

"மிருதுளா" என்று மெல்ல அழைத்தான்.

நிமிர்ந்து இவனைப் பார்த்தாள். கண்களில் ஒரு விநாடி அதிர்ச்சியின் சாயை படிந்தது. உடலெங்கும் ஒரு பரபரப்பு ஓடியது. பூவாளியைக் கீழே வைத்துவிட்டு பூமரத்தின் கிளையொன்றைப் பிடித்தபடி இடை ஒடிய நின்றாள்.

இமைகள் தாழ்ந்திருந்தன. இதழ்களில் இலேசான புன்னகை அரும்பி நின்றது. உள்ளே மிகுந்த உற்சாகமும் சந்தோசமும் நிரம்பியிருந்ததை வெட்கத்தில் சிவந்த முகம் எடுத்துக் காட்டியது.

உதயன் எப்படிச் சொல்வதென்று தெரியாமல் தவித்தான்.

"உன்னிடம் முக்கியமான ஒரு விசயம் சொல்ல வேண்டும்..." என்று இழுத்தான்.

அவள் கண்கள் மேலெழுந்து நோக்கின. உதயனின் கண்கள் அந்தக் கண்களைக் கவர்ந்து நிறுத்தின. கண்களைத் தன்பால் மீட்டு இழுத்துக் கொள்ளும் சக்தியை அறவே இழந்தாள் மிருதுளா. அவன் அண்மையும், திடீரெனப் பேசியதும் அவளுக்கு அச்சத்தை அளித்தது. அந்த அச்சத்தில் இன்பமும் பெரிதும் கலந்து கிடந்தது. 'என்ன' ஒரேயடியாகப் பார்த்துக் கொண்டு நிற்கிறார் என்ற எண்ணம், அச்சம், இன்பம் இவற்றுடன் வெட்கத்தையும் இணைத்துவிட்டது. அந்த வெட்கத்தால் சங்கடப்பட்டு அசைந்தாள்.

"மிருதுளா" என்று இனிமையாக அழைத்தவன் சிறிது நேரம் விட்டு, "நான் வெளிநாடு போகப் போகிறேன்" என்றான். அதிர்ந்தாள். கால்கள் தடுமாறின.

"ஏன்?, எப்போது? ஏதற்காகத் திடீரென்று" என்பது போலப் பல கேள்விகள் ஓடினாலும் வாய் திறந்து பேச முடியாதவளாக நின்றாள்.

வீழுந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் பூங்கிளையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். கைவிரல்கள் அந்தப் பூங்கொடியின் தளிர்களையும் மலர்களையும் பிசைந்து உதிர்த்தபடி இருந்தன.

கால்களின் கீழே பூமி நழுவ அறிவு மயக்கமுற்றவள் போல் ஆனாள் மிருதுளா.

உதயனை ஏறிட்ட அவள் கண்களில் நீர் படர்ந்திருந்தது.

உயவினென் சென்றுயான்
உள்நோய் உரைப்ப
மறுமொழி பெயர்த்தல்
ஆற்றாள் நறுமலர்
ஞாழல் அஞ்சினைத்
தாழிணர் கொழுதி
முறிதிமிர்ந்து உதிர்த்த கையள்
அறிவஞர் உறுவி
ஆய்மட நிலையே.

(நற்றிணை: 106:5-9)

## சிந்தியா பதில்கள்

★ இலக்கிய, நூல் வெளியீட்டுக் கூட்டங்களில் கூட்டம் ஆரம்பித்த பிறகு சாவகாசமாக உள்ளே நுழைந்து பின் வரிசையில் சத்தம் போட்டுக் கதைப்பவர்களால் எரிச்சலடைந்த அனுபவம் உங்களுக்கில்லையா?

க.மலர்ராஜன், திருகோணமலை.

இவர்கள் கூடப் பரவாயில்லை. கூட்டத்தில் பாதியில் சத்தமே போடாமல் வெளியே போய்விடுகிறார்களே. அவர்கள் மீதுதான் எனக்கு வருத்தம்.

★ சிந்தியா! முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று சொல்லப்படுவது ஏன்?

செ.சுதர்சன், அக்கரைப்பற்று.

தேவலோகத்தில் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கிறார்களாயிருக்கும். மிக நெடுங்காலமாக முப்பத்து முக்கோடி என்றுதானே சொல்லி வருகிறார்கள்!

★ 'அன்பே சிவம்' பக்தியோடு சம்பந்தப்பட்ட படமா?

த.ஹரிஹரன்இ கண்டி.

ஆமாம், ஆனால் கடவுள் நம்முடைய எந்தெந்தக் குணங்களில் இருக்கிறார் என்பதைச் சொல்லும் படம். வெறும் சுய நலக்காரரான அன்பரசனும் (மாதவன்) கம்யூனிஸ்ட்டான நல்லசிவமும் (கமல்) இணைந்து அன்பே சிவமாகிறார்கள். வித்தியாசம் காட்டுவதற்கு கமல்ஹாசன் எடுத்துக் கொள்ளும் சிரமங்களுக்காகவும் அவரைப் பாராட்ட வேண்டும். கதை வசனகர்த்தாவாக விக்ரம் படத்தில் எழுத்தாளர் சுஜாதாவை அறிமுகப் படுத்தினார். நாயகன் படத்தில் பாலகுமாரன்; மைக்கேல் மதன காமராஜன் படத்தில் கிரேஸி மோகன்; இப்படத்தில் பிரபல கேலிச் சித்திரக்காரரான மதனை அறிமுகப்படுத்தியிருக்கிறார். அத்துடன், தமிழகத்தில் பிரபல இடதுசாரி வீதிநாடகக் குழுவான பிரளயன் குழுவினரையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். நடிப்பில் முதிர்ச்சி காட்டியிருக்கும் மாதவனும், ஒளிப்பதிவாளர் ஆர்தர் ஏ வில்சனும், பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடு காட்டி இசைத்திருக்கும் வித்யாசாகரும் படத்தின் பலங்கள்!

★ சிலர் மற்றவர்களிடம் தாங்கள் விரும்புவதையெல்லாம் எதிர்பார்ப்பார்கள். ஆனால் மற்றவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் பற்றி அறிந்து கொள்ள அக்கறைப்படமாட்டார்கள். இவர்களைப் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

எம்.சதீஸ், கோப்பாய்.

அனுபவித்து அறிந்ததற்கு மேலென்ன அபிப்பிராயம்? இல்லஸ்ட்ரேடட் வீக்லியில் வந்த ஒரு துணுக்கைத் தருகிறேன்:

ஒரு குடிசை தீப்பிடித்து எரிந்தது. தீயணைப்பு வண்டி அந்தத் தீயை அணைக்க வந்தது. அதனுடைய சத்தம் கேட்டுப் பக்கத்து மாதாகோயில் பாதிரியார் பார்க்க வந்தார். அங்கே தற்செயலாக அந்தக் குடிசைக்காரனைப் பார்த்தார்.

"ஜோன்! இப்பொழுதெல்லாம் நீ சேர்ச்சுக்கு வருவதில்லையே" என்று கேட்டார்.

"தேவாலயத்தில் தீப்பிடித்த சத்தம் நான் கேட்கவில்லையே" என்றான் அவன்.

★ உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சனைக்குத் தீர்வின்றி அடுத்த கட்ட நகர்வு இருக்காது என்றும், வரப்போகும் போரை எதிர்கொள்வது எப்படி என்று சிந்திக்க ஆரம்பித்திருக்கிறோம் என்றும் புலிப் பொறுப்பாளர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்களே, யுத்தம் வரப்போகிறதா?

க.கமால்தீன், ஏறாவூர்-03.

நான், நீங்களெல்லாம் யுத்தம் வருமா என்று சோதிடர்களைக் கேட்டுக் கொண்டும், வருமா வராதா என்று பந்தயம் கட்டுபவர்களின் வாயைப் பார்த்துக்கொண்டும்தானே காலம் தள்ளிக் கொண்டிருக்கிறோம். அது வராமலென்ன செய்யும்?

★ தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் முஸ்லிம் தேசப் பிரகடனத்துக்கான எழுச்சிப் பேரணி நடத்தியிருக்கிறார்களே?

வி.பிரசாந்த், வெள்ளவத்தை.

அண்ணன் காட்டிய வழியம்மா!

★ உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில் அரசாங்கம் மூச்சுத் திணறுகிறதா?

சி.பேரின்பராசா, கந்தளாய்-02

பின்னே என்ன? உயர் பாதுகாப்பு வலயத்தை இராணுவம் விட்டுவிட்டுப் போனால், பிறகு அங்கிருந்து வரும் மோட்டார் குண்டுகளால் பலாலியையும் விட்டு ஓட வேண்டியிருக்கும் என்பது குழந்தைப் பிள்ளைக்குக் கூடத் தெரியும். இதைப் பக்குவமாய் எடுத்துச் சொல்ல அரசாங்கத்திற்கு வெளிநாட்டு இராணுவ வல்லுநர்களின் அறிக்கைகளெல்லாம் வேண்டியிருப்பது பரிதாபம் தானே!

★ 'விம்புகிறேன்' எப்படி?

த.கஜனி, பட்டக்காடு.

சிஷ்யருடைய முதல் படமும், இவருடைய குருநாதர் மணிரத்னத்தினுடைய முதல் படமும் போலவே கத்துக்குட்டித்தனமாகத்தான் இருக்கிறது. ஃபைவ் ஸ்டார் தந்த சுசிகணேசன் இந்த முதல் படத்தில் தயாரிப்பாளருக்காக நிறைய சமரசங்கள் செய்திருக்கிறார். நல்ல காலம் ஸ்நேகா, இந்தப் படம் முதலில் வெளிவராமலிருந்து இன்னொரு மும்தாஜ் ஆகாமல் தப்பித்தார்!

★ சுவலட்சுமி தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் என்னென்ன?

எஸ்.சிவசுதா, மட்டக்களப்பு.

நீண்ட நாட்கள் உங்கள் கடிதத்தைப் பார்க்காமலிருந்துவிட்டதற்கு மன்னியுங்கள்!

★ குறுக்குமூளை என்கிறார்களே, அது என்ன?

அக்குறணை பைஸால், வவுனியா

இஸ்ரேல்-அரபு யுத்தம் கடுமையாக நடந்துகொண்டிருந்த சமயம். ஒரு இஸ்ரேல் படைவீரன் தன் தளபதியிடம் மூன்றுநாள் லீவு கேட்டான், மனைவியைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று.

"இந்த வேளையிலா லீவு? வீரதீரமாய் ஏதாவது செய் முதலில்!" என்றார் தளபதி.

மறுநாள் அந்தப் படைவீரன் ஒரு எகிப்திய டாங்கியைக் கைப்பற்றிக் கொண்டு வந்து அவர் முன்னே நிறுத்தினான்.

"இப்போது என்ன சொல்கிறீர்கள்?"

"பிரமாதம், பிரமாதம்! லீவு எடுத்துக்கொள்" என்றார் தளபதி.

அடுத்த மாதம் அந்தப் படைவீரன் இன்னொரு டாங்கியைக் கைப்பற்றிக்கொண்டு வந்தான். "இன்னொரு மூன்றுநாள் லீவு."

"தந்தேன், தந்தேன்!" என்று குதூகலித்தார் தளபதி. "அதிருக்கட்டும். இப்படி நினைத்தபோதெல்லாம் எதிரி டாங்கியைக் கைப்பற்றிவர உன்னால் எப்படியப்பா முடிகிறது?"

படைவீரன் சொன்னான்:

"அது மிகச் சுலபம். நமது அணியிலிருந்து ஒரு டாங்கியை எடுத்துக் கொண்டு போர் முனைக்குப் போவேன். உடனே எதிரியும் ஒரு டாங்கியை எடுத்துக்கொண்டு என்னைத் தாக்க வருவான். நான் வெள்ளைக் கொடியை ஆட்டுவேன். அவன் இறங்கி வந்து "என்ன விஷயம்?" என்று கேட்பான். "இதோ பார். உனக்கு உன் மனைவியைப் பார்க்க மூன்று நாள் லீவு வேண்டுமா?" என்று கேட்பேன்... டாங்கிகளை மாற்றிக் கொள்வோம்."

**தகவல் பெட்டி**

## விண்வெளியின் முதலாவது உல்லாசப் பயணி





அமெரிக்காவைச் சோந்த பிரபல கோடீஸ்வரர் டெனிஸ் ரீட்டோ. வயது 60. இவ்வளவு பணத்தை வைத்து என்ன செய்வது? ஏதாவது சாதனையைச் செய்து புகழ் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார். எப்படியாவது உல்லாசப் பிரயாணியாக விண்வெளிக்குச் செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தார். அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்வோரைத் தவிர வேறு யாரையும் விண்வெளிக்கு அனுப்புவதில்லை என்றனர். அதனால் ரஷ்யாவிடம் தனது விருப்பத்தைக் கூறினார்.

ரஷ்யா முதலில் மறுத்துவிட்டது. காரணம் அமெரிக்கர் அல்லவா! ஏதாவது ரஷ்யாவின் விஞ்ஞானத் தொழில் நுட்பங்களை அறிய வருகிறாரோ என்ற சந்தேகம்தான். டெனிஸ் ரீட்டோ விடவில்லை. தொடர்ந்து முயற்சி செய்தார். வெற்றி கிடைத்தது. 2 இலட்சம் அமெரிக்க டொலரைக் கட்டணமாகச் செலுத்தினார். (சுமார் பத்தொன்பதே கால் கோடி ரூபாய்கள்) கொழுப்புத்தான் இல்லையா? 8 நாட்கள் விண்வெளியில் உலா வந்து உலகின் முதல் விண்வெளி உல்லாசப் பயணி என்ற சாதனையை 2001ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிலைநாட்டினார்.

நான்தான் முதலாவது என்பது போல தனது பெரு விரலைக் காட்டுகிறார் டெனிஸ். இதனைக் கேள்விப்பட்ட ஆபிரிக்காவைச் சேர்ந்த மார்க் என்ற 28 வயது இளைஞருக்கும் ஒரு விருப்பம் ஏற்பட, 20 இலட்சம் அமெரிக்க டொலர்களைக் கொடுத்து ரஷ்ய விண்வெளிக் கலத்தில் சென்று திரும்பியிருக்கிறார். இவர் வண்வெளி உல்லாசப் பிரயாணிகள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார். இன்னும் எத்தனை கோடீஸ்வரர்கள் தயாராக இருக்கிறார்களோ...? ■



## நீளமாய் நகம் வளர்த்து... கீரை கிள்ள முடியுமா?

நகம் வளர்ப்பது ஒரு பாஷன்தான். அதுக்காக இப்படியா? இப்படி நீள நீளமாய் நகம் வளர்த்துப் பிரபலம் தேடும் சிலரின் வரிசையில் படத்திலுள்ள இந்தியாவைச் சேர்ந்த பட்டேலும் சேர்ந்துள்ளார்.

இவர் 1962ம் ஆண்டு தொடக்கம் தனது நகத்தை வெட்டாமல் வளர்த்து வருகிறார். ஆனால் இன்னொரு இந்தியக் குடிமகனோ இரண்டு கைகளிலும் நகம் வளர்த்து உலக சாதனையை ஏற்படுத்திவிட்டார். முன்பு முரசின் தகவல் பெட்டியில் வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அது சரி, இந்த நகத்தோடு எப்படி வீட்டுச் சமையல் வேலை, குளியல், துவையல் எல்லாம் பார்ப்பாரென்று எமது குடும்பப் பெண்கள் வியப்பது புரிகிறது. அதுக்கெல்லாம் வேறு ஆள் வைத்துக் கொள்வார்கள் இது பணக்காரப் பொழுதுபோக்கு. ■

## நீண்ட கூந்தலுடன் ஒரு இனம்



சாதாரணமாக ஒரு மனிதனுக்கு 6 அடி நீளமாக கூந்தல் இருப்பதையே ஆச்சரியமாகப் பார்க்கும் இக்காலத்தில் குறிப்பிட்ட ஓர் இன மக்கள் அனைவரினதும் முடி ஒரே மாதிரி நீளமுடையதாக இருப்பது மிக மிக ஆச்சரியமல்லவா? ஆம். சீனாவின் யாவோ இன மக்கள் அனைவரினதும் தலைமுடி தரையில் தேய்படும் அளவுக்கும், அதற்கு மேலும் மிக மிக நீளமாக வளர்கிறது. இது அவ்வின மக்களுக்கே உள்ள சிறப்பம்சமாகும். இவர்கள் தமது தலைமுடியை பக்குவமாக அள்ளி முடிந்து தலையின் மத்தியில் வைத்து, துணி ஒன்றினால் சுற்றி, தமது உயிரைப் போல் பாதுகாத்து வருகிறார்கள். அவர்களுக்கென்ன, கூந்தலுள்ளவர்கள் அள்ளி முடிந்து கொள்கிறார்கள். கொட்டாவி விட வேண்டியவர்கள் நாம்தான்! ■



## பொறுங்கடா! அடே நானும் வரேன் நீந்த!

"என்ன...! மனிதர்கள் நீங்கள்தான் உல்லாசமாக கடலில் நீச்சலடிப்பதா? இதோ நானும் வாரேன் உங்ககூட நீந்த," என்று சொல்லிக் கொன்டு ஒரே பாய்ச்சலாகக் கடலுக்குள் பாய்கிறது இந்த மாடு. ஓகோ.. மாடு கதைத்தது உமக்குக் கேட்டதாக்கும்... என்று நீங்கள் மனசுக்குள் புறுபுறுப்பீர்கள்! அதனால் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அப்பாவி மாடு ஐயா!

ஸ்பெயின் நாட்டின் கடற்கரையில்- விழாக் கொண்டாடிக்கொண்டிருந்த உல்லாசிகளிடம் மாட்டுப்பட்டுவிட்டது. தப்பியோட வழியில்லாமல் தண்ணீருக்குள் மாடு பாய்ந்த காட்சியை ஒருவர் தத்ரூபமாகப் படமெடுத்துவிட்டார். ■



ரவி-சதா
படம்: ஜெயம்

# காதோடு சொல்லுகிறே...

சட்ட இயக்குநர், 'கிஸ்'ஸலாமா என்றொரு படத்தை நியை குஜிலிகளைப் போட்டு எடுத்து வருகிறார். தனது ... நடிக்கும் நடிகைகளுடன் ஆடு புலி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தவர், "என்னோட பங்குல கை வைக்காதீங்க" ... கறாராகச் சொன்னதால்தான், 'கிஸ்'ஸலாமாவை எடுத்து வருகிறாராம். ஷூட்டிங் ஸ்பாட்டில் நடிப்புச் ... கறேன் என்று ஏ. ஜோக்கம், டச்சிங், டச்சிங்குமாக மனிதர் பட்டையைக் கிளப்புகிறார். பார்க்குறதுக்கு ஒல்... சட்டத்தின் பாடி லாங்வேஜைப் பாரத்து யூனிட்டே அசந்துவிட்டதாம். சட்டத்தின் ஒட்டை வழியா புகுந்து படம் ... இதுக்கா சொல்லிக் கொடுக்கனும்?

நட்பு நடிகையின் காதலுக்கு வாழ்த்துச் சொன்ன ஷாஜகான் மனைவியின் பெயர் கொண்ட ... கெட்ட வார்த்தையால் திட்டி சண்டை போட்டிருக்கிறார் நட்பு நடிகை. இதனால் இருவரும் கட்டி... சண்டை போட்டதை வேடிக்கை பார்த்த சிலர் இதைக் கோடம்பாக்கம் முழுக்க கிசுகிசுக்க வைத்து...

இந்தப் புத்தாண்டை சிங்கப்பூரில் கோலாகலமாகக் கொண்டாடி இருக்கின்றனர் உச்ச ... ஸ்லிம் நடிகையும். பட்டி தொட்டி என அவர்களைப் பற்றி கிசுகிசு போய் சேர்ந்துவிட்டதால் ... வெளிநாடு வரை சென்றுள்ளனர். மேலும் தங்களைப் பற்றி வெளிவரும் கிசுகிசுவைப் ... விரும்புகிறாராம் ஸ்லிம் நடிகை. ஆரம்பத்தில் இருந்தே வதந்திகளால் பெரிய இடத்தைப் ... செண்டிமெண்டோ என்னவோ? உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசத் தெரியாதவர் ... நடிகர். 'அவர் அப்படித்தான்' என்று திரையுலகினரும் இந்த விஷயத்தை ஆராய்ச்சி செ... இல்லை. எப்படியோ முற்றுப்புள்ளி வைத்தால் சரி!

'மூன்று மலர்கள்' படத்தைத் தயாரிக்கும் நடிகையின் இரண்டெழுத்து அண்ணன் ... படத்தின் இயக்குநரை அதிலிருந்து நீக்கிவிட்டு, அவரே மீதிக் காட்சிகளை எடுத்து வருகி... றாராம். இனி எந்த மீடியாவிலும் இயக்குநர் பெயரைப் போடக் கூடாது என்று முடிவெடுத்திருக்... கிறாராம். தனக்கு வந்தால்தானே தெரியும் தலைவலி?

பிரகாசமான பெயரைக் கொண்ட அந்தக் தொப்பை நடிகையுடன் இணைத்து கிசு கிசுக்கப்பட்டார் மூன்றெழுத்து வாரிசு நடிகர். அவரது குடும்பத்தினர் இந்தக் காதல் கிசுகிசுவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நாமக்கலில் பெண் பார்த்துவிட்டனர்! இதைக் கேள்விப்பட்ட நடிகை மூட அவுட்டாகிவிட்டார்!

தொல்லை கொடுப்பதையும் அன்பாகச் செய்ய நினைக்கும் படம் அது. இதில் பணிபுரிந்த பல கலைஞர்களுக்கும், டெக்னீஷியன்களுக்கும் சம்பள பாக்கி வைத்துவிட்டது. இதனால் தினம் தினம் பணத்தைக் கேட்டு நச்சரிக்க, அதனைக் கொடுத்துத் தீர்ப்ப தற்குப் பதிலாக அலுவலகத்தையே மாற்றி விட்டனர். எங்கே போய்த் தேடுவது என்று தெரியாமல் இப்போது அந்தக் கம்பெனியைத் தேடி வருகின்றனர் தொழிலாளர்கள்.

## மினி சினி

★ சத்யராஜ் நடிக்கும் 'சேனா' படத்தில் சாருலதா முக்கிய மான ஒரு கேரக்டரில் நடித்து வருகிறார். அதில் அவ ருக்கான பாடலை இமான் இசையில் மீனா பாடியுள்ளார்.

★ 'உதய கீதம்', 'உன்னை நான் சந்தித்தேன்', 'உயிரே உனக்காக', 'பொண்ணு புடிச்சிருக்கு', விஜயகாந்த் நடித்த 'நினைவே ஒரு சங்கீதம்' போன்ற பல வெற்றிப் படங்களை இயக்கிய கே. ரங்கராஜ் இப்போது 'வா வெண்ணிலா' என்ற படத்தை இயக்குகிறார். இதில் ஜெமினி கணேசன், விஜயகுமாரி இணைந்து மனதை நெகிழ வைக்கும் மிக முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப் படத்தின் நாயகனாக ஜெயந்த் அறி முகமாக மானவிகா, மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன், ரியாஸ் கான், பல்லவி, நித்யா, சுகுமாரி நடிக்கின்றனர். புதுமுகம் அறிமுகமாகிறார். இசை: இமான்.

★ பிரபு ஜோடியாக ரம்பா நடிக்கும் 'பந்தா பரமசிவம்' படத்தில் சிம்ரன் ஒரே ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆட உள்ளார். சிம்ரனை சிபாரிசு செய்தவர் விஜய் என்கிறார் கள்.

★ விஜயகாந்த் நடித்த 'ரமணா' படம் தெலுங்கில் ரீமேக் செய்யப்பட உள்ளது. இதில் சிரஞ்சீவி நாயகனாக நடிக்க ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கவுள்ளார்.

★ இயக்குநர் சேரன் தனது தயாரிப்பில் நடித்து இயக்கும் 'பொக்கிஷம்' பட வேலையில் பிஸியாக இருந்து கொண்டு தனது சிஷ்யன் கே.பி. ஜெகன் இயக்கும் 'கீதை' படத்துக்குச் சென்று நான்கு நாள் டைரக்ஷன் மேற்பார்வை பார்த்திருக்கிறார்.

★ தமிழில் பல படங்களைத் தயாரித்து வெற்றி பெற்ற சூர்யா மூவீஸ் ஏ.எம். ரத்னம் தற்போது தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆர். நடிக்கும் 'நாகா' படத்தை இயக்கி வருகிறார். அதில் ரம்பா கதாநாயகியாக நடிக்கிறார்.

★ இதுவரை தனக்கு மனேஜர் வைத்துக் கொள்ளாத காயத்ரி ஜெயராம் 'என் புருஷன் எதிர் வீட்டுப் பொண்ணு' படப் பிரச்சினைக்குப் பிறகு புது மனேஜர் ஒருவரை நியமித்திருக்கிறார்.

★ விஜய் ஜோடியாக 'கீதை' படத்தில் நடித்து வரும் அமீஷா பட்டேல் ஒரு நாளைக்கு நாற்பது ஆயிரத்துக்கு மேல் செலவு வைக்கிறாராம். ஆனால், நடிப்பிலும் அசத்து கிறாராம். அவரது நடிப்பைப் பார்த்து இன்னொரு நாயகியான மீரா ஜாஸ்மின் மிரண்டு போய் உள்ளார்.

★ நடிகை ப்ரியா ராமன் மலையாளத்தில் ஒரு சீரியல் தயாரித்த அனுபவத்தோடு தமிழில் ஒரு படத்தைத் தயாரிக்கிறார். இப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி போலிஸ் கேரக்டரில் நடித்து இயக்குகிறார் அவரது கணவர் ரஞ்சித். இதில் நாயகியாக மீனாவைக் கேட்டு வருகிறார். படத்துக்கு 'பீஷ்மா' என்றும் நிறுவனத்துக்கு ஸ்ரீ வாரி ஃபிலிம்ஸ் என்றும் பெயர் சூட்டியிருக்கிறார்.


கிரண்

## 'காதல் டாட் கொம்' புதிய படத் துவக்க...

ஏ.ஏ.ஏ. மூவிஸ் இன்டர் நேசனலின் புதிய தயாரிப்பான 'காதல் டாட் காம்' படத் துவக்க விழா 18.01.2003 இல் ஏ.வி.எம். ஸ்டுடியோவில் கோலாகலமாக நடந்தது.

லண்டன் தயாரிப்பாளர் திருமதி செவ்வேளின் தயாரிப் பில் உருவாகிவரும் இப் படத் தொடக்க விழாவில் மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ். விஸ்வ நாதன் விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.

இந் நிகழ்ச்சியின் சிறப்பாக இலங்கை முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் இலங் கைப் பிரதமரின் சிறப்பு ஆலோசகருமான மாண் புமிகு அலி சையத் மௌலானா அவர்கள் ...

## முகப்பில் ராணி முகர்ஜி


ஜெயஸ்ரீ

## அப்படியா ரவளி?

ரவளியின் தொல்லையையெல்லாம் தாண்டி...
படம் முடிந்து தயாராக இருந்தும்
பொங்கலுக்கு வரவேண்டிய 'அன்புத்தொல்லை'
பெரிய, தலைகளின் படங்களுடன் போட்டி போட
வேண்டாமேயென ரிலீஸ் தேதியைத் தள்ளி வைத்திருக்கிறார்கள்.
'அன்புத் தொல்லை' போன்றே ரிலீஸ் தேதி தள்ளிப்
போடப்பட்டிருக்கும் மற்றொரு படம் 'பாப் கார்ன்'.


பாலா-தீபு
படம்: அன்பு

## மார்க்கெட்...

நடித்த பெங்களூர் நடி... இழந்து தவிக்கிறார் ... வேண்டும். இப்போ... படம் நன்றாக ... கட்டிவிடுகிறா...

...ராம்

# கர்ச் 'சீ:.ப்' களஞ்சியம்

கோடம்பாக்கம் ஸ்டூடியோக்களில் தினம் பூஜை போடுகிறார்கள். நடிகர், நடிகை, மியூசிக் டைரக்டர், தயாரிப்பாளர், டைரக்டர் என்று அனைவரும் புதுமுகங்கள். இப்படி பூஜை போட்ட, போடுகிற அனைத்துப் படங்களில் உள்ள ஒரே ஒற்றுமை, அதன் காஸ்ட்யூம். ஹீரோயினுக்கு இடுப்புக்கு மேல ஒரு ரிப்பன். இடுப்புக் கீழே ஒரு கர்ச்சீஃப்! இந்த காஸ்ட்யூமை ஒட்டித்தான் கதையும் அமைத்திருக்கிறார்கள். 'முத்தமிட்லாமா', 'பல்லவன்', 'காலாட்படை', 'எனக்கு நீ வேண்டும்' பட வரிசையில் புதிதாக வந்திருக்கும் படம், 'சத்தமின்றி முத்தமிடு' வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் படத்தை 'பூமணி', 'கிழக்கும் மேற்கும்' படங்களை இயக்கி, திசை தெரியாமல் போன மு.களஞ்சியம் இயக்குகிறார்.


நிகேஷ்-அர்க்னா
படம்; கெம்பஸ்

# விவேக் ஹீரோவாகிவிட்டார்

"விவேக் ஹீரோவாகிட்டாருப்பா" இது தான் போன வாரத்து கோடம்பாக்கப் பரபரப்பு. 'பொதுவாக ஷூட்டிங் ஸ்பாட்டில் ஏதாவது பிரச்சினை என்றால் ஹீரோக்கள் அதிரடியாகப் புறப்பட்டுப் போய்விடுவார்கள். அதேபோல் 'பாப்கார்ன்' படப்பிடிப்பிலிருந்து விவேக் பாதியில் கிளம்பிவிட்டார்' என்பதுதான் செய்தி. நடந்தது என்ன? விவேக்கிடம் கேட்ட போது...

"டிசம்பர் பதினோராம் தேதி நடந்த சம்பவம் அது. உண்மையில் அந்தத் தேதியில் நான் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் கம்பெனிப் படத்துக்குத்தான் கால்ஷீட் கொடுத்திருந்தேன். அவர்களிடமிருந்து நாசர் என் தேதியைக் கேட்டு வாங்கியிருந்தார். அன்றைக்கு ஆறு மணி வரை எனக்கு கால்ஷீட். மேக்கப்போடு சாயங்காலம் ஐந்து மணி நாற்பத்தேழு நிமிடங்கள் வரை காத்திருந்தேன். என்னை வைத்து ஒரு ஷாட் கூட எடுக்கவில்லை. நான் வந்து நடித்துக் கொடுத்தால் படமே முடிந்துவிடும் என்று நாசர் சொன்ன அந்தத் தினத்தில் நான் சும்மா உட்கார வைக்கப்பட்டிருந்தேன். காரணம் கேட்டால் முதலில் துபாயிலிருந்து மோகன்லால் வரவில்லை, என்றார்கள். பிறகு செட் ரெடியாகவில்லை என்றார்கள். அதன் பிறகு அந்தப் பாடல் காட்சியில் நான் வாசிக்க வேண்டிய கீ போர்டு வரவில்லை என்றார்கள். ஆறு மணிக்கு எனக்கு 'தூள்' பட டப்பிங் இருந்தது. அதனால் கிளம்பினேன்" என்றார் விவேக்.

இது தொடர்பாக நாசர் தரப்பில் கேட்டபோது, "நடந்து என்னவென்று சினிமா இண்டஸ்ட்ரியில் எல்லோருக்கும் தெரியும். இது பற்றி மேலும் பேசிப் பெரிதுபடுத்த விரும்பவில்லை" என்றார்.

---

# கனவு மெய்ப்பட வேண்டும்

'குட்டி' என்ற யதார்த்த படத்தை இயக்கிய ஜானகி விஸ்வநாதன் தனது அடுத்த படத்தின் வேலைகளில் மூழ்கிவிட்டார். 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்ற பாரதி பாடல் வரிகளை டைட்டிலாகக் கொண்டுள்ள அந்தப் படமும் 'குட்டி' போன்ற சமூகப் பிரச்சனைகளை அலசக்கூடிய படமாம். "கதைக்குப் பொருந்தாத காமெடிக் காட்சிகளில் எனக்கு உடன்பாடில்லை" என்று கூறும் இவர், "விமர்சகர்களையும் அதே நேரம் சராசரி ரசிகனையும் திருப்திப்படுத்தும் வகையில் படம் பண்ணுவதே எனது கொள்கை" என்கிறார். அவரின் கனவு மெய்ப்பட வாழ்த்துவோம்!

## ...விழா

...வாழ்த்தினார்.

...த்தைச் சேர்ந்த, தெப்போலியன் எம்.எல்.ஏ., ...அலிகான், அருண் குமார் (நடிகர்), மஞ்சளா, ஸ்ரீதேவி ...அபிராமி, ரசிகா, மகேஸ்வரி மற்றும் டைரக்டர்கள் கஸ்தூரி ராஜா, ...தயாரிப்பாளர் காஜாமைதீன், காட்ரகாடா பிரசாத், சாய்கிருஷ்ணா மற்றும் பல ...விழாவில் கலந்து கொண்டு நேரில் வாழ்த்தினார்கள்.

...முறையில் திட்டமிட்டு தயாராகி வரும் இத் திரைப்படத்தில் '5 ஸ்டார்' திரைப்படப் புகழ் பிர... கதாநாயகன், கதாநாயகியாக நடிக்க, ...நாயகியின் தேர்வு தற்போது தீவிரமாக ...கொண்டிருக்கிறது. வடிவேலு, எஸ்.வி. ...மதன்பாப், பாண்டு மற்றும் பலர் ...

...பல்வேறு பகுதிகளில் முதல் ...இத் திரைப்படத்தின் பாடல், பூஜையைத் ...ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

...செல்வராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் ...திற்கு முன்னணி இசை அமைப்பாளர் ...அமைக்க, ஸ்ரீசங்கர் ஒளிப்பதிவு செய்கி... ...ட்டை பிரபாகர் வசனம் எழுத, முன் ...நுட்பக் கலைஞர்கள் கே. தணிகாசலம், ...மெர்லின், மணிவர்மா, சீத்தாராம ...ஜான்சன், பிரதீப் கருண் ஆகியோர் ...கிறார்கள். இப் படத்தின் நிர்வாகப் ...நாகராஜன் ஏற்றுள்ளார்.


அர்ஜுன்-சிம்ரன்
படம்: ஒற்றன்

## ...ஜின் அடுத்த கலக்கல் பாடல் ரெடி!

...', மலே மலே..' ரேஞ்சுக்கு மும்தாஜின் அடுத்த கலக்கல் ...இசையில் தயாராகிவிட்டது.

...கட்டிப்புடி...' என்று விஜய்யைக் கண்டபடி கட்டிப் பிடித்த ...மும்தாஜுக்கு கோலிவுட்டில் மவுசு ஏறியது. அந்த ஒரு பாட்டுத்தான் ...திரையுலக வாழ்க்கைக்குப் புது வழி காட்டியது.

...முதல் தேவாவின் இசைக்கு ஆடுவது என்றால் மும்தாஜ் ...ஆகிவிடுவார்.

...தொடர்ந்து கடந்த ஆண்டின் கலக்கல் பாடலான 'மலே மலே..' ...மும்தாஜ் உச்சாணிக் கொம்புக்கே சென்றுவிட்டார். இப்போது ...அது போன்ற ஒரு பாடல் அவரைத் தேடி வந்துள்ளது.

...சொந்தமாகத் தயாரிக்கும் 'தத்தித் தாவுது மனசு' படத்தில் ...லான பாட்டுக்கு அட்டகாசமாக இசையமைத்துள்ளாராம் ...', மலே மலே..' இரண்டையும் தூக்கிச் சாப்பிட்டுவிடும் ...லாக வந்திருக்கிறதாம் இந்தப் புதிய பாடல். பாடலைக் ...ஆகிவிட்டாராம். 'தேவான்னா தேவாதான்' என்று தேவாவைப் ...விட்டாராம். இந்தப் பாடலின் மூலம் இன்னும் 10 படங்கள் ...வரும் என்று தெம்பாக வலைய வருகிறார் மும்தாஜ்.

...'கட்டிப்புடி', 'மலே மலே' இரண்டு பாடல்களிலும் வேறொரு ...இருந்த அனுராதா ஸ்ரீராம், இந்தப் புதிய பாடலைத் தனியே ...வின் வரிகளிலும் வாலிபம் அப்படித் துள்ளி விளையாடுகிற...

---

## ...இழந்துவிட்டாரா?

'துள்ளுவதோ இளமை' படத்தில் படு துள்ளலாக ...'ஜெயா' படத்தின் மூலம் பரபரப்பான தன் மார்க்கெட்டை ...'லெட்டனண்ட் நம்பர் ஒன்' படங்கள் கை கொடுக்குமா? பார்க்க ...நடிகைகள் விஷயத்தில் 'யூஸ் அண்ட் த்ரோ' மாதிரி ஒரு ...தான் ரசிக்கிறார்கள். இல்லையேல் குட்டை சொல்லி ஒரம் ...


பிரபு-ரம்பா
படம்: பந்தா பரமசிவம்

## உழவனுக்கோர் யோசனை...!

சந்தர்ப்பங்களை
மாற்றாமல்
சம்மந்தங்களை
மாற்றியவர் கண்டு
கர்வம் கொள்ளாது
கவலை கொள்.

தன்னை நியாயப்படுத்தி
உன்னை
காயப்படுத்தியமைக்காய்
வருந்தப் பணி...
இனியாகிலும்
திருந்தப் பணி...!

உலகம்
உனக்கும் சேர்த்துத்தான்
உருள்கிறதென
உணர்த்து.

தெம்பு கொடு
[illegible]

அடைத்துச் சாத்திய
[illegible]
அடித்துத் தட்டி
விரவிக் கிடக்கின்ற
இன்பங்களின்
விலாசத்தைக் கொடு...
'ஏசிக்குள்
இயற்றிமாய்
[illegible]
இயற்கையின்

உண்மைகளை
உள் வாங்கட்டும்.

வயலுக்கு அழை!
வரப்பில் நடந்து
சேற்றில் நின்று
ஒருதரம்
சிந்திக்கச் செய்!

உத்தியோகங்களால்
உறவுகள்
நிர்மாணிப்பவர்கட்கும்
உணவுகள் தீர்மானிப்பது
உழவன் என்று
உறைக்கச் சொல்.

நவீனத்தின் பிடியில்
அணுவணுவாக
வாழ்க்கையை
அடகு வைத்துக்
[illegible]
அழைத்து வா
மண்ணின்
கருப்பைக்குள் இருந்துதான்
என் பசிக்கு
[illegible]
கிடைக்கிறதென்று
'ஏர், பேனாகொண்டு
பூமித்தாளில்
எழுதப் பழகு...
அவன்

குடும்பத்தையும் கூப்பிடு
விருந்திற்கு நிற்கும்படி
வேண்டு...
புதுப்பானை எடு
புத்தரிசி கொண்டு
பொங்கு
சூரியனுக்குப்
படையல் தேவையில்லை...
முதலில் இந்தச்
சோம்பேறிகளுக்குப் படை!

ரோஷான் ஏ. ஜிப்ரி,
கட்டார்.

## தேன் கிண்ணம்

## காற்றாடி வாழ்க்கை

உயிரைக் கொண்டு
உடலென்ற சிலையை
அழகுபடுத்தி
அலையும் மனிதனே
உறக்கத்தை ஓரங்கட்டி
பணத்தைத் தேடி
மானத்தைத் தொலைத்தவனே
மண்ணில் மாட்சிமை தங்கிய
ஜந்து நீயல்லவா
சிந்தித்துப் பார்;
காற்றுள்ளவரையே காற்றாடி
பறக்கும்.
உன் உடலுக்கும் அதே கதிதான்.
காற்றாடி வாழ்வைக்
கடைசிவரை மறவாதே
கடந்தவற்றை கானலாக்கிவிடு
புதியவற்றைச் செய்து
புகலிடம் தேடு
[illegible]

க. நவநீதன்,
துறைநீலாவணை.

## யுத்தம்

அழிவுகளுக்கு மட்டுமே
அதிக முக்கியத்துவம் தரும்
அழுகையே தேசிய கீதமாகும்
அநாவசிய உயிரிழப்பே
அதிகமாக இடம் பெறும்

சிறுவர்கள் அநாதைகளாவர்
அகப்பட்டவர் போராளியாவர்
பெண்கள் விதவைகளாவர்
யுவதிகள் மானம் இழப்பர்
மற்றவர் அங்கவீனமாவர்
எல்லாச் சமூகச் சீரழிவும்
ஒருங்கே நடந்தேற
யுத்தம் ஒப்புதல் தரும்

பிண வாடையை சுமந்த வாறே
மறு நாள் பொழுது விடியும்
அப்பாவிகளும் பழியாவர்
அடுத்த கணம் யாரோ என்று
மரணம் மனிதனை விரட்டும்

விளை நிலங்கள் எல்லாம்
வெடி குண்டுகள் விதைக்கப்படும்
அகதியாக வாழவு மாறி மக்கள்
அன்றாடம் பரிதவிப்பர்
நிவாரணம் வாங்குவதற்கே
நீண்ட தூரம் வரிசை நிற்கும்

ஒவ்வொரு விடியலுக்காவும்
[illegible]
இரவுகள் விழித்திருக்கும்
மரணங்களின் எண்ணிக்கையே
அன்றாடச் செய்தியாகும் - நிச்சயம்
மனித நேயம் தோற்றுப் போகும்

அடிக்கடி இடப்பெயர்வுகள்
அப்பாவி மக்களை விரட்டும்
விவரிக்க முடியாத வேதனையில்
நடைப்பிணமாக எஞ்சிய மனிதம்
வாழும்
நிச்சயமற்ற நிலையே
நிலைத்திருக்கும்...!!

எம். ஸ்டாலின்-திருமலை.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எஸ். ரவி
வயது :23
முகவரி:
48, கண்டி வீதி,
நுவரெலியா.
பொழுது போக்கு:
கவிதை, கட்டுரை.



பெயர்: கே. நவநீதன்
வயது: 21
முகவரி:
153, காலி வீதி,
வெள்ளவத்தை.
பொழுது போக்கு:
வழமையானவை.



பெயர்:
க.விழிமதன்ன்
வயது: 21
முகவரி:
மாரியம்மன் கோயில்
வீதி, நாவற்குடா.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி,
தொலைக்காட்சி,

## என்னைச் சுற்றி உலகம்

வாழ்க்கையில் தோற்றுப்போனேன்.
வாழவேண்டுமா என்று நினைக்கிறேன்.
மனிதனுக்குள்ளே இத்தனை வேறுபாடா!
மனிதாபிமானம் என்பது
உச்சரிக்க முடியாத இறந்தகாலமா!
விழிக்கிறேன் விழிக்கிறேன்
விடைகாணேன் விடைகாணேன்.

காதலென்ற பெயரால் காமக் களியாட்டம்
அரங்கேறுகிறதே அதனால்தான் எனக்கு
இந்த உலகில் இடமில்லையோ!
நானும் காதலித்தேன். கனவுலகில் சஞ்சரித்தேன்.
வெறும் நினைவுகள்தான்
மீதமானது,

நான் செய்த பாவமென்ன?
பறந்த வானுக்கும் விரிந்த பூமிக்கும் இடையில்
மாட்டிக் கொண்டு முழிக்கிறேன். தவிக்கிறேன்.

சிறுவர்களைக்கூட சிறிய மனிதர்களாகக்
காணும் நான்.
மாற்றானின் வாயில் மண்டியிட்டு
கிடக்கிறேனே!

என் சோகங்கள் அனைத்தையும்
திரட்டி முடைகட்டிப்
பார்க்கிறேன்.
தொன் எடையைத் தாண்டி
தராசு கனக்கிறது.

என்னை சோகத்தில் ஆழ்த்தி
ஆழ்ந்த சந்தோசத்தில் இருக்கும்
இந்த உலகத்தை மேலும் சந்தோசப்படுத்த
நினைக்கிறது மனம்.

என் ஓடம் எத்தனை அலைகளையும்
மண் மேடுகளையும் தாண்டிச்
சென்று கொண்டிருக்கிறது.

உலகமென்றால் என்ன?
கோள வடிவம் என்பதைத் தவிர
வேறு ஒன்றும் தெரியவில்லை.

காதலென்றால் கட்டியணைப்பதா?
மறைவில் மந்திரம் படிப்பதா?
மனிதர்கள் மிருகங்களின்
சொந்தக்காரர்களா வீட்டுக்காரர்களா
எண்ணங்கள் எங்கும் சுற்றி அலைகிறது.
கடைசியில் வந்து கைவிரித்து நிற்கிறது.

அன்பு, பாசம், காதல் என்பவற்றை
இருளிலே தொலைத்து விட்டு
எங்கோ ஒரு வெளிச்சத்தில் தேடும்
இவர்களை வியந்து பார்க்கிறேன்.

சோகத்தை மீதமாகத் தந்த
என் வாழ்க்கைக் கணக்கை அந்த
இறைவன் நிறைவு செய்யும் வரை
கடனாளியாகவே இருப்பேன் தொடர்ந்து
கொண்டே விழிப்பேன்.

உணர்வும் வரிகளும்- ஏ.மு. ஐசான், நேரியகுளம்.

## நெஞ்சரித்துப் போனவளுக்கு....

உயிரைக் கசக்கி
உலர்த்திவிட்டு...!

இதயத்தை எதற்காய்
இடம் பெயர்த்தாய்...?

வெறிச்சோடிக் கிடக்கிறது
கூடு...!
வேதனைகளால்
தூக்குண்டு!

குண்டுமாரி பொழியும்
உன்னிரு கண்கள்
குரூரங்களைக்
கற்றுக்கொண்டதுதானெங்கே...?

உன் பார்வை
துளைப்புகளில்
தொப்பென விழுந்து
தோய்கிறது ஜீவன்;
மாய்கிறது மனசு!

பேசு!
என்னுயிரைக் கரைத்துக்
குடித்ததைத் தவிர
என்ன பெரிதாய்
சாதித்திருக்கிறது
உன் மௌனம்...?

அழுது ஆர்ப்பரித்து
உறவுகள் அறுத்து
உணர்வுகளுதிர்த்து
உடல் நடுங்க
உபவாசங் கொண்டதெலாம்

இப்படி
உயிரைப் பறிகொடுக்கவா..?

கூறு...!
சல்லடை கொண்டு
சலிக்குமளவிற்கு என்னில்
குற்றமென்ன கண்டாய்...?
கூறு!

என பொழுதுகளாய்
புலர்வதும் பின்
புயலாய் புரள்வதும்
மலராய் வந்து
மனதில் மலர்வதும்
பின் மறைவதுமாய்
மாயாஜாலம் செய்கிறாய்!
ஊனை
உருக்குலைத்தது போதாதென
என் காதலின்
[illegible]

எரிமலைக்குள் வீழ்
பனித்துளியாய் என்னிதயம்
எரித்திருக்க...

உனக்கென்னடி இன்னும்
ஊமைத்தனம்
வேண்டிக்கிடக்கிறது...?

மலைக்குயில்,
து. பிரபாஹர்
ஹப்புத்தளையூர்.

## நினைத்து, நினைத்து சிரிக்க

ஏவாளுடன் சில காலங்களைக் கழித்தபின் ஆதாம், தோட்டத்தில் கடவுளுடன் சென்று கொண்டிருந்தான். அப்போது ஆதாம், தனக்குப் பெண் எவ்வளவு தேவைப்பட்டதென்றும், பெண்ணுடன் இருக்கையில் தான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தேன் என்றும் தன்னுடன் சேர்ந்து கொள்ளப் பெண்ணையும் படைத்ததற்காக நன்றி என்றும், கடவுளிடம் கூறிவிட்டு மேலும் அப் பெண் பற்றிச் சில வினாக்களையும் தொடுக்கலானான்.

**ஆதாம்:**- கடவுளே! ஏவாள் அழகானவள். ஏன் தாங்கள் அவளை மிக அழகுள்ளவளாகப் படைத்தீர்கள்?

**கடவுள்:**- ஏனென்றால் எப்போதும் நீ அவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக.

**ஆதாம்:**- கடவுளே, அவளின் சருமம் மிகவும் மென்மையானது. ஏன் அவளின் சருமத்தை அவ்வளவு மென்மையாகப் படைத்தீர்கள்?

**கடவுள்:**- ஏனென்றால். நீ எந்நேரமும் அவளைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வு உனக்குத் தோன்ற வேண்டும் என்பதற்காக..

**ஆதாம்:**- அவளைச் சுற்றி எப்போதும் நறுமணம் கமழ்கிறது. கடவுளே, ஏன் அவளை அத்தகு நறுமணத்துடன் படைத்தீர்கள்

**கடவுள்:**- ஏனென்றால், எப்போதும் நீ அவளருகில் இருக்க ஆசைப்பட வேண்டும் என்பதற்காக...

**ஆதாம்:**- ஆகா! இவையெல்லாம் அற்புதம் கடவுளே. ஆனால் ஒன்று மட்டும் என்னை உறுத்திக் கொண்டிருக்கிறது. என்னவென்றால் ஏன் அவளைப் படு முட்டாளாகப் படைத்திருக்கிறீர்கள்?

**கடவுள்:**- ஏனென்றால் அவள் உன்னைக் காதலிக்க வேண்டும் என்பதற்காக...

உல்லாச வாசியான ஒரு இளைஞன் சிகை அலங்கார நிலையத்துக்குச் சென்று, அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவாறே "எனக்கு முகச் சவரம் செய்வதுடன் என் சப்பாத்தைப் பொலிஷ் பண்ணவும் வேண்டும்" என்றான். சிகை அலங்காரம் செய்பவன் அவனுக்கு முகச் சவரம் செய்ய ஆரம்பிக்க, மிக அழகான பெண் ஒருத்தி அவனுடைய சப்பாத்தைப் பொலிஷ் செய்ய ஆரம்பித்தாள். முன்னெப்போதுமே கண்டிராத பேரழகுடன் அவளைக் கண்டதும் உல்லாச வாசியின் உள்ளத்தில் ஆசை கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. மெல்லக் குனிந்து மெல்லிய குரலில் அப் பெண்ணிடம்:

"இளம் பெண்ணே நீயும் நானும் கட்டாயம் ஒரு விடுதிக்குச் சென்று சில மணி நேரங்கள் கழிக்க வேண்டும்" என்றான் அதற்கு அப் பெண், "நான் திருமணமானவள். எனது கணவர் அதை விரும்பமாட்டார்" எனப் பதிலளித்தாள்.

அவனோ முயற்சியைக் கைவிடாமல், "உன் கணவரிடம் நீ மேலதிக நேரம் வேலை பார்ப்பதாய்ப் பொய் சொல்லிவிடு. அதற்கு வேண்டிய மேலதிகக் கொடுப்பனவை நான் உனக்குத் தருகிறேன்" என்றான்.

அவள் சொன்னாள்: "நீங்களே அவரிடம் சொல்லிவிடுங்கள். அவர்தான் இப்பொழுது உங்களுக்கு முகச் சவரம் செய்துகொண்டிருக்கின்றார்."

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**
**தரு மு சிவராம் தமிழாக்கியிருக்கும் பிற மொழிக் கவிதைகள் நான்கு இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக...**

### மழுவும் கொழுவும்

மழுவுக்கும் கொழுவுக்கும்
மரத்தடி கைப்பிடி.

கொழு. மண்ணை உழுது பரட்டும்
பல்லரித்துப் பூமியில் முளையெழும்
பயிர் வெளியில் பது விழா
அலையெழும்.
கூடை நிறையும் பானை நிறையும்
வயிறு நிறையும்
தாயும் சேயும் வளரும்.

மழுவும் மழு எடுத்தவனும்
நாய் கழுத்தைத் துண்டிப்பான்.
துண்டித்ததும் வெறி தீராது.
ஆயிரங்களைக் கொல்லுவான்
ஒரு முறையல்ல இரு முறையல்ல;
இருபத்தியொரு முறை.

எம். கோவிந்தன் (மலையாளம்)

### உதயமாகி வரும் அரசியல்வாதிக்கு

முட்டைகளை உடைக்காமல்
ஆம்லெட் பண்ண முடியாது
என்று தகவல் தருகிறாய்.
யதார்த்தமான வாதம்-உண்மையும்
கூட.
ஆனால்,
எத்தனை முட்டைகள்
உடைக்கப்பட்டுள்ளன?
ஏன் இந்தப் பரபரப்பு?
ஆம்லெட்டுக்களைச்
சாப்பிட்டுக் கொண்டிருப்போர் யார்?
ஆம்லெட்டின் ருசிதான் என்ன?
சமைப்பதை விட
முட்டைகளை உடைப்பதில்
உனக்கு ஏன் இவ்வளவு ருசி?
அடித்து உடைக்கப்பட்டுக்
கிடக்கின்றனவே
அவை, தரையில்
என்ன செய்துகொண்டிருக்கின்றன?
இந்த அழகு கெட்ட பெட்டைக்
கோழிகளுக்கு
நீ ஒருவனே சேவலாகிய சங்கதி
எப்படி நடந்தது?
உனது நிலையிலுள்ள
ஐயா அவர்களுக்கு
இறக்குமதி செய்யப்பட்ட
பழமொழிகளின் உபயோகம்
இதுதான்:
உள்ளூர்க் குரல்களை மூச்சடைக்க
வைக்கலாம்.

டி.ஜே. என்ரைட் (ஆங்கிலம்)

### போர்க் கருவி ஆலைத் தொழிலாளி

உலகின் விதியை நிர்ணயிக்க
என்னால் முடியாது.
யுத்தங்களை ஆரம்பித்து வைப்பவன்
நானல்ல.
போர் வேண்டுமா - சமாதானமா?
இதற்குப் பதில் எனக்குத் தெரியாது.
எனக்கு இல்லாதது செல்வாக்கு
இதுவே என் கவலை.
யுத்தங்களைப் பொறுத்தவரை
பாவி நானல்ல.
நான் திருகாணிகளைத்
திருகிவிடுகிறவன்.
அழிவின் ஆரம்பப் பகுதிகளை
உருக்காலையில் தட்டி விடுகிறவன்.
அவற்றின் முழுமையோ
மனித ஜீவனின் கோளாறோ
என் அறிவால் எட்ட முடியாதது.
பேச்சின் பொய்மைக்கும்
செய்கையின் தேய்வுக்கும்
அப்பாற்பட்ட, பரிசுத்தமான
பேரியக்கம் ஒன்றினுள்தான்
எனது இயக்கம் இடம்பெற முடியும்.
(அதில் அடங்காத இயக்கமும்
இருந்துவிடக் கூடுமோ?)
என் சிருஷ்டி முழுவதுமே
தவறான தெனினும்
உலகின் தவறுக்கு நானல்ல
சிருஷ்டி கர்த்தா.

கரோல் வத்ஜேலா (போலிஷ்)

### வரவேற்ப

இன்மை-கடலின் நுரை,
கவிதையின்
கன்னிமை நுரைத்தெழும்
மதுக் கிண்ணம்
அங்கொரு தூரத்தில்,
மயக்கக் குரல்களின்
ஸைரன் சேனை ஒன்று
முழங்கிக் கொண்டிருக்கிறது.

புயல்-பனிக்கடல்
யாவற்றினூடேயும் விரையும்
கப்பலின் பாய்மரத்தோடு நான்;
மரக்கல முகப்பில்
பல்வேறு விதமான நீங்கள்
என்னைப் பீடிக்கும்
ஒரு அபூர்வ உன்மத்தம்
கப்பலின் பயங்கர வேகத்தை
பயமற்றதாக்குகிறது.


தனிமை-நிர்மூலமாக்கும் பாறை
அல்லது ஒரு நட்சத்திரம்
இவற்றுள்,
அவரவர்க்குப் பொருத்தமான
ஏதோ ஒன்று வரவேற்க,
கப்பலில் விரிந்த வெண் படுதா
இழுத்துச் செல்கிறது.
உங்களையும் என்னையும்.

ஸ்தெஃபான் மல்லார்மே
(ஃபிரெஞ்ச்)

# மன அழுத்தமே அல்சருக்குக் காரணம்?

இன்றைய நவீன உலகில் நம்மில் அனேகம் பேர் பாதிக்கப்படும் வியாதி அல்சர் எனப்படும் இரைப்பை, முன் சிறுகுடல் புண் நோயாகும். சித்தர்கள் இந்த வியாதி உடலையும் மனதையும் குன்ற வைப்பதால் குன்மம் எனப் பெயரிட்டனர்.

இந்த வியாதி பண்டைய காலத்தை விட இப்பொழுது



அதிகம் காணப்படுவதற்கு, குடும்பத்தில் பணம் மற்றும் பல்வேறு காரணங்களால் ஏற்படும் மன உளைச்சல், வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக அவசரமாகச் சாப்பிடும் உணவு இவற்றால் ஜீரணச் சுரப்பிகளின் அளவு மாறுபடுவது, நாளடைவில் இந்த நோய் 16-30 வயதுடைய ஆண்-பெண் இருபாலாருக்கும் வருவதற்கு இளைஞர்களின் வேலையில்லா நிலை, சமூகத்தில் நல்ல நிலையை அடைய ஏற்படும் மனப் போராட்டம், பெண்களுக்கு வறுமை, குடும்பத்தின் பாரச் சுமை, நல்ல ஆடை அணிகலன்களை அணிய முடியாமையால் ஏற்படும் மன அழுத்தம் போன்றவை காரமாகின்றன.

### நோய் தோன்ற சில காரணங்கள்:

அடிக்கடி காரமான உணவுகளை உண்பது. பட்டினியிருத்தல், கோபம் கொள்ளுதல், மிகச்சூடான பொருட்களை உண்ணுதல், முறை தவறி மூச்சை அடக்கி யோக நிலையில் இருத்தல், அதிக அளவு கிழங்கு வகைகளை உண்பது, ஜீரண சக்தி குறைவாக உள்ள போது நெய், டால்டா, இறைச்சி இவற்றைத் தொடந்து உண்பது போன்றவற்றால் இந்நோய் தோன்றுகிறது.

சில வகையான நுண் கிருமிகள் இரைப்பைச் சுவர்களைப் பாதிக்கும் போதும், மிக வீரியமான மருந்துகளை மருத்துவர் அனுமதியின்றிச் சாப்பிடுவதாலும், மூட்டு வலி, ஆஸ்துமாவிற்குக் கொடுக்கப்படும் ப்ரூபென், ஆஸ்பிரின், டெக்காட்ரான், பெட்னெசால் போன்ற மருந்துகளாலும் சரியான முறையில் தயாரிக்கப்படாத பற்பம், செந்தூரம் போன்றவற்றைத் தொடர்ந்து உண்பதாலும் தற்கொலை முயற்சிக்காகச் சாப்பிடும் அசிற், தாவர பூச்சி கொல்லி மருந்துகள் போன்றவற்றைச் சாப்பிடுவதாலும் இந் நோய் வரும்.

தொடந்து மது அருந்துவதால் உணவுக் குழாய், இரைப்பை ஆகியவற்றில் ஏற்படும் புற்றுக்கட்டி இவற்றைத் தொடந்து ஹைபோதலாமஸ் என்ற ஒரு சிறிய பகுதி நமது மூளையின் அடிப்பகுதியில் காணப்படுகிறது. இதிலுள்ள பல்வேறு செயல் நிலையங்களில் ஏதாவது ஒன்றின் செயல் மாறுபட்டால் கூட இரைப்பை சுரப்பிகள் தூண்டப்பட்டு புண் வருவதற்கு ஏதுவாகும்.

### நோயின் ஆரம்ப அறிகுறிகள்:

அடிக்கடி, பசி, வயிற்றில் எரிச்சல், உணவிற்குப் பிறகு எரிச்சல் சற்று குறைதல், சில நேரங்களில் ஜீரணமாகாமல் வயிற்றுவலி, பொருமல், மார்பில் வலி, புளிப்புடன் வாந்தியாதல், சில சமயம் பசியெடுத்தும் உண்ண முடியாமை போன்றவை அறிகுறிகளாகும். பண்டைய காலத்து சித்தர்கள் இந்த நோயின் அறிகுறிகளை வைத்து எட்டு வகையாகப் பிரித்துள்ளனர்.

### வாத குன்மம்

உடல் வன்மை மெலிந்து சோர்வு, மயக்கம், நாவறட்சி, சாப்பிட்டபின் சற்று வலி குறைதல், வாந்தியில் இரத்தம் சில நேரங்களில் வெளிப்படல், வலிக்குப் பயந்து சாப்பிடாமல் இருக்கச் செய்யும் இந்நோய் உடலில் ஊறி வாழ்நாள் முழுவதும் செரியாமையை உண்டாக்கும்.

### பித்த குன்மம்

வயிற்றில் எரிச்சலை உண்டாக்கி வாய் குமட்டி வாந்தி வரும். வாந்திக்குப்பின் நெஞ்சிலும், வயிற்றிலும் எரிச்சல் மிகுதிப்படும்.

## பேஷியல் அபாயம்

அடிக்கடி பேஷியல் செய்து கொள்வதால் நம் முகத்தில் இருக்கும் தசைகள் வெகு சீக்கிரத்தில் தளர்ச்சி அடைய ஆரம்பிக்கின்றன. இறுக்கமாக இருக்க வேண்டிய தசைகளின் இறுக்கம் தளர்ந்து விடும். சுருக்கங்களும் சீக்கிரத்தில் விழுந்துவிடும்.

இந்த ப்ளீச்சிங், பேஷியலில் பல இரசாயனக் கலவைகளையும், கண்ட கண்ட க்ரீம்களையும் பூசுவதனால் தோல் தன்னுடைய இயல்பான தன்மையை இழக்கிறது. தோலின் வெளிப்புற அடுக்கான எபிடெர்மிஸ் பலவீனப்படுகிறது. ஒரு மனிதனின் தோல் நிறம் இரத்தத்தையும், தோலிலேயே உள்ள நிறத்தை உருவாக்கும் தனிப்பட்ட செல்களையும், பரம்பரைத் தன்மையையும் பொறுத்தது. பிறப்பிலேயே நிர்ணயிக்கப்படுகின்ற அவரவர்களின் நிறத்தை ப்யூட்டி பார்லர்களால் மாற்றவோ, பளபளக்க வைக்கவோ, செக்கச் செவேல் என்று மாற்றவோ முடியாது. ப்ளீச்சிங் செய்வதற்கு முன்பும் டை போடுவதற்கு முன்பும் பேட்ச் டெஸ்ட் என்கிற டெஸ்டை செய்துவிட்டுதான் மேற்கொண்டு டையையும், ப்ளீச்சிங்கையும் மேற்கொள்ள வேண்டும். ஆனால் யாரும் இந்த டெஸ்ட்களை மேற்கொள்வதில்லை. மேலும் பலருக்கு வாக்சிங், பேஷியல், திரெடிங் இவற்றால் அலர்ஜியும் ஏற்படலாம்.


செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர் தரமான சல்வார்களுக்கு தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Bh
பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15- 02-2003
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
லுணுகலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்
நா. இலங்கேஸ்வரி
இல. 152, பிரதான வீதி, லுணுகலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# கறுப்பும் சிவப்பாகலாம்

அழகாக இருக்க ஆசைப்படுபவர்களை விட கலராக இருக்க ஆசைப்படுபவர்கள் அதிகம். சரும நிற விடயத்தில் பெண்கள் அத்தனை சுலபத்தில் திருப்தியடைவதில்லை. சரும நிறம் என்பது கரு உருவாகும் நிமிடமே தீர்மானிக்கப்படுகிற விடயம் என்றும், அதை மாற்றுவதென்பது சுலபமல்ல என்றும் இத்தனை நாட்களாகச் சொல்லப்பட்டு வந்தது. இதை மாற்றும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது 'ஒயிட்டனிங் ட்ரீட்மென்ட்' எனப்படும் நிற மாற்றுச் சிகிச்சை. அதைப் பற்றிப் பார்ப்போம்.

சருமத் துவாரங்களை இறுகச் செய்யும். சருமத்தில் ஆங்காங்கே காணப்படும் கருந்திட்டுக்களைப் போக்கும்.

* பிறகு கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் கிளை கோலிக் அமிலம் கலந்த பயோ ஜெல் எக்ஸ்ஃபோலியேட்டர் தடவப்படும். இதில் உள்ள புளிப்புத் தன்மை சருமத்திற்கு உதவும். இதை கண்கள் மற்றும் வாய் தவிர்த்து, சருமத்தில் தடவி மூன்று முதல் ஆறு நிமிடங்களுக்குள் எடுத்துவிட வேண்டும். ரொம்பவும் கறுப்பானவர்கள் பத்து நிமிடங்கள் வரை



* முன்பெல்லாம் சரும நிறத்தை அதிகப்படுத்தும் சிகிச்சைகளில் ஹைட்ரா க்வினன் மற்றும் மெர்க்குரி போன்றவையே உபயோகப்படுத்தப்பட்டன. அவை பலவித பக்க விளைவுகளை ஏற்படுத்தின. இயற்கையான பொருட்களைக் கொண்டு சரும நிறத்தைக் கூட்டும் ஒயிட்டனிங் ட்ரீட்மென்ட்டுக்கு இப்போது வரவேற்பு எக்கச்சக்கம். பக்க விளைவுகள் இல்லாதது இது.

* கறுத்த சருமத்தில் மெலனின் என்பது அதிகமாக இருக்கும். அது சருமத்திற்கு எதிர்ப்பு சக்தியைத் தரக் கூடியது என்பதால் கறுப்பான சருமமே ஆரோக்கியமானதும் கூட. மெலனினைப் பாதுகாப்பான அளவுக்குக் குறைப்பது நல்லது. அளவை மீறக் கூடாது. அடிக்கடி பிளீச் செய்யக் கூடாது.

* ஒயிட்டனிங் ட்ரீட்மென்ட்டுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களில் ஆல்ஃபா ஹைட்ராக்சி அமிலங்கள் சேர்க்கப்படுகின்றன. மல்பரி மற்றும் பெர்பெரி போன்றவற்றின் சாரங்களைக் கொண்ட பொருட்கள் உபயோகிக்கப்படுகின்றன. கார்பனிலிருந்து எடுக்கப்படும் கோஜிக் அமிலமும் பயன்படுத்தப்படுகிறது. இவையெல்லாம் சருமத்தின் கருமையைப் போக்கக் கூடியவை.

* ஒயிட்டனிங் ட்ரீட்மென்ட் எப்படிச் செய்யப்படுகிறது என்று பார்ப்போம்.

* முதலில் கிளென்சர் தடவப்படும். இதை முகத்தில் தடவி, சில நிமிடங்கள் கழித்துத் துடைக்கும் போதே மெலனின் குறைய ஆரம்பிக்கும். முகம், கழுத்தின் முன், பின் பக்கங்களில் தடவி லேசாக மசாஜ் செய்து டவலால் துடைக்க வேண்டும்.

* அடுத்து ஃப்ரெஷனர். இது

வைத்திருக்கலாம்.

* அடுத்தது நரிஷிங். இதில் வைட்டமின் சி, லிக்கரைஸ், மாயிச்சரைசர் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன. மாலை நேரங்களில் போடுவது அதிக பலனைத் தரும். சருமத்தில் தடவி பத்து முதல் பதினைந்து நிமிடங்கள் அப்படியே விட்டுவிட வேண்டும். இதிலுள்ள வைட்டமின் சி சருமத்தின் கரும்புள்ளிகளைப் போக்கும். பட்டு மாதிரியான, பளபளப்பான சருமம் உடனே கிடைக்கும்.

* மல்பரியின் சாரம், வைட்டமின் சி கலந்த மெலா ஃபேடினை தினமுமே உபயோகிக்கலாம். இதை மட்டும் வீட்டிலிருந்தபடியேகூட உபயோகிக்கலாம். சரும நிறத்தில் நல்ல மாற்றம் தெரியும். இதைத் தடவிய பிறகு துடைக்காமல், அதன் மேல் இன்ஸ்டன்ட் ஒயிட் மாஸ்க் போட வேண்டும். மெலனினின் வேலையை இது குறைக்கும். சருமத்தில் உள்ள நச்சுப் பொருட்களை நீக்கி, பருக்கள், கருந்திட்டுகள் வராமல் தடுக்கும்.

* கடைசியாக லைட்டனிங் டே ப்ரொட்டெக்ஷன். இதைத் தடவிக் கொள்வதால் பிளீச்சிங் செய்த பலன் உடனடியாகக் கிடைக்கும். எஸ்.பி.எஃப் என்று சொல்லக்கூடிய சன் ப்ரொட்டக்டிவ் ஃபேக்டர் இதில் முப்பதுக்கும் மேலாக உள்ளதால், வெயில் பட்டு சருமம் கறுத்துப் போவதும் தவிர்க்கப்படும்.


* ரொம்ப ரொம்ப மோசமான சருமத்தை உடையவர்களுக்கு விசி பிள் ஃபேடிங் அவுட் என்கிற பிரத்தியேக சிகிச்சை உள்ளது.

ஒயிட்டனிங் சிகிச்சையைத் தொடர்ந்து செய்து வருபவர்களுக்குக் குறிப்பிட்ட நாட்களுக்குள் சரும நிறத்தில் நிரந்தர மாற்றம் தெரியும்.



மையறு வாள்விழி யாரையும் பொன்னையும்
மண்ணெனக் கொண்டு மயக்கற்றிருந்தாரே,
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்க ளாமென்றிங் கூதேடா சங்கம்!

சுப்பிரமணிய பாரதியார்-



## பாப்பா முரசு சிறுகதை

# மரியாதைக்குரிய திருடன்!



கோசலை நாட்டில் நான் இருந்தபோது அங்குலிமாலன்' என்ற பயங்கர கொள்ளைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் தோற்றம் மகா பயங்கரமானதாகும். அவள் பெயரைக் கேட்டாலே அழுத பிள்ளை வாய் மூடும். பெரும் பெரும் வீரர்கள் கூட அவன் பெயரைக் கேட்டால், பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடுவர்.

அந்த அங்குலிமாலன் மக்களிடம் கொள்ளையடித்து வாழ்ந்து கொண்டிருந்தான். அவனை எதிர்ப்பவர்கள், அவனது கொள்ளைக்கு உடன்பட மறுப்பவர்களது கை விரல்களை வெட்டி, நூலில் கோர்த்துத் தன் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொள்ளும் கொடூரன் அவன்.

அவனைப் பிடிக்கக் கோசலை நாட்டு இராணுவத்தினாலேயே முடியவில்லை. அதனால் அவனது கொட்டம் அதிகமாயிற்று. அப்பாவி மக்கள் அவனது கொடூரத்துக்குப் பலியாகிக் கொண்டே வந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவனைப் பிடிக்க நான் விரும்பினேன்.

இதைக் கேட்ட கோசலை நாட்டு ராஜா பதறிப் போய், "புத்தர் பெருமானே! எனது சேனையாலேயே அந்தக் கொள்ளைக்காரனைப் பிடிக்க முடியவில்லை. அப்படியிருக்கத் தாங்கள் தனிமையாகச் சென்று அவனைப் பிடிக்கவா? அது முடியாது!" என்று சொல்லி என்னைத் தடுத்தார்.

ஆனால் என் முயற்சியிலிருந்து நான் சிறிது கூட பின்வாங்க விரும்பவில்லை.

"இல்லை என்னால் அவனைப் பிடிக்கவோ அல்லது திருத்தவோ முடியும். எனக்குச் சில மந்திர தந்திரங்கள் தெரியும். அதைக் கொண்டு அவனை எளிதில் மடக்கி விடுவேன்!" என்று கூறிவிட்டு மன்னரிடமிருந்து விடைபெற்றுக் காட்டுக்குச் சென்றேன்.

காட்டுக்குள் நுழைந்ததும், "நில் அங்கே!" என்று முரட்டுத்தனமான குரல் கேட்டது. நான் நின்று குரல் வந்த திசையில் பார்த்தேன். மிகப் பயங்கரமான தோற்றத்தில் அங்குலிமாலன் நின்று கொண்டிருந்தான். நான் இமைக்காமல் அவனையே பார்த்தேன். அவன் உடனே பாய்ந்து என் அருகே வந்தான்.

"நீ யார்? இந்தக் காட்டுக்குள் உனக்கென்ன வேலை?" என்று கேட்டான் அங்குலிமாலன். "நான் அங்குலிமாலன் என்ற பெரியவரைப் பார்க்கச் சென்று கொண்டிருக்கிறேன்" என்றேன்.

அதைக் கேட்ட அங்குலிமாலன் திகைத்து, "என்ன! பெரியவரா?" என்று கேட்டான்.

"ஆமாம்! பெரியவர் தான்!" என்றேன் மீண்டும். அதைக் கேட்டு அவன் உடல் கூசுவதை நான் பார்த்தேன். இப்போது அவனை மடக்குவது சுலபம் என்று நினைத்தேன்.

"இதோ பாருங்கள்! கடவுளின் படைப்பில் எல்லாருமே பெரியவர் தான். சிறியவர் என்ற பாகுபாடு எப்போதும் இருந்ததில்லை. தீமை செய்வதில் பெரியவராகத் திகழும், நீங்கள் நன்மையான காரியங்களைச் செய்தால் இதை விடப் பெரிய அந்தஸ்து உங்களுக்குக் கிடைக்குமே!" என்றேன்.

"ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். இதுவரை மக்களின் வாயிலிருந்து கொள்ளைக்காரன், கொலைகாரன், நாசகாரன் என்பது போன்ற ஏச்சுப் பேச்சுக்களைத்தான் வாங்கியிருக்கிறேன். ஆனால் நானும் ஒரு மனிதன், நானும் மரியாதைக்குரியவன் என்பதைத் தங்களின் மூலமே அறிந்தேன். என் பாவச் செயல்களை இந்த வினாடியே நான் விட்டுவிட்டேன்,' என்றான்.

அன்புக் குழந்தைகளே! அதிகாரத்தினால் செய்ய முடியாததை அன்பு செய்து விட்டது பார்த்தீர்களா? அன்புக்கு இணை கிடையாது. நீங்களும், முரட்டுச் சுபாவம் கொண்ட உங்கள் சக மாணவர்களைப் புத்தர் போன்று அன்பால் திருத்துங்களேன்!

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள. சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **15.02.2003.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 483**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 480

**பரிசுக்குரியவர்:**
**முஹம்மது அரபாத்,**
357,ஏ12, ஹிரும்புர வீதி, தங்கெதர, காலி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| **அ.வா. நஜினா,** 181/08, முஸ்லிம்பொத்தானை, கந்தளாய். | **ஜெ. ஜினிபா,** 208, ஹொரவப்பொத்தான வீதி, வவுனியா. |
| **செல்வி ர. பவித்ரா,** 74, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை. | **எல்.ஏ.கே. மடோனா டிலக்சி,** பாண்டிருப்பு-02, கல்முனை. |
| **ஜயதீப் விஜயகுமாரன்,** இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | **விஜ்யு உதயகுமாரன்,** 55/6, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டி... ஹுருகொடவத்தை. |
| **நி. நிலோஜி,** 364, தேக்கவத்தை, வவுனியா. | **யோகராசா சிவாஜினி,** சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| **செல்வி ஜெ. பால்ராஜ்,** பிலிமதலாவ. | எம். எ.ப். பாத்திமா ரிப்னா, மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |


## விடுகதைகளும் விடைகளும்

1. அவர் வெடித்தார் இவர் உடுத்தினார் அது என்ன?
2. அழுததும் சிரித்தார்கள் அது என்ன?
3. காட்டில் பொங்கல் வைத்தேன் கழுகும் தின்னலை காக்கையும் தின்னலை அது என்ன?
4. ஆடு மேயுது தோல் காயுது அது என்ன?
5. பக்கத்தில் ஒரு பட்டணம் எட்டித்தான் பார்க்க முடியல்லே அது என்ன?
6. ஊசியுடன் அலைவார் டாக்டர் அவர் ஊசி போட்டால் அது மருந்தல்ல, விஷம் அது என்ன?
7. சிரித்தால் சிரிப்பேன் அழுதால் அழுவேன் நான் யார்?
8. தரணிக்கு ஒளிதர தண்ணீருக்குள் மூச்சடக்கினான் அது என்ன?
9. உருவத்தில் ஒன்றானவன் உடன் வருவான் வெளிச்சத்தில் மட்டும் அவன் யார்?
10. வீட்டுக்கு வெளிச்சம் தர உரசியவன் எரிந்து போனான் அவன் யார்?

**விடைகள்.**

1. பருத்தி ஆடை
2. பிறந்த குழந்தை
3. சுண்ணாம்பு 4. பாம்பு
5. முதுகு 6. தேள்
7. முகம் பார்க்கும் கண்ணாடி
8. முத்துக் குளித்தல்
9. நிழல் 10. தீக்குச்சி

## அதிசய உலகம்!



படத்தில் இருக்கும் பறவையின் பெயர் அல்பாட்ரோ. மிக நீளமான மெல்லிய இறக்கைகளுடைய இப் பறவை அப்படியே வழுக்கிக் கொண்டு பறக்கக் கூடியது. அதிக தூரத்தைக் கடந்து பறக்கும் போது கூட எப்போவாவது ஒரு முறைதான் தன் இறக்கைகளை அசைத்துப் பயன்படுத்தும்.

இவ் வகைப் பறவைகள் தன் கூடுகள் உள்ள இடத்தில் இருந்து பறக்க, விமான ஓடு பாதை போல பாதை அமைத்துக் கொள்ளும். எப்படி விமானம் பறக்க ஆரம்பிப்பதற்கு முன்னால், ரன்வேயில் ஓடி 'ஒயிங்' என்று பறக்க ஆரம்பிக்குமோ... அப்படியே இப் பறவையும் மிக வேகமாக ஓடித் தன்னுடைய கால்களால் பூமியை ஒரு தட்டுத் தட்டி, வேகமாகச் சிறகை அடித்துச் 'சொயிங்' என்று மேலே எழும்பிப் பறக்க ஆரம்பிக்கும். பறக்கத் துவங்கிவிட்டால் அப்புறம் பிரச்சனை இல்லை. ரொம்பத் தூரத்திற்குப் பறந்து செல்லும்.

அல்பாட்ரோ குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு பறவை, தனது இன மற்றப் பறவைகள் போல, தரையில் வேகமாக ஓடிப் பின்னர் பறக்காது. ஏன்னா, இதன் இறக்கையின் அளவே 3.45 மீட்டர்னா பார்த்துக்கோங்க. இவை பெரும்பாலும் செங்குத்தான பாறைகளிலேயே தனது கூடுகளை அமைத்துக் கொள்ளும். அப்பதானே ஒரு குட்டிக் கரணம் அடிச்சி எழும்பிப் பறக்க வசதியா இருக்கும்.

## TOP TEN

**இவ்வாரம்:- உலகில் பௌத்தர்கள் அதிகமாக வாழும் முதல் 10 நாடுகள்**


| நாடு | பௌத்தர்கள் மொத்த சனத்தொகை |
|---|---|
| 1. சீனா | 104,000.000 |
| 2. ஜப்பான் | 90,510,000 |
| 3. தாய்லாந்து | 57,450.000 |
| 4. வியட்னாம் | 50,080.000 |
| 5. மியான் மார் (பர்மா) | 41,880.000 |
| 6. இலங்கை | 12,540.000 |
| 7. தென்கொரியா | 11,110.000 |
| 8. கம்போடியா | 9,870.000 |
| 9. இந்தியா | 7,000.000 |
| 10. மலேசியா | 3,770.000 |
| உலக மொத்தம் | 362,245.000 |

## அறிவுத் தேடல்

சென்ற வாரப் புதிரின் விடை:

a = 6
b = 14
c = 59

## இந்த வாரப் புதிர்



இந்தப் படத்தில் எத்தனை பிறைச் சந்திரன்கள் உள்ளன.

# பத்து ரூபா



மாதம் ஒன்றுக்கு அரசாங்கத்துல பத்தாயிரம் எடுப்பவரையும் இந்த நாட்டின் விலைவாசி ஆட்டிப் படைக்கும் என்றால் தினக் கூலி ஏழைகளின் நிலையைச் சொல்லவா வேண்டும். அன்று வெள்ளிக்கிழமை என்பதால் வீட்டிலேயே இருந்துவிட்டேன். ஊரெல்லாம் ரமழான் விசேஷம் களைகட்டியிருந்தது. இன்றோடு என் மனைவியும் இருபத்தைந்தைத் தாண்டிவிட்டாள். வாசலில் வந்து நின்று முன் வீதியைக் கவனித்தேன். மோட்டார் சைக்கிலும், சைக்கிலுமாகப் போய்க் கொண்டிருந்தது. "பிடவே... பேபிசூட், சாரி" என்ற கூவல்கள்தான் அதிகமாக் கேட்டுக் கொண்டிருந்தன. வீட்டுக்குள் இருந்து மனைவியழைத்தாள்.

"இன்னமும் நான்கைந்து நாள் தானிருக்கு. நாம சொணங்கச் சொணங்க துணி மணியின்ர வெல தான் ஏறும். பெருநாளன்னைக்கு எடுக்கிறதப் பார்க்க சும்மாவே இருந்திடலாம். இத்தன நாளும் ஒழச்சது தான் மிச்சம், பிச்சக்காரன் வந்தாலும் ஒரு ரூபாய்கூட இல்ல. நமக்கு உடுப்பு இல்லாட்டியும் பரவாயில்லை. பிள்ளங்க மூணுக்காச்சும் பார்த்திட்டு வாங்க." மனைவி சகித்துக் கொண்டாள்.

இனியும் சேர்ப்பது சாத்தியமில்லை "இன்னிக்கு எடுத்திட வேண்டியது தான்" என்று நினைத்த வண்ணம் கிணற்றடிக்குப் போய் முகம் அலசி விட்டு வீட்டுக்குள் நுழைந்தபோது மற்றொரு பல்லவியை மனைவி பாடிக் கொண்டிருந்தாள். "பிள்ளையின் பால்மாப் பெட்டி தீர்ந்திட்டது" என்று குறுகுறுத்துக் கொண்டிருந்தாள். விடிந்து இவ்வளவு நேரத்திற்கும் குறைவான செய்தியே காதில விழுகுது. நிறைவான செய்தி கேட்பதென்றால் இந்த மாரி கழிய வேண்டும். தொழிலெல்லாம் சீராக வேண்டும். செங்கல்லறுப்பவனுக்கு மழை தேவையில்லை. வேளாண்மை செய்வனுக்கு மழை வேண்டும். இடையில் கூலிக்காரன்பாடு பெரும்பாடு.

சட்டையைக் கையில் எடுத்தேன். போன பெருநாளைக்கு முந்தியதில் எடுத்தது. இரண்டு பொத்தான்தானிருந்தது. மற்றதுக்கு ஊசி குத்திக் கொண்டேன். அடிக்கடி கண்கள் மட்டும் அந்தப் பழைய அலுமாரியின் மூலையைப் பார்த்துக் கொண்டது. மனைவிக்குத் தெரியாம நான்கைந்து மாதமாகச் சேர்த்தது! ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் என்றால் ஒரு மாதத்தைக்கு மனக்கணக்குப் பண்ணிக்கொண்டேன். மனைவி என்ன செய்கிறாள் என்று திண்ணையில் பார்த்தேன். கிணற்றடியில் சத்தம் கேட்டது!

எடுக்கும் போது கண்டால் எரிந்து விழுவாள், பால்மாப் பொட்டியில்லாம குழந்த அழுகுது பதுக்கல் வேல நடக்குதாக்கும் எண்டு.

சத்தப்படாமல் அலுமாரியின் அடியில் குந்தினேன். வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. திடீரென்று திண்ணைக்கு வந்தேன். வாசலில் யாரும் இல்லை. தாமதிக்காமல் சென்று அலுமாரியைத் திறந்து அந்த மட்டைத் தாள் பெட்டியைக் கையில் எடுத்தேன். மேல் மட்டையை காசு உள்ளே போடுவதற்குத் தோதாகப் பிரித்து வைத்திருந்தேன். ஐந்து மாதத்திற்கு முன்பாக வைத்தது, இன்றுதான் கையில் எடுக்கிறேன். சற்றுப் பாரமாக இருந்தது. மனம் பாபா புடைவையிலும் படையப்பா சாரனிலும் தாவிக் குதித்தது. உள்ளே ஒரு கையை விட்டு தடவிய வண்ணம் மறுகையால் பெட்டியைப் பிரித்தேன்! உள்ளே... முற்றாக நறுக்கப்பட்ட பத்து ரூபாத் தாள்கள் மீது மூன்று எலிக் குஞ்சுகள் பதற்றத்தால் முனங்கிக் கொண்டிருந்தன.

**ஒலுவில் அபு ஸர்பான்**

# காத்திருத்தல்

"என்னணை ஆச்சி! விமலனைப் பற்றி ஏதாவது தகவல் கிடைச்சுதே?"

"இல்லப் பிள்ளை! அதுதான் இருந்து நான் ஏங்கிக் கொண்டிருக்கிறன்."

"விமலன் பொங்கலுக்கெண்டாலும் வீட்ட வந்திடுவான் என்னணை...? விட்டிடுவாங்கள் என்னணையாச்சி?"

"அப்பிடியானாத்தான் என்ரை உசிரும் இனி இந்த உடம்பில நிக்குமம்மா...! அவனில்லாம இனி சீவிச்சு எனக்கென்னடியாத்த வரப்போகுது?"

"அழாதயணை, எப்படியும் தம்பியை இனி விட்டிடுவாங்கள். சமாதானம் வந்திட்டுதெல்லே! அதால பயப்பிடத் தேவேல்ல! உனக்கும் வயசு போயிற்றுது. உதுகளைக் கனக்க யோசிச்சியெண்டா வருத்தம் வந்து பிடிச்சிடும்."

"நான் ஆருக்காக பிள்ளை இந்த உசிரை வைச்சிருக்கிறன்? அவனுக்காகத்தானே! அவன்ரை தேப்பனும், தாயும் செல்லடிபட்டுச் செத்தாப் பிறகு நான்தானே எல்லாமெண்டு அந்தப் பிள்ளையும் நம்பிக்கொண்டிருக்கு...! எண்டாலும் இந்தக் கிழவி என்னத்தைத் தானடியம்மா செய்ய ஏலுமாயிருக்கிறன்...! ஆருட்டப் போயும் எனக்கு ஒழுங்காக் கதைக்கவும் தெரியேல்ல, ஒண்டும் தெரியேல்ல... இந்தக் கண்ணே எனக்கு ஒழுங்காப் பாக்கக்கூட முடியாமயிருக்கு... நான் எங்கதான் போவன்...? ஒரேயொருக்காத்தான் என்ரை பேரனைப் போய் வெலிக்கடேல பாத்தன். அத்தோட எல்லாஞ்சரி...! இப்ப எங்க அங்க எனக்குப் போய் வர உடம்புக்கு ஏலுமாக்கிடக்கே."

"ஆச்சி...! உனக்கொரு வியளம் தெரியுமோ இல்லையோ... தம்பூன்ரை பொடியனை விட்டிட்டாங்களாமெணை. பங்க அவன் வீட்ட வந்திருக்கானாம், என்ர அவருமொருக்காப் போய்ப் பாத்திட்டு வந்திருக்கார்."

"ஆமோ... அப்பிடியே! அந்தப் பிள்ளையும் பாவந்தான்... என்ரை பிள்ளை மாதிரித்தானவனுமெனக்கு... அவன் சோமாயிருக்கானாமேயம்மா?"

"எனக்குத் தெரியாதாச்சி... ஏதுமப்பிடி பிசகெண்டால் அவரெனக்குச் சொல்லியிருப்பார். நல்லாயிருக்கிறானெண்டுதான் அவர் சொன்ன மாதிரியில தெரியுது..."

"நல்லூரான்ரை கிருபையில அப்பிடியே அந்தப் பிள்ளை இருந்திரோணும்.... ஐயோ!... இந்தப் பிள்ளையள விசாரணையெண்டு அடிச்சு முறிச்சு விசராக்கிப் போட்டாங்களாம்.. உதுகளெல்லாத்தையும் கேள்விப்பட கேள்விப்பட எனக்குக் குலை நடுங்குது பிள்ளை... என்ரை பேரன் ஒரு குழப்படியுமில்லாத சாதுவான பிள்ளை... சும்மா றோட்டில போய்கொண்டிருந்தவன விசாரணைக்கெண்டு கூட்டிக் கொண்டு போனாங்கள். அதோட போனவன்தான். என்ரை கண்ணில பல வருசம் வரைக்கும் அவனை என்னால காணவே கிடைக்கேல்ல. அதுக்குப் பிறகு எத்தினியோ இடங்களில போய் ஆள் தெரியாதவனையெல்லாம் காலில கூட விழுந்து மன்றாடிக் கேட்டுத்தான் கடைசியா என்ரை பிள்ளையை நான் கண்டன்.... எல்லாம் நடந்து இப்ப எத்தினை வருஷம்... இப்ப அஞ்சு வருசமாச்சு. எத்தினை தீபாவளி... எத்தினை பொங்கல் வந்து போச்சு. ஒவ்வொண்டும் வாற காலமெல்லாம் வீட்ட வருவானெண்டுதான் அவனை நினைச்சு நான் ஏங்கலாச்சுக் கொண்டிருக்கிறன்....



எனக்கும் கன காலமில்ல பிள்ளை. போயிடுவன் போலக் கிடக்கு அவன் வீட்ட வந்தா நானும் காலைக் கையை நீட்டிக் கிடந்து நிம்மதியாச் சாவன்."

"சீ... என்ன சாகிற சாகிற தெண்டுறாய்? ஏன் அப்படியெல்லாம் பினாத்திறாய்? கனகாலம் நீ இருப்பாயாச்சி. பேரனுக்கு நீயொரு கலியாணமும் செய்து வைச்சு பூட்டப்பிள்ளையும் கண்டு முடிச்சுத்தான் நீ சாவாய்."

"உன்ரை வாய் பொன் வாயாயிருக்க வேணும் பிள்ளை. என்ரை பேரன் சீராய் வாழுறதையும் நான் பாக்க வேணும்தான். இந்தக் கிழவி தானே அவனுக்கெல்லாம்... வருவான். அவன் கட்டாயம் வந்திடுவான். அவன் வருகிறதோட நல்லாய் அவனைப் பாத்தெடுத்து உடம்பைத் தேற்றிவிட வேணுமெண்டு நான் உங்க என்ன எல்லாம் வாங்கி வைச்சிருக்கிறன் தெரியுமே...! நான் இப்ப வன்னியில இருந்து வரேக்க சுத்தமான தேன் ஒரு கலன் வாங்கியந்திருக்கிறன். இங்கினையா வந்தும் கோடிப் பக்கம் இப்ப கிழங்குப் பாத்தி போட்டு எடுத்ததை ஒடியலாக் காயவைச்சுக் கூட உள் முகட்டில் கட்டித் தூக்கிவிட்டிருக்கிறன்... அருமையான நல்லெண்ணெயும் நாலு போத்தல் முட்டக் கிடக்கு.... வெங்காயத்த வதக்கி சுடச்சுட நல்லெண்ணையோட சோத்தில ஊத்தினா விருப்பமா அவன் சாப்பிடுவான்.... அவன் வருவான். எப்பிடியும் அவன் கட்டாயம் கிட்டத்தையில வந்திடுவான்... பிள்ளைக்கு என்ர கையால கொஞ்ச நாளைக்கு சமைச்சுப் போட அவன் ஆள் மளமளவெண்டு தேறிருவான்."

உச்சத்திலே பல்லி ஒன்று சொல்லியது.

"உந்தா அடிச்ச மாதிரி முகட்டிலயிருந்து பல்லியும் சொல்லுதாச்சி. பொங்கலுக்கு முன்னவாய் தம்பி வந்திருவான் போலத்தான் சகுனம் கிடக்கு. அதுதானே நான் நம்பிக்கையா சொல்லிக் கொண்டிருக்கிறன் பிள்ளை... விமலன் வந்தவுடன் அடுத்த வருசம் சன்னதிப் பெருநாள் வர அவனைக் காவடி தூக்க வைக்க வேணும் பிள்ளை... எத்தினை வருசமாச்சு நான் அந்த நேத்திவைச்சு... என்ரை பிள்ளைக்கு ஒண்டும் கெடுதல் வராம காப்பாற்றி வைச்சிருக்கிறானெல்லே அந்த அன்னதானக் கந்தன். முருகா... முருகா.. இன்னும் பார் பிள்ளை, நீ என்னத்தைத் தான் சொல்லு, அவன் இங்க தோட்டத்தில வெங்காயம் போட்டெடுத்த மாதிரி ஆருக்கும் விளைஞ்சதே? என்ரை ராசன் வந்து வீட்ட கால் வைக்கட்டும். பிறகு உந்தக் கொட்டில் நிறைய வெங்காயம் எப்பிடிக் கட்டுக் கட்டாத் தூக்கிக் கிடக்குமெண்டு ஒருக்கால் உண்ணாண நீ வந்து பார்! எல்லாம் உந்தச் சவம் பிடிப்பாரின்ரை நாவூறுதான்... உங்கை அப்ப அவன் உப்பிடியெல்லாம் உழைச்சுத் தள்ளுறானெண்டு ஏங்கி ஏங்கி சனம் எவ்வளவாய் எரிச்சல்பட்டதுகள். இப்ப எல்லாம் அடங்கிப் போச்சு.. அமத்தி வைச்சுக் கொண்டு இங்கினை ஒரு விண்ணாணம் பாக்கினம்."

"ஆச்சி நேரம் போகுது. நான் வீட்ட போயிற்று ஆறுதலாப் பிறகு வாறன்... பொங்கலுக்கு அவர் போய்ச் சாமான்கள் வாங்கியர வேணுமெண்டவர். அந்த அடுக்கையும் இனிப் போய் பாக்க வேணும்."

"உண்ணாணை சின்னப் பிள்ளையளுமெல்லே உனக்கிருக்கு. இந்த வருசம் சொந்த வீடு வாசல் வழியவும் வந்திருந்திட்டியள். வேளைக்குப் போய் அதுகளையும் பாரம்மா."

கிழவி அப்படிச் சொல்ல அடுத்த வீட்டுத் திலகம் அங்கிருந்து அகன்றாள். அவள் போனதன் பின்பு ஆச்சி, அவளின் ஆறுதல் வார்த்தைகளில் ஒருவாறு இப்போ தேறி உயிர்த்ததாய் விட்டாள். இன்று கட்டாயமாக ஒன்றைச் செய்ய வேண்டுமென்று வெகுவாக அந்தக் காரியத்தில் அவள் ஆரவாரப்பட்டாள். பொழுதிலங்கும் வேளையானதால் எங்கோ ஒரு மூலையில் போட்டுவைத்த பித்தளைக் குத்து விளக்கை எடுத்து வந்து தூசி தட்டித் துடைத்தாள். அதற்குப் புளி கரைத்துப் போட்டு நர நர வென்ற மண்ணுடன் சேர்த்துத் துலக்கி எடுத்து அதைப் பளபளவென்றிருக்க ஆக்கினாள். பழஞ்சீலையில் கரைப் பக்கமாகப் பார்த்து ஒரு துண்டைக் கிழித்து தன் ஊசிக்காலை நீட்டி வைத்து விளக்குக்கொரு புதுத் திரியை உருட்டிப் போட்டுத் தீபத்தை ஏற்றினாள். வீட்டுக்குள் வைத்த தீபம் அறையிருட்டைப் போக்கி விட்டிருந்தது. தீபத்தைப் பார்த்த புளகாங்கிதத்தில் அவளுக்கு மனதிலும் ஒரு புத்தொளி உண்டாகியிருந்தது. அவள் மனதில் இப்போ கவலைகள் இல்லை... இவ்வளவு காலம் பட்ட கஷ்டங்கள் ஒன்றும் அவள் முகத்தில் தெரியவில்லை. இன்று ஏற்பட்ட மனவுறுதியால் மலை போல் அவளுக்கிருந்த தடைகள் யாவும் நுண்துகள் போல சிதறிப் பறந்து விட்டதாய்த் தெரிந்தது. இந்த நம்பிக்கையெல்லாம் தும்பிக்கையானிடத்தே இருந்து வரம் பெற்றதைப் போன்று அவள் உணர்ந்தாள். வெளியே வெளிச்சம் மடிந்து காரிருள் பரவிவிட்டது. மாரி காலத்துக் கூதல் காற்றும் வீசியது. கிழவியின் பூஞ்சை உடம்பால் குளிரெதையும் தாங்க முடியாது. என்றாலும் படலையை உற்றுப் பார்த்துக்கொண்டே அவளின் பூ விழுந்த கண்கள் இமைப்பதை மறந்து இருக்கின்றன. பேரன் வருவான் பேரன் வருவானென்று அவளின் மனம் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அவளின் இந்தக் காத்திருப்பு அவள் வயதுக்கும் உடல் நிலைக்கும் கனகாலத்துக்கு இல்லையென்பது உறுதி என்றாலும் அவள் தன் பேரன் வரும்வரையில் காத்திருக்கத்தான் செய்வாள். தன் பேரன் வந்து சேருவதற்கிடையில் அந்தக் காலன் வந்து அவளை இடையே அழைத்தாலும் அவனுடன் அறப்போர் புரிந்து வெற்றி கொள்ளத் தயாராக இருப்பவளைப் போலத்தான் அவளைப் பார்க்கையில் தெரிந்தது.

**நீ.பி. அருளானந்தம்**

# திரும்பும் அம்புகள்

## அங்கம் 08

அந்தோணி கேட்க வேணுவுக்கே ஒரு மாதிரி பரிதாபமாகிப் போனது. அப்போது யாரோ வரும் சத்தம் கேட்டது.

"வேணு.... மேனேஜர்தான் வர்றான்னு நினைக்கறேன். ஓடு... மோட்டார்கிட்ட போய் என்னத்தையாவது நோண்டு. நானும் மண்வெட்டியோட போய் எதையாவது வெட்றேன்..."

அந்தோணி பரபரப்பானான். அருகிலேயே ஒரு களைக் கொத்தியும் மண்வெட்டியும் இருந்தது. எடுத்துக்கொண்டு அடர்வாக வளர்ந்திருந்த வாழைத் தோட்டத்துக்குள் புகுந்து கொண்டான். வேணுவும் வேகவேகமாக மோட்டார் பம்ப்செட் அறைக்குள் நுழைந்து மோட்டாரின் கார்ட் போர்ஷனை கழட்டத் தொடங்கினான்.

மேனேஜர்தான் வந்திருந்தார். யூனிஃபோர்ம் டிரஸ் அவருக்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை. சோளக் கொல்லை பொம்மை மாதிரி இருந்தது. பம்ப்செட் அறையை எட்டிப் பார்த்தவர் அங்கே செயல்படத் தொடங்கியிருந்த வேணுவைப் பார்த்து ஒரு மாதிரித் தாடையைத் தடவினார்.

அவர் நிழல் அவன்மேல் விழுந்தும் வேணு திரும்பவேயில்லை. மனசெல்லாம் அந்தோணி சொன்ன விஷயங்களால் படபடப்பில் இருந்தது!

"வேணு..." மனேஜர் அவனை அதட்டலாய் அழைத்தார்.

திரும்பினான்.

"டாக்டர்கிட்ட நீ போகலை....?"

"இல்லய்யா." வேணுவின் குரலில் ஈனசுரம்.

"அப்ப என்கிட்ட லீவு போட்றதுக்காகப் பொய் சொன்னேன்னு சொல்லு!"

"அய்யா..." பதறிப் போனான் வேணு.

"ஆமா.. எங்க அந்த அந்தோணி...?"

"இங்கதான்யா இருந்தாரு..."

இங்கதானனா... எங்க?

"வரும்போது வாத்தேங்க... வாழைத் தோட்டத்துல இருக்காரோ என்னவோ..."

"சரி... வேலையை முடிச்சிட்டு என்ன வந்து பாரு..." அதட்டல் குறையாமல் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார்.

வேணுவுக்குள் பதட்டம் பெருகியது.

வெளியே அந்தோணியைத் தேடிக் கொண்டு நடந்தார்.

காற்று வாழைத் தோட்டத்தில் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தது. ஒழுங்காக ஒரு இலையை விட்டு வைக்கவில்லை. அவ்வளவிலும் கிழிசல்கள். பல வாழைகள் தார் போட்டிருந்தன. மூங்கில்கள் அவை கீழே விழாமல் தாங்கியபடி இருந்தன. அந்தோணியும் ஒரு இடத்தில் எருக்குழி வெட்ட ஆரம்பித்திருந்தான்.

மண்வெட்டி சரக்சரக்கென்று மண் கவளங்களை அள்ளிப் போட்டபடி இருந்தது.

மனேஜர் வரும் சத்தம் கேட்டும் வேலையில் கவனமாய் இருக்கிற மாதிரி நடித்தான் அந்தோணி.

"எலேய் அந்தோணி...." கத்திக் கூப்பிட்டார் மேனேஜர் நாகசாமி.

"அய்யா..." திரும்பினான்.

"என்ன பண்றே?"

"எருக்குழி போட்டுக்கிட்டிருக்கேங்க..."

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நல்ல வாழை இலையா பார்த்து ஒரு நூறு இலை வேணும். அறுத்து எடுத்துக்கிட்டு சமையக்காரன் கிட்டாமணியைப் போய்ப் பாரு."

"சரிங்கய்யா..."



"எங்கேயும் எதுக்காகவும் குழியைத் தோண்டிக் கிட்டு இருக்காதே... பெரியவர் உத்தரவு..."

மனேஜர் சொன்ன சூட்டோடு திரும்பி நடந்தார். நடக்கும்போது ஒரு பூவரசமரக் கன்று நடப்பட்ட குழியருகே சென்று ஒரு பார்வை பார்த்தார். அந்தோணியை அது என்னவோ செய்தது. அதன் பிறகு அவர் தலை மறைந்துவிட்டது. அந்தோணி அந்த மரக் கன்று அருகே வந்து குழியைப் பார்த்தான். இடுப்பு உயர மரக் கன்று. ஆரம்பத்தில் பங்களா முகப்பில்தான் நட்டிருந்தார்கள். அதை எதற்காக இப்படி வாழைத் தோட்டத்தில் கொண்டு வந்து நட்டு வைத்தார்கள் என்பது தெரியவில்லை.

அப்படியே நடுவதாக இருந்தாலும் அந்தோணிதான் அதைச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவனோ ஒரு ஞாயிற்றுக்கிழமை லீவில் இருந்த சமயம் யாரோ வந்து நட்டிருக்கிறார்கள்.

மேனேஜரிடம் கேட்ட போது, "பெரியவர்தான் நடச் சொன்னார். அது அங்க நல்லா வளரணும். கவனமாய்ப் பாாத்து தண்ணிவிடு" என்று சொல்லி அவன் வாயை அடைத்துவிட்டார்.

அப்போது கூட எதார்த்தமாகச் சொல்வதாகத்தான் நினைத்தான்.

ஆனால் அடிக்கடி தோட்டப் பக்கம் வந்து அந்தக் கன்றைப் பார்ப்பதுதான் சந்தேகத்தை வரவழைத்தது.

என்னவாக இருக்கும்?

சந்தேகத்தோடு கன்றுக் குழியைப் பார்த்தான்.

சற்றுத் தள்ளி அழுக்குத் துணி ஒன்று கிடந்தது.

மண்ணோடு மண்ணாக ஒட்டிக் கொண்டு கிடந்தது. குனிந்து அதை எடுத்துப் பார்த்தபோது சுரீர் என்றது. அது அரிமா மாளிகையில் ஊழியர்கள் அணியும் யூனிஃபார்மின் சட்டைக் காலர் பகுதி. காலரில் சலவைக் குறி 'ஞானவேல்' என்கிற எழுத்தாகத் தெரிந்தது. ஓடிப்போன ஞானவேல் சட்டை... இது எப்படி இங்க.

அந்தோணிக்குள் பூச்சி பறக்க ஆரம்பித்தது. சுற்றும் முற்றும் பார்த்தான். அப்போது அவனைப் பார்த்தபடியே வேணு வந்து கொண்டிருந்தான்.

"என்ன அந்தோணி மேனேஜர் தேடி வந்தாரா?"

"ஆமாம் வேணு... இதைப் பார்த்தியா?"

"என்ன இது... நம்ம யூனிஃபார்ம் சட்டைத் துணி மாதிரி இருக்குது."

"ஞானவேலோட சட்டைப்பா... கிழிஞ்சுபோய் இங்க கிடக்குது."

"அதுக்கென்ன...?"

"எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு. ஒரு நிமிஷம் யாரும் வராங்களான்னு பார்த்துக்கிட்டிரு. நான் என்னன்னு பார்க்கறேன்."

அந்தோணி மளமளவென்று அந்தக் குழியைத் தோண்டத் தொடங்கினான்.

"எதுக்கு இப்ப குழியைத் தோண்டறே?"

"காரணமாத்தான்..." சொல்லியபடி தோண்டிக் கொண்டே போனான்.

சில அடியிலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

குழியில் ஞானவேலின சடலம்.

★★★

**இந்திரா சௌந்தர்ராஜன்**

'ஒலிக்கு ஏற்ற எதிரொலி உண்டு. காரணமில்லாமல் ஒரு காரியமும் நிகழ்வது இல்லை. எது எதன் பொருட்டு என்பதைக் கண்டறியும் சக்தி நமக்கு இருந்தும் நாம் அதைப் பயன்படுத்துவதே இல்லை.

ஒரு கைதட்டல் ஒலியால் நாளை பெய்யவிருக்கும் மழை ஒரு நொடி முந்திப் பெய்யலாம். இல்லாவிட்டால் பக்கத்தில் இருக்கும் மரத்தில் இருந்து ஒரு இலை உதிரலாம். கண்டறியத் தெரிய வேண்டும்!

(அம்புகள் தொடர்ந்து வரும்..)

# ஆறுமனமே ஆறு!

## மன அதிர்ச்சி..... 01

திண்டுக்கல் மாவட்டம் அரசபிள்ளைபட்டி அகதிகள் முகாமிலிருந்து டெய்சியும் அவரது கணவர் ரமேஸும் எனது அலுவலகம் வந்திருந்தனர்.

இருவரையும் வரவேற்று அவர்களின் பிரச்சனையை அறிய முனைந்தேன்.

"ரமேஸ்! உங்கள் சொந்த இடம் எது? எப்போது இந்தியா வந்தீர்கள்?"

"எமது சொந்த இடம் திருகோணமலையிலுள்ள அன்புவெளிபுரம். 1992ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தோம்."

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள்'

"இரண்டு குழந்தைகள். மூத்தது ஆண் குழந்தை, 10 வயது. அடுத்தது பெண் குழந்தை, 8 வயது."

"ரமேஸ்! என்ன தொழில் செய்கிறீர்கள்?"

"பெயின்ரிங் வேலைக்குப் போகிறேன்."

"டெய்சி என்ன செய்கிறார்?"

"நான் வீட்டில்தான் இருக்கிறேன்" என்று சிரித்தபடியே டெய்சி கூறினாள்.

"அளவான குடும்பம். சந்தோசமான குடும்பம் என்று நினைக்கிறேன்'" என்றேன்.

ரமேசின் முகத்தில் சிறிய மாற்றம் தெரிந்தது.'

"சரி! என்ன விடயமாக என்னிடம் வந்தீர்கள்" இருவருமே அமைதியாக இருந்தனர்.

"என்ன ரமேஸ்! இருவருமே அமைதியாக இருக்கிறீர்கள்'"

"இஞ்சாருங்க! நீங்க சொல்லுங்க" என்று டெய்சி ரமேஸிடம் சொன்னாள்.'

"டெய்சி! நீங்க கொஞ்ச நேரம் வெளியிலே இருங்க. ஐயாவிடம் கதைத்துவிட்டு வருகிறேன்" என்று ரமேஸ் டெய்சியிடம் கேட்டுக் கொண்டார்.

"சரி. நான் கொஞ்ச நேரம் வெளியில் இருக்கிறேன்" என்று டெய்சி எழுந்தாள்.

"டெய்சி! நீங்கள் எமது அலுவலகத்தோடு உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களைப் பார்க்கலாம். தையல் பயிற்சி நிலையம், சத்துமா தயாரிப்பு நிலையம், செயற்கை இரத்தினக்கல் பட்டை தீட்டும் நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடலாம்." என்று டெய்சியைக் கேட்டுக் கொண்டேன்'

"சரி ரமேஸ்! கதிரையைக் கொஞ்சம் எனக்கு அருகாமையில போடுங்கள்."

ரமேஸ் கதிரையை அருகில் போட்டு அமர்ந்தார்.

"சொல்லுங்கள் ரமேஸ்! உங்கள் பிரச்சனை என்ன?"

"சுமார் ஆறுமாதங்களாக நான் மிகவும் மனக்கஸ்ரத்துக்கு உள்ளாகி இருக்கிறேன். நான் பல டாக்டர்களிடம் டெய்சியைக் காட்டினேன். ஒன்றுமில்லை என்று சொல்கிறார்கள். டெய்சிக்குப் பேய், பிசாசு ஏதாவது, தொட்டிருக்குமோ என்று பயமாக இருக்கிறது."

"ரமேஸ்! நீங்கள் மனதைக் குழப்ப வேண்டாம். நடந்ததை விபரமாகக் கூறுங்கள்" என்றேன்.

"போக கார்த்திகை மாதம். இரவு ஒரு மணி கடும்பனியாக இருந்தது. டெய்சியை ஆசையோடு கட்டிப் பிடித்தேன் திமிறி எழுந்த டெய்சி பயங்கரமாக அலறினாள். "ஐயோ! ஐயோ!' என்று கத்தியபடி வீட்டிறகுள் அங்குமிங்கும் ஓடியவள் கதவைத் தள்ளிக் கொண்டு வெளியே ஓடினாள். முகாம் சனங்கள் எல்லோரும் ஓடி வந்தார்கள். பக்கத்து வீட்டு புஸ்பா அக்கா டெய்சியைக் கட்டிப் பிடித்து முகத்தில் தண்ணீர் தெளித்து சுமார் அரை மணி நேரத்துக்குப் பின் டெய்சி அமைதியாக இருந்தாள். டெய்சி அலறியதும், எனது குழந்தைகளும் ஓவென அழுததும், முகாம் மக்கள் கூடினார்கள். ஏன் இப்படி நடந்தது என்பதுபற்றி என்னால் பரிந்து கொள்ளவும் முடியவில்லை. மிகவும் மனக் குழப்பத்தில் இருக்கிறேன். ஆனால் ஐயா, இப்படி நடந்தது ஒன்றும் டெய்சிக்குத் தெரியவில்லை. டெய்சி சுய நிலைக்கு வந்தபோது பக்கத்துவீட்டுக்காரர்கள் பலர் எமது வீட்டிலே இருந்ததால் 'என்னப்பா நடந்தது' என்று என்னைக் கேட்டாள்."

"சரி ரமேஸ்! நீங்கள் ஒன்றும் பயப்படத் தேவையில்லை. நீங்கள் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். ரமேஸ்! கார்த்திகை மாதம் இப்படி ஒரு சம்பவம் நடந்தது சரி, திரும்பவும் எப்போதாவது இப்படி நடந்ததா?

"இதுவரை மூன்று தடவைகள் நடு இரவில் டெய்சி குழப்பம் செய்திருக்கிறாள்." என்று ரமேஸ் கூறினார்.

"ரமேஸ்! டெய்சி குழப்பம் செய்யவில்லை. அவள் மனதில் ஏற்பட்ட ஒரு தாக்கம்தான் அவளைத் தன்னிலை மறக்கச் செய்திருக்கிறது. சரி ரமேஸ்,! இரண்டாவது தடவை நடந்த சம்பவத்தைக் கூறுங்கள்."

"டிசம்பர் மாதம் 24ம் திகதி இரவு 12 மணிக்கு கிறிஸ்மஸ் விழா பூசைக்குச் சென்றோம். இரவு இரண்டு மணிவரை குழந்தைகளோடு வெடி கொழுத்தி விளையாடிக் கொண்டிருந்தோம். டெய்சி அன்று மிகச் சந்தோசமாக இருந்தார்.

அன்று அதிகாலை 4.00 மணியிருக்கும் டெய்சி திடீரென அலறியபடியே வீட்டை விட்டு வெளியே ஓடினாள். நான் மிகச் சிரமப்பட்டு கட்டி பிடித்து முகத்தில் தண்ணீர் தெளித்தேன். அரை மணிநேரத்தில் சுய நினைவுக்குத் திரும்பினாள்."

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

ரமேஸுக்கு முகம் விகாரமாக இருந்தது.

"ரமேஸ்! நீங்கள் பதற்றப்படாமலிருக்க வேண்டும். உங்கள் மனைவியை எளிதாகச் சுகப்படுத்தலாம்"


ரமேஸுக்குக் குளிர்பானம் வழங்க ஏற்பாடு செய்தேன். அவருக்கு ஓய்வு தேவைப்பட்டது. சற்று ஓய்வின்பின்.

"ரமேஸ்! மூன்றாவது தடவை நடந்ததைச் சொல்லுங்கள்"

"ஒரு நாள் நான் பெயிங்ரின் வேலைக்குப் போய்விட்டு வீட்டிற்கு வருவதற்கு இரவு 11 மணியாகிவிட்டது. மனைவியும் பிள்ளைகளும் இரவு 9 மணிக்கெல்லாம் தூங்கிவிடுவார்கள். வெளியில் நின்றபடி டெய்சி, என்று கதவைத் தட்டினேன். மூன்று தரம் கூப்பிட்டிருப்பேன். வீட்டிற்குள் நின்றபடியே டெய்சி பயங்கரமாக அலறினாள். கதவு பூட்டியபடி இருக்கிறது; டெய்சி அலறுகிறாள், குழந்தைகளும் சேர்ந்து அழுகின்றன, நான் செய்வதறியாது திகைத்தேன்."

தொடர்ந்து வரும்...

# நடுவானில் வெடித்துச் சிதறிய கொலம்பியா விண் ஓடம்



**கொ**லம்பியா விண்வெளி ஓடத்தில் சென்ற வீரர்கள் 7 பேரும் திரும்பி வந்ததும் அவர்களை வரவேற்கக் காத்திருந்த வி.ஐ.பி.கள், உறவினர்களுக்கு அந்தச் சோகமான செய்தியைக் கூறும் போது நாஸா அதிகாரிகள் குரல் தளுதளுத்தது.

மகத்தானதோர் வெற்றிப் பயணத்தைக் கொண்டாடக் காத்திருந்தவர்களுக்கு விண்வெளி ஓடம் நடுவானில் வெடித்துச் சிதறிய செய்தி ஒரு கணம் நம்பக் கூடியதாக இருக்கவில்லை. ஆனால் உண்மை அதுதான் என்பதை நம்பியாக வேண்டிய கட்டாயத்துக்குள் அமெரிக்கர்கள் அனைவரும் தள்ளப்பட்டார்கள்.

16 நாட்களில் சுமார் 80 வகையான ஆராய்ச்சிகளை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்புகையில் கொலம்பியா விண்வெளி ஓடம் அதன் 7 வீரர்களுடன் சனிக்கிழமை காலை ஆகாயத்தில் தூகள்களாக வெடித்துச் சிதறியது.



பூமியிலிருந்து சுமார் 65 மைல் உயரத்தில் வைத்தே இந்த விண்வெளி ஓடம் வெடித்துள்ளதாக நம்பப்படுகின்றது.

செப்டம்பர் 11ம் திகதிய தாக்குதலின் பின்னர் அமெரிக்கர்களை அதிக அளவு அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவமாக இது அமைந்துள்ளது.

இந்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களுள் இந்திய விண்வெளி வீராங்கனையான கல்பனா சவ்லாவும், இஸ்ரேலின் முதல் விண்வெளி வீரரான இலன் ரேமனும் அடங்குகின்றனர்.

கல்பனா சவ்லா இந்தியாவின் பெருமைக்குரிய பெண்மணியாகக் கருதப்பட்டவர். 42 வயதான இவருக்கு இது இரண்டாவது விண்வெளிப் பயணம்.

இந்த விபத்துக்குப் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இருக்கலாம் என்ற ஊகங்கள் எழுந்துள்ள போதிலும் நாஸா விஞ்ஞானிகள் இதனை நிராகரித்துள்ளனர்.


தொழில்நுட்பக் கோளாறுகள் குறித்து ஆராய்வதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

அழிந்துபோன கொலம்பியா ஓடம் இதற்கு முன்னர் பல தடவைகள் விண்வெளிப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்த விண் ஓடத்தின் பெறுமதி 210 கோடி டாலர்களாகும்.

கொலம்பியா விண்வெளி ஓடம் பத்திரமான பயணத்துக்கு ஏற்ற நிலையில் இருந்ததா என்பது குறித்து இப்போது கேள்வி எழுந்துள்ளது. அதன் பத்திரத்தன்மை குறித்து முன்பே பல எச்சரிக்கைகள் வந்தது இப்போது தெரிய வந்துள்ளது.

"முன்பு பல எச்சரிக்கைகள் வந்தபோதும், இப்போது நடந்தது போன்ற பெரிய விபத்து ஏதும் நடக்கக் கூடும் என யாரும் கூற வில்லை. ஆனால், பாதுகாப்புக் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மட்டும் எச்சரிக்கப்பட்டிருந்தது."

விண்வெளி ஆய்வு மையத்தில் கொலம்பியா விண்வெளி ஓடத்துக்கான பிரிவில் பணிபுரிவோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்தது. பாதுகாப்பு ஏற்பாடுகளில் தேவையான கவனம் செலுத்த முடியாத அளவுக்கு இது குறைந்தது என புஷ் அதிபர் பதவி ஏற்றதும், நாடாளுமன்றக் குழு கருத்துக் கூறியிருந்தது.




'விண்வெளி திட்டப் பணியில் முக்கிய துறைகளில் தகுதி வாய்ந்த ஊழியர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை. இதனால், ஏற்கெனவே உள்ள ஊழியர்களுக்குக் கூடுதல் வேலைப்பளு. அவர்களும் விரைவில் சோர்வுற்றுவிடுகின்றனர்' என்றும் அந்தக் குழு கூறியிருந்தது.

விண்வெளி ஓடத்தின் பாதுகாப்புக் குறித்து ஆராய நிறுவப்பட்ட குழு, கடந்த ஏப்ரல் மாதம் தனது அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது.

விண்வெளி ஓடத்தின் பாதுகாப்புக் குறித்துக் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அது கவலை தெரிவித்திருந்தது.

நாஸாவுக்கு நிதி ஒதுக்குவது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது. "நாஸாவுக்கு எவ்வளவு பணம் தேவை? மற்றொரு ஓடம் இப்போதைக்குத் தேவையா? முன்பு நாஸாவுக்குப் போதிய பணம் ஒதுக்கவில்லையா? அப்படியானால் அது பாதுகாப்புக்கு ஏற்றவகையில் இல்லையா? என்பது குறித்து அப்போது விவாதிக்கப்படும்" என்று புளோரிடாவைச் சேர்ந்த செனட் உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கிறார்.

ஓடம் வெடித்துச் சிதறிப் பலியான விண்வெளி விஞ்ஞானிகளின் எரிந்த உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்திய வீராங்கனை கல்பனா சவ்லாவின் எரிந்த உடல் பகுதிகளும் கிடைத்துள்ளன.



"டெக்சாஸின் ஹெம்பில் பகுதியில் கொலம்பியாவின் உடைந்த பாகங்கள் விழுந்து கிடக்கின்றன. அதில் கருகிய மனித உடல் பாகங்களும் இருக்கின்றன" என்று பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

டெக்சாஸ், ஆர்கன்சாஸ், லூசியானா ஆகிய மாகாணங்களின் பல பகுதிகளில், 500 சதுர மைல் பரப்பில் கொலம்பியாவின் உடைந்த பகுதிகள் சிதறிக் கிடக்கின்றன. வீட்டுக் கூரைகள், வாகனம் நிறுத்தும் இடங்கள், நெடுஞ்சாலைகள் உள்பட பல இடங்களில் ஹெல்மெட் (தலைக்கவசம்) முதல் பெரிய உலோகத் தகடுகள் வரை விழுந்துள்ளன. ஆனால், அதிர்ஷ்டவசமாக மனிதர்கள் யார் மீதும் அவை விழவில்லை.

விண்வெளி ஓடம் வெடித்து உலோகத் துண்டுகள் எங்கெங்கே விழுந்து கிடக்கின்றன என்பது, செயற்கைக்கோள் மூலம் படம் பிடிக்கப்பட்டுப் பதிவுசெய்யப்படும் என்றும் விஞ்ஞானிகள் கூறினர்.

கொலம்பியா விண்வெளி ஓடம் நடுவானில் வெடித்துச் சிதறியதற்கு அதிக வெப்பமே காரணம் என்று நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இந்த விபத்தைத் தொடர்ந்து அனைத்து விண்வெளித் திட்டங்களையும் நாஸா தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

"ஓடத்தின் எரிபொருள் டேங்குடன் இணைந்த சிறிய இன்சுலேஷன் தளர்ந்து அதன் இடப்பக்க இறக்கையைத் தாக்கியுள்ளது. இதை ஓடம் வெடித்துச் சிதறுவதற்குச் சில நிமிடத்துக்கு முன்னர் தான் நாஸா கண்டுபிடித்தது.

ஓடம் பூமியிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்திலேயே இன்சுலேஷன் பிரச்சனையை நாஸா விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஆனால், ஓடம் மேலெழுப்பிச் செல்லும் போதும் பூமிக்குத் திரும்பும்போதும் அது ஒரு பிரச்சனையாக இருக்காது என்று அவர்கள் கருதினர்.

"ஓடத்தில் ரோபோவும் வைக்கப்பட்டிருக்குமானால் காமிரா உதவியுடன் இன்சுலேஷன் கோளாறு கடுமையானதா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொண்டிருக்கலாம். விண் ஓடத்தையும் அதில் பயணித்தவர்களையும் கடும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சுவரை ஆராய்வது மிகவும் முக்கியமாகும். ஓடம் திரும்பி வரும்போது அதனுடனான தொடர்பு துண்டிக்கப்படும் முன் அதன் இடப்பக்க இறக்கையில் வெப்பத்தை அளவிடும் சென்ஸார் கருவியில் கோளாறு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அதிக வெப்பம் காரணமாக ஓடத்தின் சுவர் அமைப்பு சிதைந்திருக்க வேண்டும். விமானப் படை, கடற்படையைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட சுய அதிகாரம் கொண்ட அமைப்பு இந்த விபத்துக் குறித்து விசாரணை நடத்தும். நாஸாவும் அதன் குழுவும் தனிப்பட்ட முறையில் விசாரிக்கும்" என்று நாஸா உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கல்பனா சவ்லா பிறந்த பஞ்சாப் மாகாணத்தின் ஹரியானா மாவட்டத்திலுள்ள அவரது சொந்த ஊரில் கல்பனாவின் இரண்டாவது விண்வெளிப் பயணத்தின் வெற்றியைக் கொண்டாட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இறுதியில் அத்தனையும் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளாக மாற்றம் பெற்றன.

உலகம் முழுவதிலுமிருந்து அமெரிக்காவுக்கு அனுதாபச் செய்திகள் போய்க் குவிந்துள்ளன. ஈராக் மக்கள் மாத்திரம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். "அமெரிக்காவின் அநியாயங்களுக்காகக் கடவுள் கொடுத்த தண்டனை" என ஈராக்கியர்கள் கூறுகின்றனர்.


வெள்ளவத்தை
(கொழும்பு தெற்கு)
Eric Rajapakse
Opticians
நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.
இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(ரொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)
தொலைபேசி: 01-362971,553877
பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்


## 15ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 11 1944



உதிர்வு 07 02 1988


**திருமதி மரியதாஸ் பேனடேற் (ராசாத்தி)**

அன்பின் திருவுருவாய் பண்பின் இலக்கணமாய் பாசத்தின் இருப்பிடமாய் எம் குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி பார்தனிலே எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் 15 கழிந்திட்ட போதிலும் எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் எம் இதயத்தை விட்டு எப்போதும் நீங்காது.

பேனடேற்றின் ஆன்ம சாந்திக்காக 07.02.2003 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு கொழும்பு, புதுச்செட்டித் தெரு வியாகுல மாதா ஆலயத்திலும் யாழ். கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்,
கணவன்- மரியதாஸ், பிள்ளைகள்- மருமக்கள்-
பேரப்பிள்ளைகள்- சகோதரர்கள்-மைத்துனர்கள்.
தகவல் எஸ். றன்ஜன்.

# கம்பியூட்டரில் அதிக நேரம் வேலை பார்த்தால்...



நாள் முழுவதும் கம்பியூட்டரே கதி என்று அதன் முன்னால் உட கார்ந்து வேலை செய்பவர்களுக்கு ஈ-த்ரோம்போசிஸ்' நோய் என்ற இரத்த உறைவு நோய் ஏற்படும் என்று மருத்துவ ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

சாப்ட்வேர் நிபுணர்கள், கம்பி யூட்டரில் அலுவலகப் பணிகள் பார்ப்பவர்கள் தவிர, ஈ-மெயில், பிரவுசிங், சாட்டிங்,வெப்-காமிரா என்று கம்பியூட்டர் முன் பல மணி நேரத்தை நாள் முழுவதும் செலவிடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கம்பியூட்டரில் நெடு நேரம் பணியாற்றுவோருக்கு இரத்தம் உறையும் (blood clotting) நோய் ஏற் படலாம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

நவீன ஈ-த்ரோம்போசிஸ்' என் றும் அவர்கள் பெயரிட்டுள்ளனர்.

ஒரே இடத்தில் உட்கார்ந்திருப் பதால் கால் நரம்பில் ஆரம்பித்து நுரையீரல் வரை படிப்படியாக இரத்தம் உறைந்து கட்டியாக மாறிவிட வாய்ப்பு இருப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு நாளைக்கு சுமார் 18 மணி நேரம் கம்பியூட்டரின் முன் னால் நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கும் 32 வயது மதிக் கத் தக்கவர்களிடம் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபரும் அடையாளம் காணப் பட்டுள்ளார். 'ஈ-த்ரோம்போசிஸ்' நோயால் தாக்கப்பட்ட மனிதர் கிட்டத்தட்ட இறந்து போன மாதி ரித்தான் என்கிறார்கள் ஆராய்ச் சியாளர்கள்.

'யூரோப்பியன் ரெஸ்பிரேட்டரி ஜர்னல்' என்ற ஆய்வுப் பத்திரிகை யில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நீண்ட நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து விமானப் பயணம் செய் தால் ஏற்படும் "economy class syndrome அல்லது deep vein thrombosis மாதிரித்தான் இந்த நோயும் ஏற்படுகிறதாம்.

முதலில் காலில் ஏற்படும் இந்த இரத்தக் கட்டிகள் படிப்படியாக உடலின் இரத்தக் குழாய்கள் முழு வதும் பரவுமாம். உறைந்து போன இரத்தக் கட்டிகள் சிதைந்து இரத்த ஓட்டத்தில் நுரையீரலுக்குக் கொண்டு செல்லப்படும்போது உயி ருக்கேகூட ஆபத்து வரலாம் என்கி றார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

டீயும் சிகரெட்டும் கெடுதல் தான் என்றாலும் பணி நேரத் தில் அடிக்கடி எழுந்து டீ அடிப் பது, தம் அடிப்பது போன்றவை கூட ஒரு விதத்தில் நல்லதுதான் என்கிறார்கள்.

# மீண்டும் ஷெரோன் ஸ்டோன்



ஹொலிவுட் சினிமா ரசிகர் களின் ஒன்றரை ஆண்டு காலப் பெருந்துயர் நீங்குகிறது.

ஷெரோன் ஸ்டோன் மீண்டும் களத்தில் குதிக்கிறார்.

மூளையில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாகக் கடந்த ஒன்றரை வரு டங்களாக நடிக்காமல் இருந்த ஹொலிவுட் கனவுக் கன்னி ஷெரோன் ஸ்டோன் மீண்டும் நடிப்புலகில் பிரவேசிக்கிறார்.

'பேசிக் இன்ஸ்ட்டிங், 'ட்ரு லைஸ்' என்று ஏகமாய கிளுகிளுப்பூட்டிப் பலரது தூக்கத்தைக் கெடுத்த ஷெரோன் 'கோல்ட் க்ரீக் மெனோர்' என்ற மற்றொரு கிளுகிளுப்ப மூலம் களத்தில் காலடியெடுத்து வைக்கிறார்.

"தொடர்ந்து வில்லியாக நடித்து போரடித்துவிட்டது. அதனால் இந்தப் படத்தில் வில்லனால் துரத்தப்படும் கதாநாயகியாக நடிக்கிறேன்" என்று இந்தப் படத்தில் தான் ஏற்றுள்ள பாத்திரத்தைப் பற்றிக் கூறுகிறார் ஷெரோன் ஸ்டோன். நியுயோர்க் அருகில் வீட்டை வாங்கி செட்டில் ஆகிறது ஒரு ஜோடி. வீட்டை விற்றவர் அதைத் திரும்பிக் கேட்டுத் தொந்தரவு செய்கிறார். அதற்கு அந்த ஜோடி மறுக்க, வீட்டுக்காரர் அவர்களைத் துரத்துகிறார். இது தான் கதை "கதை எதுவாக இருந்தா லென்ன? ஷெரோன் ஸ்டோன் எத்தனை காட்சிகளில் கவர்ச்சியாகத் தோன்றுகிறார்" என்பதுதானே முக் கியம்.

# பெட்ரோல் செட் + மசாஜ் கிளினிக்

தாய்லாந்து அரசுக்கு மட்டும் எங்கிருந்துதான் இப்படியான ஆலோசனைகளெல்லாம் கிடைக்கின்றதோ...!

ஏற்கனவே நிர்வாண பீச், றெட் லைட் ஏரியா என்றெல்லாம் கலக்கிக் கொண்டிருக்கும் தாய் லாந்து இன்னொரு சேவையையும் புதிதாக அறிமுகம் செய்யவிருக் கிறது.

பல ஆசிய நாடுகள் மசாஜ் கிளினிக்குகளைச் சுற்றி வளைத்து சீல் வைத்து முடிவரும் நிலையில் பெட்ரோல் செட்களில் மசாஜ் நிலையங்களைத் திறக்கப் போவ தாகத் தாய்லாந்து அரசு அறி வித்துள்ளது.

நெடுந்தூரம் வாகனம் ஓட்டிச் செல்பவர்களுக்கு அதிக சோர்வு ஏற்படுகிறது. இந்தச் சோர்வின் காரணமாக ஏராளமான விபத் துக்கள் நடக்கின்றன.

பெட்ரோல் நிரப்பும் நிலையங் களில் சாரதிகளுக்கு மசாஜ் செய்ய ஆள் கிடைத்தால் சோர்வு நீங்கி உற்சாகமாக தொடர்ந்து வாகனம் செலுத்தக் கூடியதாக இருக்கும். இந்த அரிய ஆலோசனையைக் கருத்தில் கொண்டு பெட்ரோல் செட்களுக்கு அருகில் மசாஜ் கிளி னிக்குகளை அமைக்கத் தாய் லாந்து அரசு தீர்மானித்துள்ளது.

இந்த மசாஜ் நிலையங்களில் அழகிய இளம் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். பெண் சாரதிகளுக்கு மசாஜ்தேவைப் பட்டால் அதற்கான ஏற்பாடு களைச் செய்யவும் பாங்கொக் அதிகாரிகள் தயாராக உள்ளனர்.

"மசாஜ் ஓவராகி, சோர்வு மயக்கமாக மாறும் நிலைக்குச் சாரதிகள் ஆளாகாமல் இருந்தால் சரி" என்று யாரோ சொல்வது கேட்கிறது.

# நொடிவிருந்து

## புகழ் மிக்க அரசியல் பூனை



ஒரு பூனைக்குக் கிழமையில் 75 ஆயிரம் கடிதங்களும், வாழ்த் துக்களும் வந்து சேர்ந்ததென் றால் நம்ப முடியுமா...?

அமெரிக்காவின் ஆர்கன் ஸாஸ் லிட்டில்ரொக் பகுதியில் வீதியோரத்தில் கிடந்த ஒரு பூனை யைப் பிடித்து வந்து பில் கிளின் டன் தம்பதியினரிடம் கொடுத்து விட்டார் ஒருவர்.

கிளின்டன் அமெரிக்க ஜனாதி பதியானதும் (socks) சொக்ஸ் என்ற இந்தப் பூனை வெள்ளை மாளிகை உறுப்பினராக மாறியது. அது தொடக்கம் சுமார் 8 ஆண்டு காலம் வெள்ளை மாளிகையில் வாழ்ந்த இந்தப் பூனைக்கு வரும் கடிதங்களுக்குப் பதில் அனுப்ப வெனப் பல ஊழியர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர்.

உலகிலேயே மிகவும் பிர பலமான அரசியல் பூனை என்று இந்தப் பூனையைக் கின்னஸ் புத்தகம் வர்ணித்துள்ளது.

## வேற்றுக் கிரகத்திலும் காதலுக்கு மரியாதை இருக்குமா...?

காதலர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு நாட்டிலும் வியாபாரி கள் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு காதலை விற்பனை செய்ய முயற்சிப்பார்கள்.

உக்ரைனில் உள்ள விண்வெளி ஆய்வு நிலையம் ஒன்று வித்தியாச மான முறையில் காதலைக் 'காசாக்க' ஏற்பாடு செய்துள்ளது.

"வேற்றுக் கிரகத்துக்குக் காதல் மேசேஜ் அனுப்பலாம்" என்கிறது உக்ரைன் ஆய்வு நிலையம் ஒன்று. அதுவும் குறைந்த செலவில், நம் நாட்டு மதிப்பில் 1500 ரூபாவுக்குள் செலவிட்டு உங்கள் காதலை வேறு கிரகங்களுக்குச் சொல்லலாம்.

காதலை வைத்து நிதி சேகரிக் கும் நடவடிக்கை இது.

வேற்றுக் கிரகத்துக்குத் தக வல்களை அனுப்பிக் கொண்டிருக் கும் அறிவியல் ஆய்வு நிலையத்தின் நிர்வாகச் செலவுக்கு இத் தொகை பயன் படுத்தப்படவிருக்கிறது. இதை உக்ரைன் நாட்டில் உள்ள அந் நிலையத்தின் தலைவர் அலெக்சாந்தர் ஜைட்சேவ் தெரி வித்தார். பூமி அதன் சுற்றுச் சூழல், அதில் வசிக்கும் மக்கள், இதர ஜீவராசிகள் ஆகியவை பற்றி 70 ஒளி ஆண்டுகளுக்கு அப் பால் இருக்கும் கிரகங்களுக்குத் தொடர்ந்து தகவல்கள் அனுப் பட்டு வருகின்றன. பூமியைப் போலவே மனிதர்களையும் நாகரிக வளர்ச்சியையும் கொண்டுள்ள கிர கம் நிச்சயம் இருக்க வேண்டும். அவர்கள் இந்தத் தகவல்களைப் பெற்றால் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்வதுடன் பதிலுக்குத் தகவல் கள் அனுப்புவார்கள் என்ற நம் பிக்கை விண்வெளி ஆய்வாளர் களுக்கு இருக்கிறது.

ஆகவே அவர்களுக்காக அனுப்பி வரும் தகவல்களில் கடை சியாக இந்தக் காதல் வாழ்த்துச் செய்திகளும் அனுப்பப்படும். அங் கிருந்து பதிலுக்குக் காதல் வாழ்த் துச் செய்தி வந்தால், வேற்றுக் கிரகத்திலும் "காதலுக்கு மரி யாதை" உண்டு என்று புரிந்து கொள்ளலாம்.

# பழைய காதலனுடன் மீண்டும் கை கோர்க்கும் பிரிட்னி



பாடகி பிரிட்னி ஸ்பிஸர் காதல் தோல்வி காரணமாக மன விரக்தியில் தற்கொலை முயற்சி வரை சென்ற தகவல்களை வாசகர்கள் ஏற்கனவே அறிவீர்கள்.

இதுவும் பிரிட்னியின் காதல் பற்றிய செய்திதான். அவரது பழைய காதல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருப்ப தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஜெஸ்டின் டிம்பர்லேக் என்ற இளைஞருடன் பிரிட்னி கொண்டி ருந்த காதல் இடையில் முறிந்து போனது. இதனால் மனமுடைந்த நிலையில் காணப்பட்ட பிரிட்னி பல மாதங்களாக இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருந்ததால், பல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டும் பாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட் டார்.

இப்போது ஜெஸ்டினும் பிரிட்னி யும் மீண்டும் காதலர்களாக இணைந் துள்ளனர் எனச் செய்திகள் வெளி யாகியுள்ளன.

பிரிட்னிக்குச் சொந்தமான மாடி வீடொன்றில் இவர்கள் இருவரும் கைகோர்த்துத் திரிவதைப் பலர் கண்டுள்ளனர்.

ஜஸ்டினுடன் மீண்டும் இணையக் கிடைத்ததையிட்டுப் பிரிட்னி மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளார். ஆனால் முன்பு போல் அதிக அளவு எதிர்பார்ப் புகளை வளர்த்துக்கொள்ள அவர் தயாரில்லை. இம்முறை இருவரும் மிகவும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்கள் என்று பிரிட்னிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.,

தன்னைப் பிரிந்த சோகத்தில் பிரிட்னி பொது இடங்களில் குடித்து விட்டு கவலைக்கிடமாக நடந்து கொள் வதையும் பிரிட்னியின் தொழிலில் அவர் பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டதையும் அறிந்து அவ ருக்கு ஆறுதல் வழங்க ஜெஸ்டின் முன்வந்ததாக அவரது நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளுக்கான காசுக்கட்டளை தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரமும் காசுக்கட்டளை இலக்கமும் தரப்பட்டுள்ளன.

| பெயர் | கா.க. இல. |
|---|---|
| 01. எஸ். கங்காராணி,திருகோணமலை. | 16256076 |
| 02. த. நந்தகுமார், வவுனியா. | 16256077 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 18.02.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-05**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல. - 1772**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழத்துப் போட்டி 05

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | ■ | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | ■ |
| 13 | ■ | 14 | ■ | 15 |
| 16 | ■ | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 |

**இடமிருந்து வலம்**

(1). உலகிலேயே பணக்காரக் கடவுளான வெங்கடாசலபதி வாழும் கோவில்.

(7). இயந்திரம். (திரும்பியுள்ளது)

(9). மணிமேகலையின் தந்தை.

(17). தும்பிலிருந்து கிடைப்பது.

(20). துக்கம். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(1). வெளி நாட்டவரைக் கவரும் எமது இயற்கைத் துறைமுகம்.

(4). கட்டுப்பாடற்ற இனப்பெருக்கத்திற்கு உதாரணம். (குழம்பியுள்ளது)

(5). முடை அல்லது தொகுதி என்று பொருள்படும். (தலைகீழ்)

(11). குழப்பம். (குழம்பியுள்ளது)

(15). வெறுமை. (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல.03க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிஷ்டசாலி.

செல்வி ராணி அரசரத்தினம்,
தபால் கந்தோர் வீதி, மன்னார்.

## பாராட்டுப் பெறும் 10 அதிஷ்டசாலிகள்.

1. க. சாம்பவி, வெள்ளவத்தை, கொழும்பு — 06.
2. எஸ்.எச்.எம். ரஸ்மி, நேரியகுளம், வவுனியா.
3. யு. உதயன், வவுனியா.
4. ஜெ.ஜெயந்தி, அன்புவழிபுரம், திருகோணமலை.
5. எம்.சி. கலீல், கல்முனை — 05.
6. விஜிதா குருபரன், கோவில் புதுக்குளம், வவுனியா.
7. எம்.எப். அஸ்மா, கல்பொக்கை வீதி, வெலிகாமம்.
8. எஸ். கிருபாகரன், ஆரையம்பதி — 01.
9. முனியாண்டி தவராஜன், மடுல் சீமை.
10. ம. குருச்சந்திரன், திருகோணமலை.

## குறுக்கெழத்துப் போட்டி 03 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஓ | 2 ஸ் | 3 லோ | ■ | 4 வி |
| 5 ட் | ■ | 6 உ | 7 ப் | 8 பு |
| 9 ட | 10 க | 11 க | 12 ம் | ■ |
| 13 க | ■ | 14 ம் | 15 க | 16 பா |
| 17 ம் | 18 ஓ | ■ | 19 ப | 20 ரி |
| ■ | 21 லை | 22 மா | ■ | 23 யை |

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

கேட்டேளோ! பேச்சைக் கேட்டேளோ? நம்ம புஷ்ஷோட பேச்சைக் கேட்டேளோன்னுறன்?

அதுதான் ஈராக்குக்கு அடிக்கப் போறன் என்று நம்ம புஷ் அமெரிக்கக் காங்கிரஸில பேசின அந்த வீராவேசப் பேச்சைக் கேட்டுப் புல்லரிக்காத சனம் இருக்குதெண்டால் அது மகா மகா மண்டுக் கூட்டமெண்டும் அதில நான் மட்டும் சேர்த்தியில்லையென்கிறதையும் முன்னாடியே சொல்லிப் போடுறன்.

என்ன பேச்சப்பா அந்தப் பேச்சு! ஒவ்வொரு சொல்லுக்கும் கைதட்டுத்தான். எழும்பி நிண்டெல்லே கைதட்டுறாங்கள் அமெரிக்கப் பாராளுமன்றத்தவங்கள். என்ர பழைய பள்ளிக்கூட ஞாபகந்தான் எனக்கு உடன வந்திது. கைதட்டலெண்டால் பெடியளக் கேட்டுத்தான். தும்மினாலும் தட்டுத்தான்.

உப்பிடித்தான் ஒருநாள் எங்கட வாத்தியாற்ற தாயார் செத்துப்போட்டா. அதை அறிவிக்க பிரேயர் ஹோலில மேடையேறினார் எங்கட ஹெட்மாஸ்டர். ஒவ்வொரு படியிலயும் கால்வைக்க வைக்க, இங்க விழுகுது தட்டு, - அவற்ற நடைக்கேற்ற தாளத்தில. ஏறினவர் அசம்பிளியப் பாத்துச் சொன்னார், "இண்டைக்கு நான் ஒரு துயரச் செய்திய அறிவிக்கப் போறன்..." அதுக்கும் விழுந்துது கைதட்டு.

"எங்கட ஆசிரியர் ஒருவரின் தாயார் மரணமடைந்துவிட்டார்." அதுக்கும் விழுந்துது கைதட்டு.

அவர் திரும்ப உரத்துச் சொன்னார், "வடிவாக் கேளுங்கோ, இது சந்தோஷப் படுற விஷயமில்லை, மரணச் செய்தி, ரீச்சரின்ர தாய் செத்துப் போட்டா.." சொல்லி முடியமுன்னம் திரும்பவும் விண்ணைப் பிளக்குது கைதட்டு.

ஹெட்மாஸ்டருக்கு அங்கால பேச முடியேல்லை. "கெட்ட நாயள்" எண்டுபோட்டு திரும்பப் படியால இறங்கிட்டார். இறங்க இறங்க கைதட்டுத்தான்.

அதே மாதிரித்தான் இந்த அமெரிக்கக் கொங்கிரஸ்காரரும் புஷ்ஷின்ர பேச்சுக்கு மூச்சுக்கு மூச்சு கைதட்டினபடியேதான் இருந்தாங்கள். அடிபுடியெண்டால் அமெரிக்காக்காரருக்கு எவ்வளவு சந்தோஷமெண்டது அப்பதான் தெரிஞ்சுது எனக்கு.

புஷ்ஷின்ர பேச்சவிட அவற்ற முகம் போன போக்குத்தான் வலு களை கட்டிறதா இருந்திச்சு. தச்சமயம் சதாம் ஹுசைனை நேரில கண்டால் கடிச்சே திண்டிடும் மனிசன். அதெண்டால் ஷுவர்!

யார் வருகினமோ விடுகினமோ, தாங்கள் ஈராக்குக்கு அடிச்சே தீருவம் எண்டு நிக்குது மனிஷன். ஈராக் மக்களுக்கும் ஆள் சொல்லுறதக் கேட்டீங்களோ? உங்களுக்கு எதிரி வெளியால இல்லை, உங்கள ஆளுறவைதான் எதிரி. அவையத் தூக்கியெறியத்தான் நாங்கள் வாறம். நாங்கள் வந்து உங்களுக்கு சாப்பாடு தருவம். மருந்து தருவம். அதோட ஜனநாயகத்தையும் தருவம்.

என்னன வீட்டிருக்க வேணும் புஷ்ஷுக்குப் பேச்செழுதிக் குடுக்க. என்ன கலாதியா எழுதியிருப்பன் தெரியுமே.

ஈராக்கான ஈராக்கியர்களே, கூராக்கான கூராக்கியர்களே, அமெரிக்காவான அமெரிக்காவின் ஜனாதிபதியான ஜனாதிபதி பேசுகிறேன், கேட்டுக் கொள்ளுங்கோ,...

உங்கட தலைவரான தலைவரை எனக்கு சுத்தமாப் பிடிக்கேல்லை. உங்களுக்குப் பிடிச்சிருக்கா? அதென்ன மீசை அப்பிடி ஒரு கரிக்கட்டி மாதிரி. என்னைப் பாருங்கோ. மீசையே இல்லை.

அதுசரி உங்க தலைவர் அழிவாயுதங்கள் செய்யிறதா நாங்கள் நம்பிறம். நீங்கள் நம்பேல்லையா? நம்பாவிட்டால் தப்பு. உடன நம்புங்கோ. அப்பதான் உங்களுக்கு ஜனநாயகம் வரும். உலக நாடுகளெல்லாத்தையும் நம்பச்சொல்லி, நம்பாதவைய நம்புவிக்கச் சொல்லி, என்ர கிரிப்பிள்ளை டொனி பிளேயரை அனுப்பி வைச்சிருக்கிறேன்.

எல்லா அரபு நாடுகளிலயும் அரசராட்சிதான் இருக்கு. அங்கயெல்லாம் ஜனநாயகத்தக் கொண்டு வாறதப்பற்றி மூச்சே விடாமல் ஏன் முடியாட்சி இல்லாத ஈராக்கில மட்டும் ஜனநாயகம் பற்றிக் கவலைப் படுறமெண்டு நினைக்கிறியளோ? அந்த ராசாமாரெல்லாரும் எங்கட அமெரிக்க பாங்குகளிலதான் எக்கவுண்டுகள் வைச்சிருக்கினம். அவை ரொம்ப நல்ல ராசாக்கள். எங்கட தலையாட்டி பொம்மைகள் மாதிரி. அமெரிக்கா தட்டி விட்டால் அந்த வளத்துக்கு ஆட்டிக் கொண்டேயிருக்கும் தலையை. கையால பிடிச்சு நிப்பாட்டினால்தான் நிக்கும்.

உங்களுக்கு ஜனநாயகம் கட்டாயம் தேவை பாருங்கோ. நாங்கள் கில்லோக் கணக்கா வைச்சிருக்கிறம். எங்கட கோதம்ப மாவை பிரீயாக் குடுத்து வறிய நாடுகள மடக்கிறமாதிரி, உங்களுக்கு நாங்கள் ஜனநாயகத்தை பிரியாத் தந்திட்டுப் போக ஏலாதுதானே. அதால ஜனநாயகத்தை உங்களுக்குத் தந்திட்டு உங்கட நிலத்துக்குக் கீழ ஓடுற எண்ணை வளத்தை பைப்போட்டு நாங்களே எடுத்துக் கொள்ளுறம். மற்ற அரபு நாடுகளிருக்கக்க உங்களிட்ட வந்து ஏன் எண்ணை தேடுறமெண்டு கேப்பியள். அதுகள் வத்திப் போடும் பாருங்கோ. உங்கட எண்ணை இன்னும் 500 வருஷத்துக்குப் போதுமெண்டு றாங்களே!

அதால நீங்கள் அழிவாயுதங்கள் செய்யிறதா நாங்கள் நம்பித்தான் ஆகவேணும் பாருங்கோ. நம்பினால்தானே எண்ணை கிடைக்கும்?

ஆதலால் என் எண்ணையினும் இனிய ஈராக்கிய மக்களே, நாங்கள் வருவோம் வரவேற்கத் தயாராக இருங்கள்!

ஈராக்கியக் குழந்தைகளே! அனாதை ஆச்சிரமங்களுக்குச் செல்லத் தயாராக இருங்கள்!

ஈராக்கியத் தாய்மாரே! உங்கள் குழந்தைகளைப் பிரியத் தயாராக இருங்கள்!

ஈராக்கிய மனைவியரே! விதவைகளாகத் தயாராக இருங்கள்!

ஈராக்கியக் கணவன்களே! கல்லறைகளுக்குச் செல்லத் தயாராக இருங்கள். ஈராக்கியக் கட்டடங்களே! இடிந்து வீழத் தயாராக இருங்கள்!

ஈராக்கிய ஆறுகளே! இரத்தத்தை ஏந்தத் தயாராக இருங்கள்!

ஈராக்கியக் கடற்கரையே! எண்ணைப் படலத்தில் மூழ்கத் தயாராயிரு!

ஈராக்கிய வானமே! கரும்புகையால் நிரம்பத் தயாராக இரு!

ஈராக்கியக் கொடியே! அமெரிக்கக் கொடியாக மாறத் தயாராக இரு! .

ஓ, உலகமே! கண்களை மூடிக்கொள்!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

09.02.2003 தொடங்கி 15.02.2003 வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

மகரம் - சூரியன், இடபம் - சனி, இராகு, கர்க்கடகம் - வியாழன், விருட்சிகம் - செவ்வாய், கேது, தனு - வெள்ளி. மகரம் - புதன்
சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும், தேகாரோக்கியம் சிறப்புறும், காரியானுகூலம், இனசன நன்மையுண்டு. உத்தியோக மாற்றம், மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்
அதிஸ்ட இல.: 3

**இடபம்:** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் கஷ்டம், அன்னியர் உதவி, பண விரயம், உறவினரால் கவலை, உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி நிலை மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்
அதிஸ்ட இல.: 2

**மிதுனம்:** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மேன்மை, உறவினர் பகை, வீண் விரயம், தூர இடப் பயணம், உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி மந்தம், நிலை பிரிவு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி
அதிஸ்ட இல.: 6

**கர்க்கடகம்:** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம்) முயற்சி பலிதம், ஆடம்பரச் செலவு, குடும்ப மகிழ்ச்சி, கடன்படல், உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் சொற்ப இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்
அதிஸ்ட இல.: 7

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் சிறப்பு, பணவரவு, காரியானுகூலம், பிரயாண மிகுதி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வியாழன்
அதிஸ்ட இல.: 4

**கன்னி:** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) இனசன நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, செலவினம், உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்பு, வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி
அதிஸ்ட இல.: 3

**துலாம்:** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) மன அமைதியின்மை, தூர இடப் பயணம், செலவு மிகுதி,பெரியோர் பகை, உத்தியோக நிலையில் சிக்கல், மேலதிகாரிகள் கெடுபிடி, மாணவர் கல்வியில் மந்தம், விவசாயிகள், வியாபாரிகள், மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்
அதிஸ்ட இல.: 2

**விருட்சிகம்:** (விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை) முயற்சி பலிதம், வெளியிடப் பயணம், உறவினர் உதவி, கௌரவம், உத்தியோக மேன்மை, பாராட்டு, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்
அதிஸ்ட இல.: 5

**தனு:** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் கஷ்டம், செலவு மிகுதி, கடன்படல், குடும்ப நன்மை, உத்தியோகப் பிரச்சினை, வீண் கவலை, மாணவர் கல்வியில் மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்
அதிஸ்ட இல.: 7

**மகரம்:** (உத்தராடத்துப் பின்னரை, திருவோணம் அவிட்டத்து முன்னரை) மனக் குறை நீங்கும், தொழில் விருத்தி, உயர்ந்த நிலை, அன்னியர் உதவி, உத்தியோக நன்மை, பதவி மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி
அதிஸ்ட இல.: 6

**கும்பம்:** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் மேன்மை, முயற்சி பலிதம், பண வரவு, கடன் தொல்லை நீங்கும், உத்தியோக முயற்சி, பதவி நன்மை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்
அதிஸ்ட இல.: 3

**மீனம்:** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி) தொழில் மந்தம், பணவரவு குன்றும், குடும்பத்தில் மனக் குறை, வெளியிடப் பிரயாணம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்,
அதிஸ்ட இல.: 1

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# ஸ்டார் பிஷ்

↓ஸ்டார் பிஷ் என்றழைக்கப்படும் நட்சத்திர மீன் வகைகள் கடல் வாழ் மீனினங்களுள் மிகவும் அழகிய கண்கவர் மீன்களாகும். ஆழ் கடலில் சத்தமான நீர்ப் பரப்பில் மாத்திரமே வாழும் ஸ்டார் பிஷ் ஏராளமான நிறங்களில், பல வகையான அளவுகளில் இருக்கின்றன. சிறிய கடல் வாழ் தாவரங்கள், மீன்கள் போன்றவற்றை உணவாக உட்கொள்ளும் இவை மிக நுண்ணிய சத்தங்களைக் கூட உணரும் ஆற்றல் கொண்டவை. கடலடியில் கிளைவிட்டு வளர்ந்த தாவரங்களுக்கிடையில் ஒரே இடத்தில் பல நாட்கள் பரவிக் கிடக்கும் இந்த மீன்கள் ஏனைய பாரிய மீனிங்களின் தொந்தரவு இல்லாத அமைதியான நேரங்களில் மட்டும் தான் இனப் பெருக்கத்தில் ஈடுபடும். வர்த்தக நோக்கங்களுக்காக ஸ்டார் பிஷ்கள் மேலை நாடுகளில் அதிக அளவு பிடிக்கப்படுவதால் இவை அருகி வருகின்ற மீனினமாகக் கருதப்படுகின்றது.



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331




←டிஸ்னிலாண்ட் பற்றி அறியாத அமெரிக்கர்கள் இருக்கமாட்டார்கள் என்று கூறும் அளவு அமெரிக்காவில் இந்த 'சிறுவர் உலகம்' பிரபலமானது. சிறுவர்களைக் கவரும் அத்தனை விதமான விளையாட்டுக்களும், கேளிக்கைகளுமாக நிரம்பிக்கிடக்கும் இந்தத் தனியான விளையாட்டு உலகத்தைப் பார்வையிட ஆயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் தமது பிள்ளைகள் சகிதம் புளோரிடா செல்கிறார்கள். புளோரிடா மாநிலத்தில் ஓர்லாண்டோ என்ற இடத்தில் அமைந்திருக்கும் வேல்ட் டிஸ்னி தொகுதியில் உலகிலேயே மிகப் பெரிய கடல் வாழ் உயிரினங்களின் காட்சியறையும் அமையப்பெற்றிருக்கிறது.



# ← கானாங் கோழி

இந்தப் படத்திலுள்ளது கானாங் கோழி இனத்தைச் சார்ந்த பறவை. "கண்ணியிலே சிக்காதப்பா கானாங் குருவி" என்று எங்கள் சினிமாப் பாட்டொன்றிலும் வருகிறது. அதில் உண்மையுமில்லாமல் இல்லை.

துரத்திப் பிடிக்க முடியாத அளவு வேகமாக ஓடக் கூடியது இந்தப் பறவை.

## 2வது பிறந்தநாள் வாழ்த்து 03.02.2003



### செல்வப் புதல்வன் அஹிஷன்

நுணாவிலான் தெற்கைச் சேர்ந்த ஜெயக்குமார், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கௌசினி தம்பதிகளின் அன்புச் செல்வன் அஹிஷன் தனது இரண்டாவது பிறந்த நாளை 03.02.2003 அன்று சுவிஸ் [illegible] என்ற இடத்திலுள்ள தனது இல்லத்தில் மிகவும் எளிமையாகக் கொண்டாடினார்.

இவரை சுவிஸிலுள்ள அப்பா, அம்மா, [illegible] அப்பப்பா, அப்பம்மா, மாமா, [illegible] [illegible] வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா, அம்மா திரு. திருமதி ஜெயக்குமார் (சாந்தன்), சுவிஸ். தொ.பே.:- 0041 58 333 8039

# வாழ்த்துப் பூக்கள்

**சகானா 10.01.2003**

**சாதுரியன் 15.01.2003**



அல்வாய் வடக்கு சிவச்செல்வம்-சலஜா (சசி) தம்பதியினரின் தேன் மகள் சகானா தனது பத்தாவது பிறந்த தினத்தையும் இளைய செல்வன் சாதுரியன் தனது முதலாவது பிறந்த தினத்தையும் சகோதரன் சாலயனோடு இணைந்து சுவிஸ் சூரிச்சில் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்

இவர்களுக்காக வாழ்த்துப்பூக்களோடு....

அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, நண்பர்கள், உறவினர்கள்

தகவல்: செ. சிவச்செல்வம்
தொ.பே.: 0041 1 461 93 02 சுவிஸ்



[illegible] 09ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.